Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 புரட்டாதி 21 ஞாயிற்றுக்கிழமை (07-10-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:315

யாழ்.பல்கலைக்கழகத்தின் இருபதாவது பட்டமளிப்பு வைபவம் நேற்றுக் கைலாசபதி கலையரங்கில் ஐந்து அமர்வுகளில் நடைபெற்றது. துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை கோல உடையுடன் மங்கள விளக்கேற்றி வைபவத்தை ஆரம்பித்து வைப்பதை முதல் படத்திலும், அனைத்துப் பீடங்களினதும் பீடாதிபதிகள் மற்றும் பதிவாளர், நிதியாளர், துறைத் தலைவர்கள் ஆகியோர் கோல உடைகளுடன் மேடையில் அமர்ந்திருப்பதை அடுத்துள்ள படத்திலும் காணலாம். (ஐ-7-10)

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு 118 எம்.பிக்களின் ஆதரவுண்டாம்!

அரசுத் தரப்பின் 14பேரும் அடங்குவர்

கொழும்பு,ஒக்.7

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்துக்கு எதிராக ஐ.தே. கட்சி சமர்ப்பித்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு 118 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு இருப்பதாக ஐ.தே. கட்சி வட்டாரங்களை மேற்கோள்காட்டி இணையத் தளம் ஒன்று நேற்று செய்தி வெளியிட்டது.

இவர்களில் 14பேர் பொ.ஐ.முன்னணி அரசைச் சேர்ந்தவர்களாவர்.

பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், எஸ்.பி. திஸநாயக்க, மஹிந்த விஜேசேகர, நந்தமித்திர ஏக்கநாயக்க, டலஸ் அழகப்பெருமா, விஜித்த முனி சொய்ஸா, பந்துல பராக்கிரமகுணவர்த்தன, எச்.விஜயகோன், பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரா, கீர்த்தி மாவ லேஜ், ஆனந்த முனசிங்க மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எம்.பிக்களான ஆர்.யோகராஜன், எம்.சிவலிங்கம், ஆறுமுகம் தொண்டமான் ஆகிய 14 எம்.பிக்களுமே நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ள அரசதரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்று இணையத் தளச் செய்தி தெரிவித்தது.

(16ஆம் பக்கம் பார்க்க)

அரசமைப்புக் கவுன்ஸிலுக்கு

தமிழர் பிரதிநிதியாகத் தெரிவுசெய்ய 3 பிரமுகர்களின் பெயர்கள் சிபாரிசு!

கூட்டணி, ரெலோ, காங்கிரஸ் முடிவு

கொழும்பு,ஒக்ரோபர்7

அரசமைப்புக் கவுன்ஸிலுக்கு இலங்கைத் தமிழர்களின் சார்பில் தெரிவு செய்யப்பட வேண்டிய ஓர் உறுப்பினர் பதவிக்குப் புதிதாக மூன்று பிரமுகர்களின் பெயர்களைத் தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, தமிழ்க் காங்கிரஸ் ஆகிய மூன்று தமிழ்க் கட்சிகளும் சிபாரிசு செய்திருக்கின்றன.

பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி, முன்னாள் அரசாங்க அதிபர் தேவநேசன் நேசையா, முன்னாள் நீதிபதி வீ.சுந்தரலிங்கம் ஆகியோரின் பெயர்களே தற்போது சிபாரிசு செய்யப்பட்டிருக்கின்றன.

மேற்படி மூன்று கட்சிகளினதும் தலைவர்களும் நேற்றுக்கூடி இந்த மூவரில் ஒருவரைத் தெரிவு செய்வதற்குத் தமது இணக்கத்தைத் தெரிவிப்பது எனத் தீர்மானித்தனர்.

ஏற்கனவே இந்த மூன்று கட்சிகளும் சட்டத்தரணி ஆர்.ஈ.தம்பிரத்தினத்தின் பெயரையும் -

ஈ.பி.டி.பி. கலாநிதி குணசிங்கத்தின் பெயரையும் -

ஐ.தே.கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் வவுனியா நீதிபதி எம்.இளஞ்செழியனின் பெயரையும் -

இப்பதவிக்குச் சிபாரிசு செய்திருந்தன.

எனினும் -

(16ஆம் பக்கம் பார்க்க)

உலகத் தமிழர் இயக்க ஏற்பாட்டில்

கேனல் சங்கர் நினைவாக கனடாவில் அஞ்சலி நிகழ்வு

கொழும்பு,ஒக்.7

கடந்த 26 ஆம் திகதி ஒட்டுகட்டானில் கிளைமோர்த் தாக்குதலில் மரணமடைந்த கேணல் சங்கருக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு உலகத் தமிழர் இயக்கத்தின் ஏற்பாட்டில் விரைவில் கனடாவில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு நடைபெறவுள்ள திகதி, இடம் போன்ற விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் -

இந்த அஞ்சலி நிகழ்வில் கனடாவில் உள்ள அனைத்துத் தமிழர்களையும் கலந்துகொள்ளுமாறும் - உலகத் தமிழர் இயக்கம் அறிவித்துள்ளது. (ம-4)

சிப்பாய் காயம்

மட்டக்களப்பு,ஒக்.7

மட்டக்களப்பு வாழைச்சேனையிலுள்ள 233ஆவது பிரிகேட் படைமுகாம்மீது நேற்றுமுன்தினம் இரவு விடுதலைப் புலிகள் மேற்கொண்ட

(16ஆம் பக்கம் பார்க்க)

செவ்வாய் நள்ளிரவுடன் நாடாளுமன்றம் கலைப்பு?

கொழும்பு,ஒக்.7

நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை நள்ளிரவுக்குப் பின்னர் நாடாளுமன்றம் திடீரெனக் கலைக்கப்படலாம் என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

ஐ.தே. கட்சி நாடாளுமன்றில் சமர்பித்திருக்கும் அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நாளை மறுதினம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட வாய்ப்பு உள்ளது.

இவ்விவாதத்தின் முடிவில் நம்பிக்கையில்லாப்பிரேரணை வெற்றி பெறும் சாத்தியம் அதிகமாகக் காணப்படுகின்றது. தனக்கு 118 எம்.பிக்களின் ஆதரவு இருப்பதாக ஐ.தே. கட்சி கூறுகிறது.

(16ஆம் பக்கம் பார்க்க)

சகல தமிழ் எம்.பிக்களும் ஒன்றுகூடியே தம் பிரதிநிதியைத் தெரிதல் வேண்டும்

மகேஸ்வரன் கோருகின்றார்

யாழ்ப்பாணம்,ஒக்.7

அரசமைப்புக் கவுன்ஸிலில் இடம் பெறப்போகும் இலங்கைத் தமிழர்களின் பிரதிநிதி யார் என்பதை கட்சித் தலைவர்கள் மட்டும் கூடித் தீர்மானிக்கக்கூடாது. சகல தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூடிக் கலந்தாலோசனைசெய்து, நல்ல - தகுந்த - ஒருவரைத் தெரிவு செய்யவேண்டும். அதற்குத் தமிழ் எம்.பிக்கள் அனைவரும் முன்வர வேண்டும்.

- இவ்வாறு ஐ.தே.கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் கோரியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

(16ஆம் பக்கம் பார்க்க)

புலிகள் உட்பட 28 அமைப்புகள் மீதான தடையை அமெரிக்கா மேலும் இரண்டு ஆண்டுகள் நீடிப்பு!

கொழும்பு,ஒக்.7

விடுதலைப் புலிகள் இயக்கம் உட்பட 28 வெளிநாட்டுத் தீவிரவாத அமைப்புக்களுக்கு எதிரான தனது தடையை அமெரிக்கா மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடித்திருக்கின்றது.

வெளிநாட்டுத் தீவிரவாத அமைப்புக்களுக்கு எதிராக 1997 ஒக்ரோபர் முதல் விதிக்கப்பட்டிருந்த இரண்டு வருடகாலத் தடை பின்னர் 1999 ஒக்ரோபரில் காலாவதியான சமயம் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டது.

இப்போது, மீண்டும் நாளை அது காலாவதியாக இருக்கையில் நேற்று முதல் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தடைசெய்யப்பட்ட இயக்கங்களின் பட்டியலில் ஹமாஸ், பலஸ்தீனிய இஸ்லாமிய ஜிகாத், கொலம்பியாவின் பார் இயக்கம், பாஸ்கு ஈ.ரி.ஏ. இயக்கம், ஒஸாமா பின்லேடனின் அல்பைதா இயக்கம் ஆகியனவும் அடங்கும்.

இந்தப் பட்டியலில் இருந்து ஜப்பானின் சிவப்பு இராணுவமும், பெருவின் குபாக் அமர் இயக்கமும் நீக்கப்பட்டுள்ளன.

ஆனால் றியல் ஐ.ஆர்.ஏ. மற்றும் கொலம்பிய ஏ.யூ.ஸி. அமைப்பு

(16ஆம் பக்கம் பார்க்க)

ஊர்காவலர் சுட்டு சிப்பாய் பலி!

வவுனியா,ஒக்.7

வவுனியாவில் நேற்று அதிகாலை ஊர்காவலர் ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்.

காவலரண் ஒன்றில் கடமையில் இருந்த ஊர்காவலர், அதிகாலையில் அப்பகுதியில் இனந்தெரியாத நபர் ஒருவரின் நடமாட்டத்தை அவ

(16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

யாழ். பல்கலைக்கழகத்தின் 20 ஆவது பட்டமளிப்பு விழா பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று வைபவ ரீதியாக இடம்பெற்றது. குடை, கொடி மற்றும் ஆலவட்டம் சகிதம் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளையும் மற்றும் பதிவாளர், பீடாதிபதிகள், நிதியாளர், பிரதம நூலகர் ஆகியோர் அரங்கத்துக்கு அழைத்துச் செல்லப்படுவதைப் படத்தில் காணலாம். *(படம்: கொனிகா கலர் லாப்)*

கேளிக்கை நிகழ்வுகள் எதுவுமின்றி

நேற்று ஐந்து அமர்வுகளில் அமைதியாக நடந்த பட்டமளிப்பு

யாழ்ப்பாணம்,ஒக.7

யாழ். பல்கலைக்கழகத்தின் 20 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா நேற்று சம்பிரதாயபூர்வமாகவும் அமைதியாகவும் நடைபெற்றது.

ஐந்து அமர்வுகளாக நடைபெற்ற பட்டமளிப்பின் முதலாவது அமர்வு காலை 9.00 மணியளவில் ஆரம்பமாகியது. பீடாதிபதிகள், துறைத் தலைவர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் உயர்நிலை உத்தியோகத்தர்கள் புடைசூழ துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை குடை, கொடி, ஆலவட்டம் சகிதம் பட்டமளிப்பு இடம்பெறவுள்ள கைலாசபதி அரங்குக்கு அழைத்துவரப்பட்டார்.

தொடர்ந்து மங்கள இசை, மங்கள விளக்கேற்றல் ஆகியன இடம்பெற்றன. அதனை அடுத்து பட்டங்கள் வழங்கப்பட்டன. ஐந்து அமர்வுகளிலும் ஆயிரத்து 528பேர் பல்வேறு பட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.

வழமைபோல் பல்கலைக்கழக வளாகத்துக்குள் அலங்காரங்கள் செய்யப்பட்டிருக்கவில்லை. வியாபார நிலையங்களும் அமைக்கப்படவில்லை.

ஐ.தே.கட்சியின் யாழ். மாவட்ட எம்.பி. தி.மகேஸ்வரன், மதத்தலைவர்கள், பல்கலைக்கழக பேரவை உறுப்பினர்கள், அரச உயர் அதிகாரிகள் எனப் பல்வேறு தரப்பினரும் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டனர். (ம-7-10)

கொழும்பில் நடைபெறும்

'நம்பிக்கையின் விழா'வில் பங்குபற்றும் குடாநாட்டைச் சேர்ந்த 33 பேர்!

கொழும்பில் மூன்று தினங்கள் நடைபெறவுள்ள 'நம்பிக்கையின் விழா' வில் கலந்துகொள்வதற்காக 8 குடும்பங்களைச் சேர்ந்த 33பேர் நேற்றுமுன் தினம் விமானம் மூலம் கொழும்பு போய்ச் சேர்ந்தனர்.

பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான இவ் விழா தொடர்ந்து இன்றும் நடைபெறும்

இவ்விழாவில் இலங்கையின் சகல பாகங்களிலும் இருந்து குடும்பத் தலைவர்களை இழந்த சுமார் இருநூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் கலந்து கொள்கின்றன.

இங்கிருந்து அருட்சகோதரி ஒருவர் தலைமையில் காணாமற்போனோர் சங்கத்தைச் சேர்ந்த 4 குடும்பங்கள் உட்பட 8 குடும்பங்களைச் சேர்ந்த 33 பேரும் புறப்பட்டுச் சென்றனர். அவர்கள் நேற்றுமுன்தினம் மதியம் இரத்மலானை விமான நிலையத்தில் வைத்து மலர்மாலை அணிவித்து வரவேற்கப்பட்டனர்.

தொடரும் போரினால் சாதாரண அப்பாவிப் பொதுமக்களின் கல்வி மற்றும் பொருளாதாரம் போன்றவை பாதிக்கப்படுவதை சர்வதேசத்திற்கு எடுத்துக் காட்டுவதே இவ்விழாவின் பிரதான நோக்கமாகும் என்று 'கியூ டெக' நிறுவன இயக்குநர் அருட்திரு ஜெயக்குமார் அடிகள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கலந்துகொள்வோருக்கு பல்வேறு நிறுவனங்களும் பெறுமதிமிக்க அன்பளிப்புக்களை வழங்கி கௌரவிக்கவுள்ளன. (க-9-ரி)

வாழ்த்தும் இறைஆசியும்

2001 - 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் எமது பாடசாலையில் சிறந்த பெறுபேறு பெற்றவரான

செல்வன் ரவீந்திரன் ஜெகதீபன்

அவர்களைப் பாராட்டுவதுடன் அவர் மேலும் பல்கலையும் பெற இறைஆசியை வேண்டி நிற்கிறோம்.

யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம், அல்லைப்பிட்டி. (93071)

அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர் சங்கம்.

ஸ்ரீ வல்லிபுரா போட்டோ

★ 08.10.2001 அன்று படச் சுருள்களும் வீடியோ கசற்றுகளும் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படும்.

★ கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வீடியோ கசற் எடுத்து வர ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கலாம்.

UTHAYAN VIDEO
7, 7/4, Ground Floor,
Orchard Building, Galle Road,
Wellawatha,
Colombo - 06

நல்லூர் 021-2604 புலோலி 070-212720

(C/18575)

வாடிக்கையாளர் கவனத்துக்கு!

நேற்றைய தினம் யாழ். பல்கலைக்கழக முன்றலில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட எமது ஸ்ரூடியோவில் எடுக்கப்பட்ட புகைப்படங்களை இன்று (07.10.2001) வழங்குவதற்காக 198/5, நாவலர் வீதியில் அமைந்துள்ள எமது ஸ்ரூடியோ முழுமையாகத் திறந்திருக்கும் என்பதை அறியத்தருகின்றோம்.

சுப்பஸோ வீடியோ ஸ்டியோ அன்ட் கலர் லாப்

198/5, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(C/18573)

இடம்மாற்றம்

குருநகர்,ஒக.7

வேம்படி மகளிர் கல்லூரியில் இயங்கிவந்த யாழ்பிராந்திய ஆங்கில ஆதார நிலையம் யாழ். கல்வி வலயத்துக்கு நேற்றுமுன்தினம் இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

வேம்படி மகளிர் கல்லூரியில் இருந்த இந்த நிலையத்துக்குச் சொந்தமான தளபாடங்கள் மற்றும் ஆவணங்களும் லொறிமூலம் யாழ். கல்வி வலயத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளன. (ம-51)

உதைபந்தாட்ட இறுதியாட்டம்

வலிகாமம் வலய சங்கானைக் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளிடையேயான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள இறுதி ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

14 வயதுப் பிரிவு

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி எதிர் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி.

16 வயதுப் பிரிவு

வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி எதிர் மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை.

18 வயதுப் பிரிவு

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி எதிர் மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை. (ம-86)

தமிழகப் பேரறிஞர்

சேக்கிழார் அடிப்பொடி

அவர்களின்

சிறப்புச் சொற்பொழிவு

இடம் : நல்லூர் சிவன்கோயில் மண்டபம்
காலம் : இன்று (07.10.2001) ஞாயிறு மாலை 4.30 மணி

தலைவர் : பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
(உபவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

அறிமுகவுரை : பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர்
(தலைவர், இந்து நாகரிகத் துறை - யாழ். பல்கலைக்கழகம்)

சிறப்புச் சொற்பொழிவு

விடயம் : "அரும்பெரும் சோதி"
வழங்குபவர் : சேக்கிழார் அடிப்பொடி தில்லைஸ்தானம் கலாநிதி நடராஜன் இராமச்சந்திரன்
(உயர் நீதிமன்ற நியாயவாதி)

நன்றியுரை : பிரம்மஸ்ரீ கிருஷ்ண ஐயர்
(விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)

சிவன்கோயில் தேவஸ்தானம்,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(C/18571)

பாராட்டி வாழ்த்துகிறோம்

2001இல் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் தான் கற்ற பாடசாலையிலும், இருபாலை எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்டிலும் அதியுயர் புள்ளியை (170) பெற்று மாவட்டத்தில் 3ம் இடத்தைப்பெற்று சாதனை படைத்த அரியாலையைச் சேர்ந்த

செல்வி நாகேந்திரன் கீர்த்தனா

மற்றும் 118 புள்ளிகளுக்குமேல் பெற்று சித்தியடைந்த எமது கல்வி நிறுவனத்தின் ஏனைய மாணவர்களையும் பாராட்டுவதில் பெருமகிழ்வுறுகின்றோம்.

– கல்வி நிறுவன சமூகத்தினர்.

The Express Institute
Irupalai, Kopay.

மரண அறிவித்தல்கள்

திருமதி இராசாத்தி மார்க்கண்டு

கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராசாத்தி மார்க்கண்டு நேற்று (06.10.2001) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னக்குட்டி மார்க்கண்டுவின் அன்பு மனைவியும், செல்வராசா, திருமதி ச.சந்திராதேவி (லண்டன்), திருமதி இ.லலிதாதேவி, மா.இந்திரராசா (ஜேர்மனி), மா.புவனேசராசா (சுவிஸ்), கலாதேவி, தங்கராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி செ.ஜெயந்தி, உ.சத்தியசீலன் (லண்டன்), இ.இரவீந்திரநாதன், திருமதி இ.ஜெயமணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும், கிரிஷாந்த், கஜன், தர்ஷிகா, ஹரிகரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (7.10.2001) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பழைய பொலீஸ் நிலைய ஒழுங்கை,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

தகவல்:
சி.மார்க்கண்டு
(கணவர்)

(93129)

பிரம்மஸ்ரீ அனந்தசுப்பிரமணியசர்மா கணேசசர்மா

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும்கொண்ட பட்டயக்கணக்காளரும், மிருதங்க வித்துவானுமான பிரம்மஸ்ரீ அ.கணேசசர்மா நேற்று (06.10.2001) சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் ஸ்ரீமதி வடிவாம்பிகையின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான ஸ்ரீ.ஸ்ரீமதி அனந்தசுப்பிரமணியசர்மா - மங்களாம்பிகை தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும், ஆனந்தசுப்பிரமணியன் (அபுதாபி), அன்னபூரணி (ஆஸ்திரேலியா), ராகவன் (ஆஸ்திரேலியா), கலாநிதிநாதன் (பட்டயக் கணக்காளர், A.G.Sarma & co., கொழும்பு), லக்ஷ்மீநாராயணன் (அபுதாபி) ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரம்மஸ்ரீ அ. நாகராஜசர்மா (ஆயுர்வேத வைத்தியர், வட்டுக்கோட்டை), காலஞ்சென்றவர்களான அ.கண்ணலிங்கசர்மா, அ. இராமச்சந்திரசர்மா மற்றும் ஸ்ரீமதி வரலாம்பிகை (திருச்சி), ஸ்ரீமதி மங்களராஜேஸ்வரி (டென்மார்க்), ஸ்ரீமதி சரோஜா (நல்லூர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், உமா, கண்ணன், காத்யாயினி, வசுந்தரா, வரலக்ஷ்மி ஆகியோரின் அன்பு மாமனாரும், ராம், ரமா, அபிராமி, அரவிந்தன், நாராயணன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10.10.2001 புதன்கிழமை 6, ஹல்கஸ் வத்தலேன், கொழும்பு - 6 எனும் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வட்டு.மேற்கு,
வட்டுக்கோட்டை.
6, Hulguswatha Road, Colombo-6.
T.P. No. 01-811721.

தகவல்:
அ.நாகராஜ சர்மா
(சகோதரர்)

(93131)

பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு அதனையே பின்பற்றக்கூடாது

இந்தியப் பிரதமர் வாஜ்பாய் வலியுறுத்தல்

புதுடில்லி,ஒக்.7

பயங்கரவாதத்துக்கு எதிரான உலகளாவிய நடவடிக்கை என்ற பெயரில் எந்தவொரு நாடும் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுவதை சர்வதேச சமுதாயம் அனுமதிக்கக்கூடாது என்று இந்தியப் பிரதமர் வாஜ்பாய் வலியுறுத்தியுள்ளார்.

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயரிடம் பிரதமர் வாஜ்பாய் இதனை உறுதிபடத் தெரிவித்தார்.

தற்போதைய பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கை என்ற போர்வையில் நாடுகள் அதேபோன்ற பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடக்கூடாது என்று வாஜ்பாய் கூறினார்.

பாகிஸ்தானையே வாஜ்பாய் மறைமுகமாகக் குறிப்பிடுவதாக இந்தியச் செய்தி ஊடகங்கள் தெரிவித்துள்ளன. ஆயினும், பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கையை ஆப்கானிஸ்தானின் ஆளும் தலிபான்கள் மீது நடத்த உத்தேசித்துள்ள அமெரிக்காவையும் பிரதமர் வாஜ்பாயின் கருத்து சுட்டிக்காட்டுவதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

தீவிரவாத அச்சுறுத்தல்களுக்கு எதிராக இந்தியா விழிப்புடன் எதிர்க்குமென்றும் - பயங்கரவாதத்தை அனைத்து விதங்களிலும் ஒழிக்க கூட்டுமுயற்சி வேண்டும் என்றும் - பிரதமர் வாஜ்பாய் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, ஆப்கானிஸ்தானின் மீதான தாக்குதலின் நோக்கம் அப்பாவி மக்களை வதைப்பதில்லை என்றும், ஆனால், அமெரிக்கா மீதான தாக்குதலுக்கு காரணமானவர்களை தண்டிப்பதேயாகும் என்றும் - பிரிட்டிஷ் பிரதமர் கூறியுள்ளார். (ஒ-7)

ஜப்பானியத் தலைநகர் டோக்கியோவில் நடந்த சர்வதேச அழகுராணிப் போட்டியில் சிறந்த அழகியாக முடிசூடிக் கொண்ட போலந்து அழகி மல்கோர்ஸடா ரொஸ்னிகா வெனிசூலா (இடது), ரஷ்யா (வலது) ஆகிய நாடுகளின் அழகிகளுக்கு மத்தியில்.

பென்டகன் மீதான தாக்குதலில் பின்லேடன் கூட்டாளி சம்பந்தம்

ஆதாரம் கிடைத்துள்ளதாம்

லண்டன்,ஒக்.7

கடந்த மாதம் அமெரிக்காவின் பென்டகன் கட்டடத்தின் மீது நிகழ்த்தப்பட்ட விமானத் தற்கொலைத் தாக்குதலில் ஈடுபட்டதாகச் சந்தேகிக்கப்படுபவர்களில் ஒருவர், ஒஸாமா பின்லேடனால் திட்டமிடப்பட்டதாகக் கூறப்படும் முந்தைய இரு தாக்குதல்களில் சம்பந்தப்பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

கடந்த வருடம் யேமன் நாட்டில் அமெரிக்கக் கடற்படைக் கப்பல் மீதும், 1998ஆம் ஆண்டு, ஆபிரிக்காவில் இரு அமெரிக்கத் தூதரகங்கள் மீதும் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களில் காலித் அல்மிதார் என்பவர் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் -

இவர் பென்டகன் தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட விமானத்தைக் கடத்தியவர்களில் ஒருவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் -

பிரிட்டிஷ் உளவுத்துறைத் தகவல்களை மேற்கோள் காட்டி பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமெரிக்கா மேற்கொள்ளும்

எந்தவொரு பதில் தாக்குதலுக்கும் நேட்டோ முழு ஆதரவளிக்கும்

கடந்த மாதம் நியூயோர்க்கில் உலக வர்த்தக மையக் கட்டடத்தின் மீதும் பென்டகன் மீதும் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலுக்குப் பதிலடியாக அமெரிக்கா மேற்கொள்ளும் எந்தவொரு தாக்குதலுக்கும் நேட்டோ ஒப்புதல் வழங்கியுள்ளது.

★ அமெரிக்கா மற்றும் நேட்டோ நாடுகளின் இராணுவ நிலைகளைத் தீவிரவாதத் தாக்குதலில் இருந்து காப்பது.

★ நேட்டோ நாடுகளின் வான் பரப்பு, துறைமுகங்கள், விமான நிலையங்கள் என்பனவற்றை அமெரிக்கா பயன்படுத்த அனுமதித்தல்.

★ உளவு சாதனங்கள் மற்றும் தகவல் பரிமாற்றங்கள்.

★ பால்கன் தீவுகளில் இருந்து அமெரிக்கா வெளியேறினால் அதற்கான மாற்றுப் படைகள்.

★ 17 உளவு விமானங்களை அமெரிக்காவுக்காகச் சேவையில் அமர்த்துதல்.

- ஆகியன உட்பட இன்னும் பல விடயங்களில் அமெரிக்க நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதென நேட்டோ முடிவு செய்துள்ளது. (ம)

இஸ்லாமிய நாடுகளின் நெருக்கத்தால்

இஸ்ரேல்-அமெரிக்க உறவில் தோன்றியுள்ள இழுபறி நிலை

டெல்அவிவ்,ஒக்.7

மத்தியகிழக்கு நாடுகளைச் சமாதானப்படுத்தும் அமெரிக்காவின் நடவடிக்கைகள் இஸ்ரேலுக்கு கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இதனால் அமெரிக்க - இஸ்ரேலிய உறவில் இழுபறிநிலை தோன்றியுள்ளது.

ஆப்கானிஸ்தானுக்கு எதிராக பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கையை மேற்கொள்ளும் தனது திட்டத்துக்கு மத்தியகிழக்கு இஸ்லாமிய நாடுகளின் ஆதரவைப் பெற அமெரிக்கா கடும் பிரயத்தனம் எடுத்துவருகிறது. இதில் ஒருபகுதியாக சவூதிஅரேபியா, எகிப்து உட்பட இஸ்லாமிய நாடுகளுக்கு அமெரிக்கா பாதுகாப்புச் செயலர் டேவிட் ட்றம்ஸ்பீல்ட் விஜயம் மேற்கொண்டார். இதனைப்படுத்து மத்திய கிழக்கு நாடுகளைக் சமாதானப்படுத்தும் முயற்சிகளில் அமெரிக்கா ஈடுபடக்கூடாது என்று இஸ்ரேல் எச்சரித்ததையடுத்து இரு நாடுகளின் உறவில் முறுகல்நிலை தோன்றியுள்ளது.

இதற்கிடையில், பயங்கரவாதத்துக்கு எதிராக உலகளாவிய ரீதியில் போர் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஐரோப்பிய நாடுகளின் ஆதரவை அமெரிக்க அதிபர் நாடுவதையும், இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன், 1982இல் நிகழ்ந்த நாஜி நடவடிக்கையுடன் ஒப்பிட்டு விமர்சித்துள்ளார்.

இதற்குப் பதிலடியாக ஏரியல் ஷெரோன் மீது நேரடியாக அமெரிக்கா கண்டனம் வெளியிட்டுள்ளது. இதுவும் முறுகல்நிலைக்குக் காரணமாகி உள்ளது. (ஒ-7)

அமெரிக்காவை ஆதரிப்பதில் வடக்குக் கூட்டணி பின்னடிப்பு

தெஹ்ரான்,ஒக்.7

ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா நடத்த உத்தேசித்துள்ள தாக்குதலுக்கு ஐ.நா. தலைமை தாங்கினால் மட்டுமே அதனைத் தாம் ஆதரிக்கப்போவதாக தலிபான்களை எதிர்த்துப் போராடிவரும் வடக்குக் கூட்டணி அறிவித்தது.

வடக்குக் கூட்டணியின் முன்னணிப் பேச்சாளர் அப்துல்லாஹ் ஈரான் வானொலிக்கு வழங்கிய பேட்டியிலேயே இதனைத் தெரிவித்தார்.

ஐநாவின் ஆதரவின்றி ஆப்கானை அமெரிக்கா தாக்கினால், ஆப்கான் மக்களின் அதிருப்தியை சந்திக்க நேரிடும் என்றும் -

இதனால் அமெரிக்காவை ஆக்கிரமிப்பாளராகக் கருதி அவர்கள் போராடுவார்கள் என்றும் - அப்துல்லாஹ் மேலும் கூறினார்.

தலிபான்களை எதிர்க்கும் வடக்குக் கூட்டணி 15 ஆயிரம் வீரர்கள் வரை உள்ளனர். தலிபான்களுக்கு எதிரான தாக்குதலில் அமெரிக்காவுக்கு உதவுவதாக வடக்குக் கூட்டணி முன்னர் தெரிவித்திருந்தது. (ஒ)

தலிபான் எதிர்ப்புக் கூட்டணிக்கு ரஷ்யா 3கோடி டொலர் ஆயுத உதவி

மொஸ்கோ,ஒக்.7

ஆப்கானிஸ்தானில் தலிபான் படையினருக்கு எதிராகப் போரிட்டு வரும் வடக்குக் கூட்டணிக்கு ரஷ்யா மூன்று கோடி டொலர் முதல் நான்கரைக் கோடி டொலர் பெறுமதியான ஆயுதங்களை வழங்கவுள்ளது.

இதன் முதற்றொகுதி இன்னும் சில நாள்களில் வடக்குக் கூட்டணியின் இராணுவத் தளபதியிடம் வழங்கப்பட்டுவிடும் என்றும் -

அவற்றை வழங்குவதில் தடங்கல்கள் ஏதாவது ஏற்பட்டால் அவை எப்படியும் அடுத்த மாத முற்பகுதியில் வழங்கப்பட்டுவிடும் என்றும் -

மொஸ்கோவில் கிரெம்ளின் வட்டாரங்கள் தெரிவித்தன.

அமெரிக்க நகரங்கள் மீதான தற்கொலைத் தாக்குதல்களை அடுத்து ஆப்கானிஸ்தானில் ஆட்சியில் இருக்கும் தலிபான்களை அகற்றும் திட்டத்தின் ஒரு பகுதியாக தலிபான்களை எதிர்த்துப் போராடும் வடக்குக் கூட்டணிக்கு ஆயுத உதவி செய்ய ரஷ்யாவும், ஈரானும் உறுதி அளித்திருந்தன.

அதன் ஒரு பகுதியாகவே மேற்படி ஆயுதக் கையளிப்பு இடம்பெறும் என்று கிரெம்ளின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை -

ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் பகுதிகளுக்கு அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் விசேட கொமாண்டோப் படையினர் ஏற்கனவே ஊடுருவிச் செயற்பட்டு வருகின்றனர் என்று ஆப்கானிஸ்தானின் முன்னாள் அதிபர் ரபானி தகவல் வெளியிட்டுள்ளார்.

ரஷ்யப் பயணிகள் விமானம் வீழ்ந்ததற்கு உக்ரேன் ஏவுகணைத் தாக்குதல் காரணம்

அமெரிக்க அதிகாரி தகவல்

மொஸ்கோ,ஒக்.7

ரஷ்ய பயணிகள் விமானம் ஒன்று நேற்றுமுன்தினம் கருங்கடலின் மேலாகப் பறந்துகொண்டிருந்த சமயம் நடுவானில் வெடித்துச் சிதறியதற்கு உக்ரேன் படைகளின் ஏவுகணைத் தாக்குதல் காரணமாக இருக்கலாம்.

- அமெரிக்க வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் இவ்வாறு தெரிவித்தார்.

இஸ்ரேலியத் தலைநகர் டெல் அவிவிலிருந்து சைபிரஸை நோக்கி 56 பயணிகள் மற்றும் 20 விமானப் பணியாளர்கள் சகிதம் பறந்துகொண்டிருந்த ரியூ-154 ரக பயணிகள் விமானம் திடீரென நடுவானில் வெடித்துச் சிதறியது. அதில் பயணம்செய்த அனைவரும் பலியாகினர்.

விபத்துக்கான உண்மையான காரணங்கள் எதுவும் உடனடியாகத் தெரியவரவில்லை. எனினும் விமானம் வெடித்துச் சிதறிய சமயம் கருங்கடல் பகுதியில் உக்ரேன் படைகள் ஏவுகணைத் தாக்குதல் பயிற்சியில் ஈடுபட்டிருந்தன என்றும்-

இந்த ஏவுகணைகளில் ஒன்றே தவறுதலாக விமானத்தைத் தாக்கி இருக்கலாம் என்றும் -

வெள்ளை மாளிகை அதிகாரி மேலும் சொன்னார்.

தனது படைகள் கருங்கடலில் ஏவுகணைச் சோதனையில் ஈடுபட்டதை ஒப்புக்கொண்ட உக்ரேன், தனது ஏவுகணைகளில் ஒன்றே விமானத்தைத் தாக்கியது என்பதை கடுமையாக மறுத்துள்ளது.

இதேவேளை -

விமானம் நடுவானில் வெடித்துச் சிதறியதற்குத் தீவிரவாதிகளே காரணம் என்று இஸ்ரேலும் ரஷ்யாவும் குற்றஞ்சாட்டியுள்ளன.

"இந்த விபத்துக்குத் தீவிரவாதிகளே காரணம். ஆனால் இந்த விடயத்தைப் பெரிதுபடுத்தாதீர்கள்" - என்று ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் பத்திரிகையாளர்களிடம் பேசும் போது தெரிவித்தார். (ம)

தலிபான்களைத் தாக்குவதற்கு அமெரிக்காவுக்கு அனுமதியில்லை

உஸ்பெகிஸ்தான் குத்துக்கரணம்

லண்டன்,ஒக்.7

தலிபான்கள் மீது அமெரிக்கப் படைகள் தாக்குதல் நடத்த அனுமதிப்பதில்லை என்று உஸ்பெகிஸ்தான் தீர்மானித்துள்ளது.

ஆப்கானிஸ்தானின் வடபுற நாடான உஸ்பெகிஸ்தான், தலிபான்கள் மற்றும் பின்லேடன் மீது இராணுவ நடவடிக்கை மேற்கொள்ள அமெரிக்காவுக்கு தளங்களைத் திறந்துவிடுவது உட்பட முழு ஒத்துழைப்பும் தரத் தீர்மானித்திருப்பதாக செய்திகள் வெளியாகின.

இந்நிலையில் சுமார் ஆயிரம் அமெரிக்கப் படையினர் உஸ்பெகிஸ்தானில் நேற்றுமுன்தினம் தரையிறங்கினர். இதனையடுத்தே தனது முடிவை உஸ்பெகிஸ்தான் திடீரென்று மாற்றிக்கொண்டுள்ளது.

உஸ்பெகிஸ்தானில் தரையிறங்கியுள்ள அமெரிக்கப் படையினர், மனிதாபிமான மற்றும் மீட்புப் பணிகளில் மட்டும் ஈடுபடலாம் எனவும் - தலிபான் ஆட்சியாளர்கள் மீது தாக்குதல் நடத்த அவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் உஸ்பெகிஸ்தான் அரசு அறிவித்துள்ளது.(ஒ-7)

தலிபான்கள் நிபந்தனை

காபுல்,ஒக்.7

ஆப்கானிஸ்தான் மீதான இராணுவ நடவடிக்கை குறித்த அச்சுறுத்தலை அமெரிக்கா விலக்கிக் கொண்டால், ஆப்கானிஸ்தானில் கிறிஸ்தவமதத்தைப் போதித்த குற்றஞ்சாட்டின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 8 வெளிநாட்டவரையும் விடுதலை செய்வதாக தலிபான்கள் நிபந்தனை விதித்துள்ளனர்.

கடந்த வாரம் சட்ட விரோதமாக ஆப்கானிஸ்தானுக்குள் நுழைந்ததாகக் கூறி கைது செய்யப்பட்ட பிரிட்டிஷ் பெண் ஊடகவியலாளரையும் விடுவிப்பதாக தலிபான் கூறியது.(ஒ)

இணைப்பாளர் நியமனம்

ஜெனிவா,ஒக்.7

ஐ.நா.சபைக்கு ஆப்கானிஸ்தான் மீது அக்கறை உள்ளதை உறுதிப்படுத்தும் விதமாக ஆப்கானிஸ்தானுக்கான அரசியல் விவகார இணைப்பாளர் ஒருவரை ஐ.நா. நியமித்துள்ளது. (ஒ)

யாழ். - தென்னிலங்கைப் பயணத்துக்கான

பாதுகாப்பு அனுமதி முறையை உடன் நீக்கக் கோரிக்கை

கொழும்பு, ஒக். 7

யாழ்ப்பாணத்துக்கும் — தென்னிலங்கைக்கும் இடையிலான மக்கள் போக்குவரத்துக்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி தேவையில்லை என்ற ஜனாதிபதியின் அறிவிப்பு உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

இவ்வாறு கோரிக்கை விடுத்திருக்கின்றார் 'சிற்றி ஒவ்றிங்கோ' பயணிகள் கப்பலின் திருகோணமலை முகவர் கே. ஜெயபாலசிங்கம்.

இதுகுறித்து அவர் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் சிறிபதிசூரிய ஆராச்சிக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

திருகோணமலைக்கும் — காங்கேசன்துறைக்குமான கப்பல் பயணத்திற்கும், கொழும்பிற்கும் யாழ்ப்பாணத்திற்குமான விமானப் பயணத்திற்கும் இனிமேல் பாதுகாப்பு அமைச்சின் அனுமதிப் பத்திரம் தேவையில்லையென ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரானந்த டி சில்வாவிற்கு உத்தரவு பிறப்பித்து இரு வாரங்களாகி விட்டது. ஆனால் இந்த நடைமுறை இதுவரை பின்பற்றப்படவில்லை.

ஜனாதிபதியின் இந்த அறிவிப்பை அடுத்து பாதுகாப்பு அமைச்சின் அனுமதிகோரி புதிதாக விண்ணப்பித்திருப்பவர்கள் திரிசங்கு நிலையில் உள்ளனர்.

ஆகவே பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறுவதில் பொதுமக்கள் பல கஷ்டத்திற்குள்ளாகி வருவதால் — மக்களின் கஷ்டங்களைப் போக்கி அவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டுமானால் ஜனாதிபதியின் உத்தரவு உடனடியாக நடைமுறைக்கு கொண்டு வரப்பட வேண்டும் — என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை —

மேற்படி கடிதத்தின் பிரதிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அத்தியாவசியசேவைகள் உதவி ஆணையாளர் நாயகம் கே. இராசநாயகம், ''றான்'' தலைவர் என். வாமதேவா ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஐ-7)

மருதானை சோதனைச் சாவடி

தமிழ்ப் பெண் மீதான வல்லுறவு: சந்தேகநபருக்கு பிணை அனுமதி

கொழும்பு, ஒக். 7

மருதானை சோதனைச் சாவடியில் வைத்துத் தமிழ்ப் பெண் ஒருவர் மீது பாலியல் வல்லுறவு மேற்கொண்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள ஆறு பேரில் முதலாவது சந்தேகநபரான பொலீஸ் கான்ஸ்டபிள் கமல் பிரியந்த பிரேமதிலகவை 10 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும், 1 லட்சம் ரூபா இரு ஆள்பிணையிலும் செல்ல மாளிகாவத்தை நீதிவான் சரோஜினி குசலவீரவர்த்தனா அனுமதி வழங்கியுள்ளார்.

ஏற்கனவே 5 சந்தேகநபர்களும் நீதிமன்றத்தால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பொலீஸ் கான்ஸ்டபிள்களான கே. பி. பிரேமதிலக, பி. எஸ். நாணயக்கார, ஜெயசிறி குமார், இராணுவவீரர்களான எஸ். பி. சேனநாயக்க, ஏ. வசந்தகுமார, ஜீ. ஏ. ஆர். உப்புல் ஆகியோர் மீது இச் சம்பவம் தொடர்பாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

மேல் விசாரணையை ஒக்ரோபர் 12 ஆம் திகதிக்கு ஒத்திவைத்த நீதிவான் இவ்வழக்குத் தொடர்பாகச் சட்டமா அதிபருடன் ஆலோசித்து மேலதிக அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும்படியும் பொலீஸாருக்கு உத்தரவிட்டார். (க)

வல்வெட்டித்துறை மானாங்கணையில்

ஒரு வாரத்தில் 3 பெண்களின் சங்கிலிகள், தாலி அபகரிப்பு!

பட்டப்பகல் வேளையில் சம்பவங்கள்

நெல்லியடி, ஒக். 7

வல்வெட்டித்துறை மானாங்கணைப் பகுதியில் பட்டப்பகல் வேளைகளில் வீதியில் செல்லும் பெண்களிடம் இருந்து நகைகள் அறுக்கப்படும் சம்பவங்கள் தொடர் நிகழ்ச்சிகளாகிவிட்டன.

கடந்த ஒரு வாரகால இடைவெளியில் இப் பகுதியில் மூன்று பெண்களின் சங்கிலிகள், தாலி அறுத்தெடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை இங்குள்ள பாடசாலைக்குச் சென்று திரும்பிய மாணவி ஒருவரை வழிமறித்த திருடர்கள் அவரின் காதிலிருந்த தோடுகளைக் கழற்றி எடுக்க முற்பட்ட சமயம் அந்த மாணவியின் வலது காது அறுந்து காயமடைந்துள்ளார்.

பட்டப்பகலில் இவ்வித துணிகரக் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெறுவதனால் ஊர்மக்கள் பீதி அடைந்துள்ளனர்.

சிறுமி உட்பட நால்வர் பிடிபட்டனர்

இதேவேளை —

அடிக்கடி திருட்டுக்கள் இடம்பெற்றுவரும் புலோலி மாதனைப் பகுதியில் நள்ளிரவு வேளை நடமாடிய சிறுமி ஒருவர் உட்பட நால்வர் சந்தேகத்தின் பேரில் அப்பகுதி மக்களால் பிடிக்கப்பட்டு பருத்தித்துறைப் பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவு 1.30 மணியளவில் இடம்பெற்றது

இந்த நால்வரும் மோட்டார் சைக்கிளில் இப் பகுதியில் நடமாடியபோது அயலவர்களினால் பிடிக்கப்பட்டனர்.

இவர்களிடமிருந்து நைலோன் கயிறு, பழைய சிலைத் துண்டுகள் போன்றவைகளும் மீட்கப்பட்டுள்ளன.

(க-109)

பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 7

யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் ஒன்று திருநெல்வேலியிலுள்ள பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண கூட்டுறவு அலுவலக தலைமைக்காரியாலய பரிசோதகர் நா. தவநாதன் தலைமையில் கூட்டம் நடைபெறும். (க-ரி)

மலையகப் பெண்மணிக்கு ஒரே சூலில் 3 ஆண் குழந்தைகள்!

நாவலப்பிட்டி வைத்தியசாலையில் பெண் ஒருவர் ஒரே சூலில் மூன்று ஆண் குழந்தைகளைப் பிரசவித்துள்ளார்.

இதுபோன்ற அதிசய பிரசவம் ஒன்று இவ் வைத்தியசாலையில் சுமார் 22 வருடங்களுக்கு முன்னரும் நிகழ்ந்துள்ளதாக வைத்தியசாலை பதிவேடுகள் தெரிவிக்கின்றன.

பொகவந்தலாவ தெரேஸா தோட்டத்தைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளியான பானுமதி (வயது 30) என்ற பெண்ணே இவ்வாறு மூன்று ஆண் குழந்தைகளைப் பிரசவித்துள்ளார்.

குழந்தைகளும் தாயும் நலமாக இருக்கின்றனர், என்று மருத்துவக்குழுவினர் தெரிவித்தனர். (க)

ஆயுர்வேத மருத்துவர்கள் கௌரவிப்பு

தென்மராட்சி, ஒக். 7

தென்மராட்சி பிரதேசத்தில் கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக ஆயுர்வேத மருத்துவர்களாகப் பணியாற்றி வரும் டாக்டர் வ. சின்னப்பு, டாக்டர் பெ. பிலிப்ஸ் ஆகியோர் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினால் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

அண்மையில் பிரதேச செயலகத்தினால் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடத்தப்பட்ட முதியோர் தின விழாவில் இவ்விரு வைத்தியர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் கலந்துகொண்ட முதியோருக்கு விசேட முதியோர் அடையாள அட்டைகளும் வழங்கப்பட்டன. (க-117)

ஆனைக்கோட்டையில் சிறுவர் பராமரிப்பு நிலையம்

இந்துப் பேரவையினர் நிறுவுவர்

யாழ்ப்பாணம், ஒக். 7

வடபிராந்திய இந்துப் பேரவையினர் சிறுவர், சிறுமியர்களுக்கான பராமரிப்பு நிலையம் ஒன்றை ஆனைக்கோட்டையில் நிறுவவுள்ளனர்.

தாய் அல்லது தந்தையரை இழந்த, தாய் அல்லது தந்தை ஊனமுற்ற குடும்பங்களைச் சேர்ந்த (உழைப்புத் திறன் இழந்த) சிறுவர், சிறுமியர்கள் இந்தப் பராமரிப்பு நிலையத்தில் பராமரிக்கப்படுவர் என்றும் —

முதற்கட்டமாக அறுபது சிறுவர், சிறுமியர் இந்த இல்லத்தில் அனுமதிக்கப்படுவர் என்றும் —

வடபிராந்திய இந்துப் பேரவை விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இல்லத்தில் சிறுவர், சிறுமியர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பப்படிவங்களை சிவன் புத்தகசாலை — நல்லூர், வேணிகளஞ்சியம் — யாழ்ப்பாணம், வேதாந்தமடம் — கந்தர்மடம், மருதம் என்டபிறைஸ் — யாழ்ப்பாணம், சாய்ராம் புத்தகசாலை — சங்கானை ஆகிய இடங்களில் பெற்றுக் கொள்ளலாம் என்றும் —

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை மேற்படி முகவரிகளிலோ அல்லது செயலாளர், இல.42, கோணாவளை லேன், கொக்குவில் கிழக்கு, என்னும் முகவரியில் நேரிலோ, தபால் மூலமோ சமர்ப்பிக்கலாம் என்றும் —

அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்துச் சமயங்களையும் சேர்ந்தவர்கள் இந்த நிலையத்துக்கு விண்ணப்பிக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-7)

வடக்கு - கிழக்கு உள்ளூராட்சிச் சேவை

ஆளணி வெற்றிட விவரங்களை கோருகின்றார் பணிப்பாளர்

தென்மராட்சி, ஒக். 7

வடக்கு— கிழக்கு மாகாண உள்ளூராட்சிச் சேவையில் நிரப்பப்படாமல் உள்ள ஆளணி வெற்றிடங்கள் குறித்த விவரங்களை அனுப்பும்படி மாகாண உள்ளூராட்சி உதவிப் பணிப்பாளர் கே. பி. சிவானந்தா கடிதம் மூலம் கோரியுள்ளார்.

பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள், யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு மாநகர சபைகளின் ஆணையாளர்கள் ஆகியோரிடமே அவர் இந்த விவரங்களைக் கேட்டுள்ளார்.

குறிப்பிட்ட வெற்றிடங்களுக்குப் புதியவர்களை நியமிக்காமல்சபைகளில்அமைய, தற்காலிக அடிப்படையில் பணிபுரிபவர்களை அமர்த்துவதற்கு அவர்களின் விவரங்களை அனுப்பும்படியும் அவர் கோரியுள்ளார்.

(க-117)

மரண அறிவித்தல்கள்

திருமதி துரைச்சாமி பகவதி

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் சோமசுந்தரம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி துரைச்சாமி பகவதி 05 10 2001 வெள்ளிக்கிழமை காலமானார்.

இவர் துரைச்சாமி (இளைப்பாறிய வனத்திணைக்களம்) யின் அன்பு மனைவியும் பொன்னவதேவி (இந்தியா), பொன்னராஜன், சத்தியபாமா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், உதயராஜன், யசோதினி, சிறிதரன் ஆகியோரின் மாமியாரும், ஜீவா, பிரசாந்த்தினோ, டனியலா, பிரகலாதன், பிரதீபா, கபிலன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07-10-2001) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் செம்மணி மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்,

26, சோமசுந்தரம் வீதி,
சுண்டுக்குளி.
(93090)

தகவல்:-
ராஜன்
(மகன்)

சுப்பையர் மாணிக்கம்

உரும்பிராய் தெற்கைச்சேர்ந்த சுப்பையா மாணிக்கம் நேற்று முன்தினம் (05-10-2001) வெள்ளிக்கிழமை கண்டியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நவமணியின் அன்புக் கணவரும், மகாதேவி, மகாதேவன், தங்கராசா (ஜேர்மனி), Dr. பிரபாகரன் (கண்டி), மதிவதனி, கலைவாணி (ஆசிரியை, கண்டி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், நாகேந்திரம், லோகேஸ்வரி, தங்கராணி (ஜேர்மனி), Dr. தமயந்தி (பேராதனை), லோகநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்நேற்று(6-10-2001) சனிக்கிழமை கண்டியில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி மகாதேவி நாகேந்திரம்
(மகள்)
தற்காலிக முகவரி:
ஞானவைரவர் கோயில் வீதி,
உரும்பிராய் கிழக்கு.

மீசாலை கிழக்கு.
(93099)

விற்பனைக்கு

நாற்று நடும் இயந்திரம்
Transplanting Machine

சேற்று மிதவையுடன் ஜப்பானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டது. உடன் விற்பனைக்கு உண்டு

மேலதிக விவரங்களுக்கு:

K. தனபதி
தனு சோதிட கணிச்சேவை
பிள்ளையார் கோயில்
தெற்கு வீதி, நெடியகாடு,
வல்வெட்டித்துறை.
T.P. & Fax 070-212300
E-Mail K.thanapathy
@ Yahoo. Com
(93079)

உதயன்

உறுதிமொழியை அரசு காப்பாற்றுமா?

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி சமர்ப்பித்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தை எப்போது நடத்துவது என்பது குறித்து நாளை நாடாளுமன்றக் கூட்டத்தில் நடைபெறவிருக்கும் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் முடிவு செய்யப்படவிருக்கின்றது.

கடந்த ஜூன் இறுதியிலும் இதே போன்ற நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை ஐ.தே.கட்சி, முஸ்லிம் காங்கிரஸ், ஜே.வி.பி, தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்க் காங்கிரஸ் ஆகியன ஒப்பமிட்டு சமர்ப்பித்திருந்தன. அந்தப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுக்க இருக்கையில், எதிர்பார்க்கப்பட்டபடி, தமது அரசைக் காப்பாற்றுவதற்காக நாடாளுமன்றை இரண்டு மாதங்களுக்கு ஒத்திவைத்தார் ஜனாதிபதி.

இரண்டு மாதங்களுக்குள் அரசியல் கட்சிகளின் நிலைமைகளில் மாற்றம். நிபந்தனைகளின் அடிப்படையில் பொ.ஐ.மு. அரசுக்கு முண்டுகொடுக்க முன்வந்தது ஜே.வி.பி.

இதனால் வலுவடைந்தது அரசு. நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்கொள்ளப் பயந்து இரண்டு மாதங்களுக்கு நாடாளுமன்றை ஒதுதிவைத்த அரசுத் தரப்பும், அதில ஒப்பமிட்ட பின்னர் அணி மாறி அரசுக்கு முண்டு கொடுக்க முன்வந்த ஜே.வி.பியும், இரண்டு மாதம் முடிவடைந்தும் தாங்கள் ஒன்றாக இணைந்து நின்று கொண்டு, முடியுமானால் இப்போது நம்பிக்கையில்லாப் பிரேரணையை மீண்டும் கொண்டு வந்து பாருங்கள் என்று சவால்விட்டன. ஆனால் ஐ.தே.க. பின்வாங்கியது. எனினும் அடுத்த மூன்று வாரங்களுக்குள்ளேயே அது புதிய நம்பிக்கையில்லாப் பிரேரணையைச் சமர்ப்பித்தது.

ஆனால் இம்முறை அந்தப் பிரேரணையில் பல கட்சிகளினதும் தலைவர்கள் ஒப்பமிட்டிருக்கவில்லை ஆக, ஐ.தே.கட்சியின் ஐந்து முத்த எம்.பிக்கள் மட்டுமே கையெழுத்திட்டிருந்தனர்.

எனினும், போன தடவையை விட இம்முறை ஐ.தே.கட்சி அதிக நம்பிக்கையுடன் இருப்பதாகத் தெரிகின்றது.

அரசுத் தரப்பிலிருந்து முன்னாள் அமைச்சர்கள் மூவர் உட்பட பதினைந்துக்கும் குறையாத எம்.பிக்கள் குத்துக்கரணம் அடித்து இம்முறை தங்கள் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்பர் என்று ஐ.தே.கட்சி நம்புகின்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணி அப்படி, இப்படி இழுத்தாலும் பிரேரணையை ஆதரிக்கும் என்ற நம்பிக்கை ஐ.தே. கட்சித் தலைமைக்கு இருப்பதாகத் தெரிகின்றது.

ரெலோவும், தமிழ்க் காங்கிஸ்ம இந்த அரசை வீழ்த்துவதில் உறுதியாக உள்ளன.

இன்னும் தனது நிலைப்பாட்டைத் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்தாத ஒரே கட்சி முஸ்லிம் காங்கிரஸ் தான். அதன் ஆதரவை எப்படியும் வளைத்துப் பிடிப்பதில் ஐ.தே.கட்சி தீவிரமாக உள்ளது.

எனவே, முன்னைய சூழ்நிலைகளிலும் விட இந்த அரசைக் கவிழ்ப்பதில் இப்போது வாய்ப்பான நிலைமை காணப்படுவதாக ஐ.தே.கட்சி கருதுகின்றது. இது அரசுத் தரப்புக்கும் நன்கு புரிந்துள்ளது.

இதனால் -

நம்பிக்கையில்லாப் பிரேரணை எப்போது வந்தாலும் அதனை எதிர்கொள்ளத் தயார் என்றும் -

9ஆம் திகதி (நாளை மறுதினம்) கூட அதனை விவாதத்துக்கு எடுக்க நாங்கள் ஆயத்தமாக இருக்கின்றோம் என்றும் -

கடந்த வாரம் வரை அடித்துக் கூறி வந்த அரசுத் தரப்புத் தலைவர்கள், நாளை கட்சித் தலைவர்களின் கூட் டத்தில் குத்துக்கரணம் அடித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இந்தப் பிரேரணையை 9ஆம் திகதி விவாதத்துக்கு எடுக்கத் தயார் என்று அரசுத் தரப்பு வழங்கிய உறுதிமொழியை அத்தரப்பு காப்பாற்ற வேண்டும்என்று ஐ.தே.க.கோருவது நியாயமானதே.

அரசுத் தரப்பு உறுதிமொழியைக் காப்பாற்றுமா? அல்லது தன் அரசைக் காப்பாற்ற மீண்டும் நாடாளுமன்றை ஒத்திவைக்கும் 'பேடித்தனமான வழியை நாடுமா? நாளை முடிவு தெரிந்து விடும்.

அமெரிக்க 'கிறீன் கார்ட்' முறை போன்று

பிரிட்டனிலும் வெளிநாட்டவருக்கு விரைவில் தொழில் செய்ய வசதி

அந்நாட்டின் உள்துறைச் செயலர் அறிவிப்பு

கொழும்பு,ஒக்.7

பிரிட்டனில் தொழில் செய்வதற்கான அனுமதி விரைவில் வெளிநாட்டவருக்கு வழங்கப்படவுள்ளது. அமெரிக்காவில் வழங்கப்படும் "கிறீன் காட்" முறைபோன்ற ஒரு முறையை நடைமுறைப்படுத்தவிருப்பதாக பிரிட்டனின் உள்துறைச் செயலர் டேவிட் பிளன்கெற், தொழிற்கட்சி மாநாடு ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

இதன் பிரகாரம் தொழில்சார் தகைமைகளுள்ள வெளிநாட்டவர்களுக்கு பிரிட்டனில் தொழில் செய்யும் அனுமதி வழங்கப்படும் ஏற்கனவே பிரிட்டனில் தங்கியிருந்து பட்டம் பெற்றவர்கள் அங்கேயே தொழில் அனுமதி பெற்று தொடர்ந்து தங்கியிருக்க முடியும். பருவகாலப் பணிகளுக்காக தற்காலிக அனுமதிகளும் வழங்கப்படவுள்ளன.

சட்டவிரோதமாகத் தொழில் செய்வதைவிடுத்து தேர்ச்சி பெற்று, தேர்ச்சி பெறாத ஊழியர்கள் இதற்காக விண்ணப்பிக்கும்படி அவர் வேண்டுகோள் விடுத்தார். இதனால் பிரிட்டனின் பொருளாதாரம் சிறப்படையும் என்றும் அவர் மாநாட்டில் தெரிவித்தார்.

இதற்கான புதிய சட்டமூலம் இம்மாத முடிவில் சமர்ப்பிக்கப்படலாம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (க)

நாட்டு நடப்பு

நாப்பது வயதை நண்ணிட முன்னர்
நரைத்ததேன் தலையென வினவுதிராயின்
தப்பாது சண்டை போட்டிடும் மனையாள்
சடுதியில் விவாக ரத்தினைப் பெற்றாள்
எப்போதும் போத்தல் ஏந்திடும் மைந்தன்
ஏகினன் வெளிநாடு இன்னமும் பதிலில்லை
முப்பது நாளும் சண்டை போட்டிடும் அயலான்
முடிவினில் கத்தியால் குத்தியே விட்டான்
இப்போதைக்கிந்த இனப்பிரச்சினையை
ஈசன் கூடத்தீர்த்திட மாட்டான்
காப்பது தன்கடன் இல்லையென்று
கடவுள் கைவிட்டதால் வந்ததன்றோ!

- விகடகவி.

தீர்க்கதரிசனம் மிக்க தலைவர்கள் தேவை!

ஆளும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி சமர்ப்பித்துள்ள நம்பிக்கை இல்லாப் பிரேரணை அமோக வெற்றியை ஈட்டலாம் - அல்லது படுதோல்வியைத் தழுவிக்கொள்ளலாம் -

தனக்குரிய விசேட அதிகாரங்களைப் பயன்படுத்தி நாட்டின் ஜனாதிபதி, நாடாளுமன்றத்தின் செயற்பாடுகளை முடக்கி வைக்கலாம் - அல்லது நாடாளுமன்றத்தையே கலைத்துவிட்டுப் புதிய பொதுத் தேர்தல் நடைபெற உத்தரவிடலாம் -

பொதுத் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியே மீண்டும் வெற்றி பெறலாம் - அல்லது ஐக்கிய தேசியக் கட்சி அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சி பீடத்தில் அமரலாம் -

என்ன நடந்தாலும் - அது எப்படி நடந்தாலும் - அது எப்போது நடந்தாலும் தமிழ் மக்கள் ஒன்றே ஒன்றை - மிக நன்றாக - மிகவிக நன்றாக - உணர்ந்துகொள்ள வேண்டும்.

நாம் இந்த நாட்டின் சிறுபான்மை மக்கள் என்பதை அவர்கள் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும் -

அத்துடன் -

இந்த நாட்டின் பெரும்பான்மையினரான சிங்கள மக்களை வழிநடத்தும் அரசியல் தலைவர்களுட் பெரும்பாலானோரை -

பேரினவாதச் சிந்தனைகளே வழிநடத்துகின்றன என்பதையும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் -

பேரினவாதச் சிந்தனைகளின் உள்ளடக்கங்களாக -

எத்தனையோ நூற்றாண்டுகளின் முன்னர் இந்தியத் துணைக்கண்டத்திலிருந்து இந்த நாட்டுக்கு வந்து முதன்முதலிற் குடியேறியவர்களின் வாரிசுகளே இங்குள்ள சிங்கள மக்கள் -

அன்பையும் அஹிம்சையையும் அறத்தையும் அறிவையும் அடிப்படையாகக் கொண்ட பௌத்த மதத்தைப் பாதுகாக்கக் கூடியவர்கள் எப்புத்துபிரானால் விசேடமாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் இங்குள்ள சிங்கள மக்களே -

ஆகவே, இந்த நாடு இங்குள்ள பௌத்த சிங்கள மக்களுக்கு மட்டுமே சொந்தமான நாடு -

காடு கொன்று நாடாக்கி, குளம் தொட்டு வளம் பெருக்கி வாழும் பௌத்த சிங்கள மக்களுக்கு, இந்த நாடு இல்லாவிட்டால், வாழ்வதற்கு வேறு எந்த நாடுமே இல்லை -

சிங்கள மக்களின் மூதாதையர் இந்த நாட்டிற்கு வந்து பல நூற்றாண்டுகள் கழிந்த பின்னர் -

கொள்ளைக்காரராகவும், குதிரை வியாபாரிகளாகவும், ஆக்கிரமிப்பாளர்களாகவும் இங்கு வந்து -

பௌத்த சிங்கள மக்களின் பெருந்தன்மையினால் இங்கு வாழ்வதற்கு அனுமதிக்கப்பட்டவர்களின் வாரிசுகளே இன்றைய தமிழர்கள் -

ஆகவே, பாரம்பரியத் தாயகம் எனச் சொல்லிக்கொள்ளுவதற்கு இவர்களுக்கு எந்த இடமும் இல்லை - எவ்வித உரிமையும் இல்லை!

அரச, தனியார் துறைகளிலே உத்தியோகம் - பதவி உயர்வு - வசதியான இடமாற்றம் - போன்றவற்றில் பௌத்த சிங்கள மக்களுக்கே முன்னுரிமை உண்டு -

கல்வித் தகைமைகளை விட, இன, மத, மொழித் தகைமைகளே முக்கியமானவை -

சிங்களத் தலைவர்கள் - பொதுமக்கள் 'மனமுவந்து' கொடுக்கும் உரிமைகள், சலுகைகளை அனுபவிப்பதுடன் திருப்தி அடைய வேண்டியவர்கள் தமிழர்கள் -

பெரும்பான்மைச் சிங்கள மக்கள், அனுபவித்துவரும் உரிமைகளையெல்லாம் தாமும் அனுபவிக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுப்பதோ, அது சம்பந்தமாக நடவடிக்கைகளில் ஈடுபடுவதோ தேசத் துரோகமாகக் கணிக்கப்படும் -

என்பவையெல்லாம் மிக வலுவாகவே இருக்கின்றன என்பதையும் நினைவிற்கொள்ள வேண்டும் -

இத்தகைய சிந்தனைகள் தவறானவை - உண்மைக்குப் புறம்பானவை - வலுவான ஆதாரமற்றவை - ஆழ்தியானவை - என அடித்துச் சொல்லக் கூடிய சிங்களத் தலைவர்கள் யாருமே இல்லை என்ற உண்மையையும் உணர்ந்துகொள்ள வேண்டும் -

துதேவேளையில் -

சிங்கள மக்கள் இப்படியெல்லாம் சிந்திக்கின்றார்கள் என்பதற்காக -

அவர்கள் பெரும்பான்மையினராக இருக்கின்றார்கள் என்பதற்காக -

நியாயமான எங்கள் கோரிக்கைகளையெல்லாம் கைவிட்டு விட்டு -

அவர்களைத் தாழ்ந்து பணிந்து வணங்கிக் கைகட்டிச் சேவகம் செய்வதே நம் விதி என்ற தாழ்வு மனப்பான்மையை - தோல்வி மனப்பான் மையையும் விரட்டிவிட வேண்டும் -

தமிழ் மக்களின் கோரிக்கைகள் - தீர்வுகளைகள் - இலட்சியங்கள் அனைத்துமே உண்மையையும் தர்மத்தையும் அடிப்படையாகக் கொண்டவை -

இதுவரை இவற்றை அடைய முடியாமற் போனதற்கு, நமது தலைவர்களின் 'சுயநலமும் வீம்பும், ஒற்றுமையின்மையுமே' முக்கியமான காரணங்கள் - என்பதையும் உணரவேண்டும் -

இந்த நிலையில் -

திருந்தாத தலைவர்களைத் திருத்த வேண்டும் - அல்லது தலைமைப் பதவியிலிருந்து அவர்களை விரட்டவேண்டும் -

சுயநலம் சிறிதும் இல்லாத -

தமிழ் மக்களின் நலனை மட்டுமே பெரிதாகக் கருதி உழைக்கின்ற -

ஒற்றுமையே பலம் என்பதை முற்றாகவே நம்பி நடக்கின்ற -

தீர்க்க தரிசனம் மிக்க -

புதிய தலைவர்களைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும் - அல்லது புதிதாகவே உருவாக்க வேண்டும் -

இலட்சியப் பிடிப்பும் செயல் துடிப்பும் மிக்க பல்கலைக்கழக மாணவர்கள் போன்றோர் இந்தப் பாரிய கடமையைச் செய்ய முன்வருவார்களா?

தர்மத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும் - தர்மம் மறுபடி வெல்லும்' - என்ற பாரதியின் வாக்கைப் பற்றிப் பிடித்துக்கொண்டு - முன்வருவார்களா?

- சித்தன்.

தனது வீட்டின் அமைவிடத்தை வரைபடமாக வைத்திருந்தவர் கைது!

தென்மராட்சி,ஒக்.7

இயற்றாலையில் உள்ள தனது வீட்டுக்குச் செல்வதற்கான வழிகளை வரைபடமாக வரைந்து வைத்திருந்த குடும்பஸ்தர் ஒருவர் படையினரால் கைது செய்யப்பட்டு கொடிகாமம் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

கொடிகாமம் பகுதி சிவில் அலுவலகத்தினால் மீளக்குடியமர்வின் போது வழங்கப்பட்ட பாஸ் வடிவத்தின் பின்பக்கத்தில் கொடிகாமம் - பருத்தித்துறை வீதியிலிருந்து இயற்றாலையில் உள்ள தனது வீட்டுக்குச் செல்வதற்கான வழிகளை இவர் வரைபடமாக வரைந்துவைத்திருந்ததாகக் கூறப்படுகிறது.

கடந்த புதனன்று குடமியனில் உள்ள தனது தந்தையை பார்த்து விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த வேளையில் இவர் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இயற்றாலையைச் சேர்ந்த வல்லிபுரம் மாணிக்கம் என்னும் ஐந்து பிள்ளைகளின் தந்தையே கைது செய்யப்பட்டவராவார்.

கொடிகாமம் பொலீஸார் இவரை காங்கேசன்துறை பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளனர். (ஐ-117)

நாளை

புரட்டாதி 22
திங்கட்கிழமை
திதி:ஷஷ்டி
முன்னிரவு 8.40 வரை
நட்சத்திரம் : மிருகசீரிடம்
பின்னிரவு 2.55 வரை
சுபநேரம்: 12.02 - 1.32
ராகுகாலம் : 7.32 - 9.02
(பழைய நேரப்படி)

உதயவாக்கு

நல்லவர்களுடன் சேர்ந்து கொள்ளையடிக்கலாம். கெட்டவர்களுடன் சேர்ந்து பிரார்த்தனை புரிவதைக்காட்டிலும்.

வடமராட்சியில் நெல் விதைப்பு

வடமராட்சி,ஒக்.7

வடமராட்சிப் பிரதேசத்தில் சுமார் ஆயிரத்து 300 ஹெக்டேயரில் காலபோக நெற்செய்கைக்கான விதைப்புப் பணிகளில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

சில தினங்களாகப் பெய்த பெரும் மழையைப்பயன்படுத்து இப்பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை, பாதுகாப்பு அரண்களுள்ள மற்றும் படையினரின் வசமுள்ள சில நூற்றுக்கணக்கான ஹெக்டேயர் நிலத்தில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட வில்லை. (ஐ-173)

கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!

மிதிவெடி அல்லது யுத்தவெடிபொருள் ஒன்றினைக் கண்டால்.....

கண்ணீர் அஞ்சலி

கந்தையா திருநாவுக்கரசு

வட இலங்கை சர்வோதய அமைப்பாளரும் பெருங்காடு தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம், விவசாய சம்மேளனம் ஆகியவற்றின் தலைவருமாகிய தொண்டர் **க.திருநாவுக்கரசு** அவர்களின் திடீர் மறைவைக் கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம்.

அன்னாரின் பிரிவால் வாடும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய யோகர் சுவாமிகளின் பாதார விந்தங்களைப் பிரார்த்திக்கின்றோம்.

பெருங்காடு தெற்கு
கிராம அபிவிருத்திச் சங்கம்;
விவசாய சம்மேளம்

3ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு. (93082)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!

6ஆம் மாத நினைவு நாள்

தோற்றம் 1992 - 12 - 07

மறைவு 2001 - 04 - 09

செல்வன் தவேந்திரன் கார்தீபன்

ஆறு மாதங்கள் மறைந்தோடிப் போனாலும்
பண்புமிகு மகனே கார்தீபா உன் பாசமுகம் மறப்போமா?
நீ இருந்த வாழ் நாளில் நிம்மதியாய் வாழ்ந்தோம்!
நீ இல்லாத உலகினிலே நிதம் கலங்கி நிற்கிறோம்!
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்!
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

சந்தை வீதி,
இமையாணன் உடுப்பிட்டி.

அ.தவேந்திரன் (சோக்கன்)
குடும்பத்தினர் (93076)

காங்கேசன்துறை தடுப்புமுகாமில் நால்வர் தடுத்துவைப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.7

காங்கேசன்துறை கைதிகள் தடுப்பு முகாமில் 4 பேர் மட்டுமே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று அங்கு சென்று வந்த மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக அதிகாரி என்.ஜீவேஸ்வரா தெரிவித்தார்.

திருகோணமலை, சுனித்தீவைச் சேர்ந்த சுப்பிரமணியம் சிவனேஸ்வரன், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மாணவனான காந்திராஜ் நிரோசன், யாழ்ப்பாணம், அன்னசத்திர லேனைச சேர்ந்த சண்முகநாதன் குமணன், வரணி, இயற்றாலையைச் சேர்ந்த வல்லிபுரம் மாணிக்கம் ஆகியோரே தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களாவர்.

இவர்களில் இயற்றாலையைச் சேர்ந்த வல்லிபுரம் மாணிக்கம் (வயது 58) என்பவர் கடந்த புதன் கிழமை கொடிகாமத்தில் வைத்துப் படையினரால் கைது செய்யப்பட்டு அங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-10)

மாணவருக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஒக்.7

கல்வி நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிக்கும் தீயசக்திகள் குறித்து மாணவர்கள் விழிப்பாக இருக்க வேண்டும் என வலிகாமம் மேற்குபிரதேசசபைத் தலைவர் ந.திரிலோகநாதன் வலி.மேற்கு மாணவர்களைக் கேட்டுள்ளார்.

சித்தன்கேணிப் பகுதியில் உள்ள தனியார் கல்வி நிலையம் ஒன்றுக்குள் கடந்த வியாழன் இரவு 9 மணியளவில் புகுந்த சிலர், அங்கு கல்வி கற்றுக் கொண்டிருந்த மாணவர்களை இனிமேல் அங்கு கல்வி கற்க வரவேண்டாம் என அச்சுறுத்தியதாகவும் -

இது குறித்து சம்பந்தப்பட்ட கல்வி நிலையத்தின் நிர்வாகி தனக்கு முறைப்பாடு செய்ததாகவும் -

இதனை அடுத்தே மாணவர்களுக்கு தான் இந்த அறிவுரையைக் கூறுவதாகவும் -

ந.திரிலோகநாதன் தெரிவித்துள்ளார். (ஐ-7)

கண்ணீர் அஞ்சலி

கந்தையா திருநாவுக்கரசு

வடஇலங்கை சர்வோதய அமைப்பாளரும், புங்குடுதீவு மத்தி மேற்கு சமுர்த்தி செயலணி ஆலோசகருமாகிய தொண்டர்

க.திருநாவுக்கரசு

அவர்களின் மரணச் செய்தி கேட்டு நாம் ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய யோகர் சுவாமிகளின் பாதாரவிந்தங்களை வேண்டி நிற்கின்றோம்.

3ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு. (93083)

க.அஜந்தன்
சமுர்த்தி உத்தியோகத்தர்.

மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 01 - 08 - 1935

ஆண்டவன் அடியில் 07 - 10 - 1998

அமரர் சின்னத்தம்பி செல்லத்துரை

(ஓய்வுபெற்ற பொலீஸ் அத்தியட்சகர்)

"எம் இனிய அப்பாவே!
ஆண்டுகள் மூன்று
எப்படித்தான் கரைந்தனவோ?
ஆனாலும் .....
ஆறவில்லை எம் துயரம்!
என்றென்றும் உங்கள் நினைவை
ஏற்றி வைப்போம் எம் நினைவில"

கண்டி வீதி,
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

- மனைவி, பிள்ளைகள்,
மருமகள், பேரப்பிள்ளைகள்
(U.K) (93077)

கொமர்ஷல் வங்கியின்
'அருணலு' சேமிப்பு வாரத்தில்
ஆதரவு தேடும் சிறார்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு வழிசமைப்போம்.
(01-10-2001 தொடக்கம் 12-10-2001 வரை)

நீங்கள் உங்கள் பிள்ளையின் பெயரில் 'அருணலு' சிறுவர் கணக்கொன்றினை ஆரம்பியுங்கள்!
நாங்கள் ஆதரவு தேடும் பிள்ளையின் பெயரில் கணக்கொன்றினை ஆரம்பிப்போம்.
இது ஒரு பிள்ளையின் வாழ்வில் ஒரு பெரும் திருப்பத்தை ஏற்படுத்துப்போகும் வாரமாகும்.
எவ்வாறு.....?
உங்கள் பிள்ளைக்கு இவ்வாரத்தில் 'அருணலு' சிறுவர் கணக்கினை ஆரம்பிப்பதன் மூலம் தெரிவு செய்யப்பட்ட சிறுவர் பராமரிப்பு நிலையமொன்றினைச் சேர்ந்த ஆதரவு தேடும் பிள்ளையின் பெயரில் 'அருணலு' சிறுவர் கணக்கொன்றினை நாம் ஆரம்பிப்பதற்கு உதவுகின்றீர்கள்.
எனவே 12.10.2001 முன்பாக 'அருணலு' கணக்கினை ஆரம்பித்து இரண்டு சிறார்களின் நம்பிக்கையான எதிர்காலம் உதயமாக உதவுங்கள். மேலதிக விவரங்களுக்கு
கொமர்ஷல் வங்கியின் யாழ்.கிளையினை நாடுங்கள்.

திருமண மண்டபமும் தங்குமிட வசதியும்

வடபகுதியிலிருந்தும் மற்றும் எந்த நாட்டிலிருந்தும்
கொழும்பு செல்லும் பயணிகளுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி

VANIY INN லொட்ஜ்

சகல வசதிகளுடன் குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவை புரியும்
சுத்தமான, பாதுகாப்பான, அமைதியான சூழலில்....
ஒரு முறை விஜயம் செய்து பார்த்தால் உண்மை புரியும்.
No. 89, Hinny Appuhamy Mawatha
Vanrovan Street, Colombo - 13,
(93088) T.P.No. 01 433182, 472582

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 11 - 09 - 1934

விண்ணில் 07 - 10 - 1999

அமரர் வேலாயுதம் கந்தையா

(திதி: 07.10.2001)

நித்தம் நித்தம் உங்கள் நினைவில் வெந்து
நினைவெல்லாம் நீங்களேயாகி நொந்து
சித்தம் கசிந்து உங்களுக்காய் உருகுகின்றேன்
நாம் சேர்ந்திருந்த காலம் மீண்டும் வருமோ அன்பே?
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிள்ளையார் வீதி முகப்பு,
அளவெட்டி. (93086)

திருமதி கந்த.விக்கி.
(பாசமிகு மனைவி)

முதியோர் தின விழா

யாழ்ப்பாணம்,ஒக.7

பளைப் பிரதேச செயலகம் நடத்தும் முதியோர் தினவிழா நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு புலோலியில் இயங்கும் பளைப் பிரதேச செயலக மாநாட்டு மண்பத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் எஸ்.புத்திசிகாமணி தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் 'றான்' அமைப்பின் பொறியியலாளர் ப.கிரிதரன் பிரதம விருந்தினராகவும், வைத்திய கலாநிதி எஸ்.மயிலேறும்பெருமாள் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

முதியோர் தினத்தை முன்னிட்டு பளைப் பிரதேச பாடசாலைகளுக்கு இடையில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் இந்த நிகழ்வில் வைத்து வழங்கப்படும். 36 முதியவர்களும் பாராட்டிக் கௌரவிக்கப்படுவர். (ஐ-7)

விசேட பஸ்சேவையால் வருமானம்

வடமராட்சி, ஒக.7

சரித்திரப் பிரசித்தி பெற்ற வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் தேர், தீர்த்த உற்சவங்களுக்கு நடத்தப்பட்ட விசேட பஸ்சேவை மூலம் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போ 3 இலட்சத்து 51 ஆயிரத்து 206 ரூபாவை வருமானமாகப் பெற்றுள்ளது.

இரு நாள் உற்சவ காலங்களில் பருத்தித்துறை டிப்போவுக்குச் சொந்தமான 22 பஸ்வண்டிகளுடன், யாழ்ப்பாணம் டிப்போவின் 5 பஸ் வண்டிகளும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன.

இவ்விசேட சேவைக்கென யாழ்ப்பாணம் டிப்போ ஏற்கனவே 5 பஸ் வண்டிகளை வழங்கியிருந்தது. (ஐ-173)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

2001 ஆம் ஆண்டு 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் யா/தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த

செல்வி ரேகா பாலசுப்பிரமணியம்

அதிகூடிய 174 மதிப்பெண்களைப் பெற்று
யாழ்.மாவட்டத்தில் இரண்டாவதாகவும் (2)
இவரின் இணைச் (Twins) சகோதரியான

செல்வி ரேணுகா பாலசுப்பிரமணியம்

147 மதிப்பெண்கள் பெற்றும் சித்தியடைந்துள்ளார்கள். இவர்களையும், இவர்களுக்குக் கல்வி கற்பித்த நல்லாசான்களாக விளங்கும் ஆசிரியர்களையும் கல்வியோடு அன்பையும் கலந்து ஊட்டி ஆக்கமும் ஊக்கமுமளித்த திரு.வெ.சண்முகரத்தினம் (அங்கிள்) அவர்களையும் நாம் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மேலும் இவர்கள் தொடர்ந்தும் கல்வியில் சிறப்புற்றுத் திகழ வாழ்த்தும்:-

அம்மா, அண்ணா, அம்மம்மா, பெரிய அம்மம்மா, பெரியப்பாமார், சித்தப்பா, கனடா - ராஜ் சித்தப்பா, சுவிஸ் சிவலிங்க மாமா, பரமேஸ்வரி மாமி, யோகம் மாமி, பெரியம்மா, பெரியன்ரா, பிள்ளையன்ரா, பாப்பா அன்ரா, கிளியன்ரா, கனடா சகோதரர்கள், மைத்துனர், இராமச்சந்திரன் குடும்பம் - ஏழாலை கிழக்கு.

அம்பலவாணர் வீதி,
உடுவில். (93078)

The Barbara Mulvaney Computer Training Center

123, Temple Road, Jaffna

பிரிவு II இற்குரிய வகுப்புக்கள் ஆரம்பம்

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தினால் ஆரம்பிக்கப்பட்டுத் தொடர்ந்தும் ஐ.நா.வின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் பாபரா மல்வாணி கணனிப்பயிற்சி நிறுவனமானது தனது சேவையை மேலும் விரிவுபடுத்தும் நோக்கத்துடன் இருபாலாருக்குமான கணனிப்பயிற்சி நெறிகளை ஆரம்பித்துள்ளது.

Courses:

- *Diploma in Ms Office (4 Months)*

எமது நிறுவனத்தில் Ms Office கற்கும் மாணவர்களுக்கு இலவசமாக Corel DRAW கற்பிக்கப்படும்.

- *Diploma in Desktop Publishing (4 Months)*
- *Diploma in Photo Graphic (3 Months)*
- *Diploma in programming (4 months)*
- *Diploma in Information Technology (4 Months)*
- *Kids Course (2 Months)*

ஆதிவிசேட கட்டணச் சலுகை

Certificate Courses

- *Adobe PageMaker 6.5*
- *Auto CAD 2000*
- *Corel DRAW 9*
- *Microsoft Access*
- *Microsoft Word*
- *Microsoft Excel*
- *Microsoft Visual Basic 6.0*
- *Microsoft Power Point*

- அலுவலக ஊழியர்கள், பாட்சாலை மாணவர்களின் வசதிக்கேற்ப காலை 7.30 இருந்து மாலை 6.00 மணிவரை விசேட வகுப்புக்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
- தனிப்பட்ட கவனம் தேவைப்படுமிடத்து சிறு குழுக்களாக பிரத்தியேக வகுப்புக்கள் ஒழுங்கு செய்யப்படும்.
- ஏற்கனவே எமது நிறுவனத்தில் கல்வி கற்று வெளியேறிய (UNDP/JRRP யின் அனுசரணையுடன் இலவசமாக கணனிக் கல்வி பயின்ற மாணவர்கள் உட்பட) மாணவர்களிற்கு புதிய கற்கைநெறிகளுக்கு கட்டணத்தில் 25% சலுகை வழங்கப்படும்.

➢ பல்கலைக்கழக மாணவர்களின் Dissertation வேலைகள் மிகவும் தரமானமுறையில் செய்து கொடுக்கப்படும்.

➢ கட்டட வரைபடங்கள் யாவும் கணனி மூலம் சிறந்த முறையில் வரைந்து கொடுக்கப்படும்.

பிரிவு II இற்குரிய மேற்படி வகுப்புக்கள் யாவும் 14-10-2001 அன்று ஆரம்பமாக இருப்பதனால் 13-10-2001 இற்கு முன்னர் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்.

- நிர்வாகம்

31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர் வே.சி.கணபதிப்பிள்ளை

(பிரபல வர்த்தகர், V.S.கணபதிப்பிள்ளை வர்த்தக ஸ்தாபனம் மற்றும் V.S.K.மில் ஸ்தாபகர், மானிப்பாய்.)

தோற்றம் 27.12.1922 — மறைவு 07.09.2001

நீண்டதொரு வரலாற்றில் என்றும்
நிலையான புகழுடன் வாழ்ந்து
உற்றாரும் சுற்றத்தவரும் வாழ்ந்திட
நிலையான வாழ்வு வாழ்ந்திட்ட
எங்கள் இதய தெய்வமே!
வாழ்வில் தனியாய் எமக்கெல்லாம்
உறுதுணையாக வாழ்ந்து காட்டிய
எங்கள் பெருந்தகையே! நிலையாக
வாழ்ந்து பேரோடும் புகழோடும் சென்றீர்கள்!
உங்கள் ஆத்மா சாந்தியடையட்டும்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

07.09.2001இல் மறைந்த எங்கள் குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளின் போது பங்கு கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர் கலந்துகொண்டும், எமக்கு பல்வேறு வழிகளில் பலவித உதவிகள் புரிந்தவர்களுக்கும், இறுதி அஞ்சலி உரை நிகழ்த்தியவர்களுக்கும், அஞ்சலிப் பிரசுரங்கள் அச்சிட்டு வெளியிட்டவர்களுக்கும், உள்நாடு - வெளிநாடுகளில் இருந்து தொலைபேசி, தபால், தந்தி, FAX மூலம் அனுதாபச் செய்திகள் அனுப்பியுள்ளோர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன் இன்று (07.10.2001) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கலாசாலை வீதி,
மானிப்பாய். (92622)

சின்னஞ்சிறு விளம்பரம்

காணி விற்பனைக்கு

உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கும் ஊரெழு அம்மன் கோயிலுக்கும் இடையில் பலாலி வீதியில் உடையார் தோட்டம் என அழைக்கப்படும் தோட்டக்காணி விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. தொடர்பு:- குமாரசேகரம் - சிவபாலன் 83 2/4, கமிடன் லேன், கொழும்பு-6. T.P.596970. (C/18514)

இருபாலை, கோண்டாவில் வீதி, இராஜ வீதி சந்திக்கருகில் 33/4 பரப்புத் தோட்டக்காணி கிணற்றுப் பங்குடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வீ.சோமசுந்தரம், இராஜ வீதிச் சந்தி, கோப்பாய் தெற்கு. (93080)

SPOKEN ENGLISH

சுலபமாக ஆங்கிலத்தில் எழுத, வாசிக்க, இலக்கணம் கதைக்கப் பயில. தபால் மூலமும். ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி CER/Dip. in M.L.S. (LONDON), 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்; நாகலிங்க சுவாமிகள் வீதி, சங்கானை. (92991)

இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறொயிலர் கல்பேட்ஸ், சேவல், இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து (பாதிக் கோழி உட்பட) தினமும் பெறுக் கொள்ளலாம். 1Kg - 135/= தொடர்பு: 30,அல்லது 157,நாயன்மார் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (93030)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் பாதிக்கோழி உட்பட சுத்தம்செய்து பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்யப்பட்டது 1Kg 220/- மட்டுமே! தொடர்பு: இல.227, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம். (93022)

புறொயிலர், சேவல், குப் குஞ்சுகள் சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.(92891)

இறைச்சிக்கோழி, புறொயிலர், கல்பேட்ஸ், சேவல் என்பன விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம்செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: இல.15, 6ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (93021)

விற்பனைக்கு

45 நாள்கள் நிரம்பிய வெள்ளை நிற பொமேரியன் ஆண் நாய்க் குட்டிகளும் 1 1/2 வயது நிரம்பிய வெள்ளை - கறுப்பு நரை ஆண் நாய்களும் விற்பனைக்கு உண்டு. க.நடராசா, செல்வநாயகம் ஒழுங்கை, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (93028)

அச்சகப் பாவனைக்கான நல்ல நிலையிலுள்ள ஜப்பான் சிலிண்டர் அச்சியந்திரமும் (SINGLE demi size), பிளேட்டின் அச்சியந்திரமும் (CROWN 1/2 size) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கா.சதானந்தசர்மா, 730, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். (93087)

நல்ல நிலையிலுள்ள ஜெனறேற்றர் ஹொண்டா, எல்.கான்ரில் E.G.650 விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஆனந்தன், சாவகச்சேரி வீதி, மந்திகை. (93033)

அம்பிளிவயர் 45W, 2 சின்னக் கோண்கள், 2 யூனிட் 40W என்பன செற்றாகவும், பெரிய எப்பிக்கர் கோண்களும் விற்பனைக்குண்டு. சி.குணம், மானிப்பாய் வீதி, தாவடி. T.P.2690 (93063)

வளர்ப்பு மீன்களுடன் (Gold Fish) தொட்டி விற்பனைக்குண்டு. தொடர்பு: த.கந்தவேள் (சி.சேந்தன்) ஏழாலை மேற்கு, சுன்னாகம். (93101)

மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

பெண்களுக்கான பெற்றோல் மீற்றர் சாளி (புதிய மொடல்) மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. 34/7, செட்டித் தெரு, நல்லூர். (93031)

இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் வேண்டிய நிறையில் பெற்றுக்கொள்ளலாம். 1kg 140/=. வெள்ளிக்கிழமை தவிர மற்றைய நாள்களில் எந்த நேரமும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: S.லக்கி, மதவடி ஒழுங்கை, திருநெல்வேலி. (93085)

'தமிழ்த்தூது' நூல் மீள் பதிப்பு

யாழ்ப்பாணம்,ஒக.7

தமிழாராய்ச்சி மாநாட்டின் தந்தையான தவத்திரு. தனிநாயகம் அடிகள் எழுதிய "தமிழ்த்தூது" என்னும் நூல் மீள்பதிப்புச் செய்யப்பட்டுள்ளது.

இந்த நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் 15.ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சில் நடைபெறவுள்ளது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நூலின் முதற் பிரதியைப் பெற்றுக்கொள்வார்.

தவத்திரு. தனிநாயகம் அடிகள் தமிழ் மன்றத்தின் செயலாளரும், நெடுந்தீவுப் பிரதேசசபைத் தலைவருமான புலவர் ஏடபிள்பு அரியநாயகம் இந்த நூலை மீள்பதிப்புச் செய்துள்ளார். (ஐ-7)

அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

மலர்வு 21 - 05 - 1928

உதிர்வு 09 - 09 - 2001

அமரர்

சிவாலிங்கம் வரதராஜா

(Rajasons, Color Prints உரிமையாளர்)

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வாசல வீதியை வதிவிடமாகவும் கொண்ட அமரர் **சிவாலிங்கம் வரதராஜா** அவர்கள் 09.09.2001 அன்று சிவபதமடைந்தார். இவரது இறுதிக்கிரியைகள் 13.09.2001இல் அவரது இல்லத்தில் நடைபெற்றன. அன்னாரின் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றி பல்வேறு உதவிகள் செய்து எங்களின் துயரில் பங்குகொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்கள் அனைவருக்கும் எங்களது நன்றிகள்.

அன்னாரின் 31ஆம் நாள் நினைவையொட்டி எமது இல்லத்தில் நாளை மறுதினம் (09.10.2001) செவ்வாய்க்கிழமை காலை ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நடைபெற்று நண்பகல் 12.00 மணிக்கு மதியபோசனம் (168, வாசல வீதி, கொழும்பு - 13) நடைபெறும்.

அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் எமது இதய தெய்வத்தின் ஆத்மசாந்திக்காக எம்முடன் இணைந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பணிவுடன் வேண்டுகின்றோம்.

168, வாசல வீதி,
கொழும்பு - 13

- மனைவி, பிள்ளைகள்.

(93047)

கணபதி துணை

பூப்புப்புனித நன்னீராட்டுவிழா அழைப்பு

அன்புடையீர்!

நகழும் மங்களகரமான விஜயவருடம் புரட்டாதித் திங்கள் 21ஆம் நாள் இன்று (07.10.2001) ஞாயிற்றுக்கிழமை காலை 9.02 மணிமுதல் 10.32 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

எமது ஏக புத்திரி திருநிறை செல்வி

செளமியா

அவர்களுக்கு

பூப்புப்புனித நீராட்டுவிழா நடத்தத் திருவருள் கைகூடியிருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சமேதரராய் வருகைதந்து செல்வியை ஆசீர்வதித்து வைபவத்தைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:
திரு.திருமதி சச்சிதானந்தம்,
உரிமையாளர், "சச்சியா இரும்பகம்",
வட்டுக்கோட்டை.

அராலி மத்தி,
வட்டுக்கோட்டை. (93088)

யா/நல்லூர் சென்.பெனடிக்ற் றோ.த.க.பாடசாலை

பாராட்டி வாழ்த்துகின்றோம்

2001ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பின்வரும் மாணவர்களையும்

புள்ளிகள்

ம.ஜெயகாந்த்	146	சு.அஜந்தன்	126
த.நிஷாந்தி	143	ஸ்ரீ.மேர்லின்	125
சா.ரஜிதா	139	பு.மீரா	123
இ.சிந்துஜா	127	ச.சரண்ஜா	123

இவர்களைக் கற்பித்த ஆசிரியர்களையும், ஊக்குவித்த அதிபரையும் வாழ்த்துவதோடு, எமது மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(93091) **- பெற்றோர்.**

நன்றியுணர்வுடன் வாழ்த்திப் பாராட்டுகின்றோம்

தன்னிடம் வருபவர்களிடம் அன்பும், பரிவும், பண்பும் காட்டி மலர்ந்த முகத்துடன் பாசமாக வரவேற்று, உபசரித்து, இன்சொல பேசி, எம்முடன் கலந்துரையாடி, எமது தேவையை உணர்ந்து சற்றும் மனம் கோணாமல் கர்வமின்றிச் சந்தோஷமாக நடந்து கொண்ட

நடமாடும் தெய்வமாக மிளிரும்
மான்புமிகு அமைச்சர்

கே.என்.டக்ளஸ் தேவானந்தா

அவர்கள் நீண்ட ஆயுளுடன் பன்னெடுங்காலம் இன்னும் வாழ வேண்டுமென்று கைதடி வீரகத்தி விநாயகப் பெருமானை வேண்டி வாழ்த்திப் பணிகின்றேன்.

இந்த நாட்டில் இதுவரைகாலமும் இப்படியான மகத்தான சேவை மனப்பான்மையுடன் அரும்பணியாற்றிய ஒருவரை நாம் காணவில்லை. அவரது அளப்பரிய சேவை பாராட்டுக்குரியது. மக்களின் கஷ்டங்களை அறிந்து உண்மை நிலையை உணர்ந்து கடவுள் மாதிரிக் கைகொடுக்கும் இவர் ஒரு தெய்வீகப் பிறவியாவார்.

கைதடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தின் கட்டட புனருத்தாரண வேலைகளுக்கென ரூபா நான்கு லட்சத்தை ஒதுக்கீடு செய்து உதவியமைக்கு எமது மனமார்ந்த நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்து இனி மேலும மேலும் அவர் இருந்து சேவை செய்வதற்கு கதிர்காம முருகன் அவருக்கு சகலவிதமான நன்மைகளையும் அருளிச்செய்ய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம்.

- திரு.சின்னையா கனகரத்தினமும், மழலைச் செல்வங்களும்
கதிர்வேலவன் அரிசி ஆலை, கைதடி.

(93092)

ஆண்டு ஒன்றின் நினைவலைகள்

பூவுலகில் 06 - 07 - 1953

விண்ணுலகில் 17 - 10 - 2000

அமரர் மகாரட்ணம் கருணாகரன்

(Tharson) தர்சன் லொறி உரிமையாளர் (கருணா)

திதி: 07.10.2001

ஆண்டு ஒன்று சென்றதண்ணா
ஆறு நாள்கள் போல் இருக்கிறது
காலமெல்லாம் உம் நினைவு
கலையாது எம்மைவிட்டு!
வேதனையாய் நாம் தினமும்
வெதும்பி இங்கு நிற்கின்றோம்!
அண்ணா உந்தன் திருமுகத்தை நாம்
கனவினிலேதான் காண்கின்றோம்!
நிஜ உருவில் எம்மிடம் நீர்
விரைந்து வர வேண்டுகிறோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இலங்கை வங்கி முன்பாக,
மானிப்பாய்.

தாய், மனைவி,
பிள்ளைகள், சகோதரர்கள்.

(93049)

கௌரவபட்டங்கள் பெற்ற நால்வர்

நேற்று நடைபெற்ற யாழ்.பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவின்போது கௌரவ கலாநிதி மற்றும் முதுகலைமாணிப் பட்டங்கள் நால்வருக்கு வழங்கப்பட்டன. அவர்கள் தொடர்பான குறிப்புகள் இங்கு இடம்பெறுகின்றன.

அருட்கவி

சீனியர் விநாசித்தம்பி

அனைவராலும் 'அருட்கவி' என அன்புடன் அழைக்கப்படுபவராகிய சீ.விநாசித்தம்பி அளவெட்டியில் 03.11.1923 அன்று பிறந்தார். இவர் தன்னுடைய தொடக்கக் கல்வியினை அளவெட்டி அருணாசலம் வித்தியாசாலையிலும், அதனையடுத்து அளவெட்டி அருணோதயக் கல்லூரியிலும் பெற்றார். இதனையடுத்து ஆசிரிய தராதரப் பத்திரம், சங்கீதாசிரிய தராதரப் பத்திரம், திருநெல்வேலி சைவ ஆசிரிய பயிற்சித் தாராதரம் ஆகிய தராதரங்களைப் பெற்று நல்லாசிரியனாகப் பரிணமித்தார். இவர் இலங்கையில் உள்ள பல பாடசாலைகளிலும் ஆசிரியப் பணியாற்றினார்.

கல்வித் துறையில் மாத்திரமன்றி இவர் இயல்பாகவே கவிதை புனைவதிலும் வல்லவராக விளங்கினார். பண்டிதர் சி.கதிரவேலு, பண்டிதமணி இலக்கிய கலாநிதி சி.கணபதிப்பிள்ளை, தத்துவஞானி பொ.கைலாசபதி, ஆசிரியக் கலாசாலை அதிபர் திரு.எஸ்.சுவாமிநாதன் ஆகியோருடைய தொடர்பினால் தன்னுடைய கல்வி, கவித்துவ வளர்ச்சியிலே இன்னுமொரு பரிணாமத்தை ஈட்டிக்கொண்டார். ஆன்மீகத்துறையிலும் இவர் காட்டிவரும் ஈடுபாடு குறிப்பிடத்தக்கதாகும். இத்துறை சார்ந்த பரிமாணத்துக்கு திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள், கவியோகி சுத்தானந்தபாரதியார், பித்துக்குளி முருகதாஸ் போன்றோர் இவருக்கு வழிகாட்டிகளாக விளங்கினர்.

சிறந்த சமயச் சொற்பொழிவாளராகவும், கதாப்பிரசங்கம் நிகழ்த்துவதில் வல்லவராகவும் விளங்கிய அருட்கவி சீ.விநாசித்தம்பியினது சமயப்பணி யாழ்ப்பாணத்தில் உள்ள பெரும்பாலான ஆலயங்களில் விரிவடையலாயிற்று. கந்தபுராணம், பெரியபுராணம், விநாயகபுராணம், கந்தரனுபூதி, தேவிபாகவதம், மகாபாரதம், கம்பராமாயணம் ஆகிய சமய இலக்கியங்கள் தரும் உயர்ந்த சமய சிந்தனைகளை தமது சமய உரைகள் மூலம் மக்கள் மத்தியில் பரப்பி நல்லைநகர் நாவலர் காட்டிய வழியில் சமயவளர்ச்சிக்கு அரும் பணியாற்றி வருபவர். இவரது இப்பணி யாழ்ப்பாணத்தில் உள்ள ஆலயங்களில் மாத்திரமன்றி இலங்கையிலுள்ள திருகேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் போன்ற தலங்களிலும் மற்றும் இந்தியாவிலுள்ள சமயபுரம், திருச்சி உச்சிப் பிள்ளையார், மதுரை ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயம் ஆகிய தலங்களிலும் விரிவடைந்தது.

அளவெட்டி ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தின் பாதுகாவலராக விளங்கும் விநாசித்தம்பி அவர்கள், அவ்வாலயத்தை மத்திய நாடியாகக் கொண்டு பல எண்ணிக்கையினான சமய நூல்களையும், தோத்திர நூல்களையும் எழுதியும் வெளியிட்டும் வருபவராவார். தமது ஆசிரியப் பணியில் இருந்து ஓய்வுபெற்றதன் பின்னர் இத்தகைய சமய நூல்களை எழுதி மக்கள் மத்தியில் சமய விழிப்புணர்வை ஏற்படுத்தி வருவதோடு, மக்களது சமய வாழ்வுக்கு வழி காட்டியாகவும் விளங்கி வருபவர். இவ்வகையில் ஏறக் குறைய 36 நூல்கள் இவரது ஆற்றலை வெளிப்படுத்தி நிற்கின்றன. இவர் அண்மையில் வெளியிட்ட 'கந்தபுராண வசன காவியம்' என்ற நூல் குறிப்பிடத்தக்கதொன்று. இவரது கவித்துவச் சிறப்பினால் 'பிள்ளைத் தமிழ்', 'திருவூஞ்சல்', 'திருப்புகழ்', 'பஜனைப்பாக்கள்', 'திருவிரட்டைமணிமாலை', 'திருவந்தாதி', 'திருப்பள்ளிஎழுச்சி' போன்ற பாவடிவங்களில் ஏறக்குறைய 119 கவிதை நூல்கள் வெளிவந்துள்ளன. இவரது பல வருட விடாமுயற்சியின் பெறுபேறாக இவ்வெளியீடுகள் விளங்குகின்றன. இந்நூல்கள் சைவ சமயத்திலும் சைவ சித்தாந்தத்திலும் இவருக்குள்ள புலமையை வெளிப்படுத்தி நிற்கின்றன.

பல்வேறு சமூக நிறுவனங்களில் இவர் இணைந்து பணியாற்றுவதன் மூலம் சிறந்ததொரு சமூக வழிகாட்டியாகவும் விளங்குபவர். ஆதரவற்ற குழந்தைகளைப் பராமரிப்பதிலும் சமூக நிறுவனங்களில் ஆலோசகராகப் பணியாற்றுவதிலும் விநாசித்தம்பி பெரிதும் ஆர்வத்துடன் செற்படுபவர். வீடுகள் மற்றும் ஆலயங்கள் அமைக்கப்படும்போது இவர் உரிய ஆலோசனைகளை வழங்குவதில் வல்லவர். சோதிடத்துறையிலும் கணிசமான பங்காற்றி வருபவர். இவை யாவற்றுக்கும் மேலாக யாழ்ப்பாணத்தில் இயங்கும் இந்து சமயப் பேரவைக்கு தலைமை தாங்கி வழி நடத்துவதன் மூலம் தமது ஆளுமையை வெளிப்படுத்தி சமய சமரச உளப்பாங்குடன் செயற்பட்டு வருபவர்.

அத்துடன் தனது தந்தையாரின் வழியில் பரம்பரை வைத்தியத்துறையிலும் தமது ஆற்றலை வெளிப்படுத்திவருபவர். கதாப்பிரசங்கம், பண்ணிசை ஆகிய துறைகளில் சிறந்த வானொலிக் கலைஞராகவும் தம்மை உயர்த்திக் கொண்டவர் விநாசித்தம்பி அவர்கள். இவரது இத்தகைய அரும் பணிகளைப் பாராட்டும் முகமாக பல சமய சமூக நிறுவனங்கள் பல கௌரவ விருதுகளை வழங்கிச் சிறப்பித்துள்ளன. அவ்வகையில் இவருக்கு அருட்கவி என்ற பட்டம் சிறப்பாக அமைந்தது. நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் இவருக்கு 'அருள் மொழி அரசு' என்ற பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது.

பேராசிரியர் **ப.கோபாலகிருஷ்ண ஐயர்.**

பண்டிதர்

கணபதிப்பிள்ளை சச்சிதானந்தன்

யாழ்ப்பாணம், மாவிட்டபுரத்திலே 1921ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 19ஆம் திகதி பிறந்த சச்சிதானந்தன் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியிலும், தும்பளை தட்டாதெருப் பாடசாலையிலும் தொடக்க நிலைக் கல்வியைப் பெற்றார். சோதிடராகிய தனது தந்தையாரிடம் சோதிடக் கல்வி, மகாபாரதப் படிப்பு, புராணப் படிப்பு ஆகியனவற்றைச் சிறு வயதிலிருந்தே கற்றுக்கொண்டார். இடைநிலைக் கல்வியினை நடேஸ்வரா, ஹாட்லி கல்லூரிகளிலே பெற்றுக் கொண்டார். தமிழிலும் ஆங்கிலத்திலும் நல்ல தேர்ச்சியினைப் பெற்ற இவர், 1941இல் "மதுரைப் பண்டிதர்" என்னும் பட்டத்தினைப் பெற்றார். சமஸ்கிருத மொழியினை சிவப்பிரகாச தேசிகர், சுப்பிரமணிய சாஸ்திரிகள், மாவை கு.பாலசுந்தரக் குருக்கள் ஆகியோரிடம் கற்றுத் தேர்ந்தார்.

1943ஆம் ஆண்டு சுவாமி விபுலானந்தர் கொழும்பில் இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியராகப் பணிசெய்த காலத்தில் பண்டைத் தமிழரின் 'யாழ்' பற்றி ஆய்வு செய்தார். இந்த ஆய்வுக்குப் பண்டிதர் சச்சிதானந்தன் துணை செய்தார். சுவாமியுடன் தமிழ்நாட்டுக் கோயில்களுக்குச் சென்று அங்குள்ள சிற்பங்களிலே காணப்பட்ட யாழ், குழல் முதலிய இசைக் கருவிகளின் அமைப்பு, நீளம், பருமன் ஆகியன பற்றி ஆராய்ச்சி செய்தனர். சுவாமியினுடைய புகழ்மிக்க "யாழ்நூல்" உருவாவதற்குப் பண்டிதர் சச்சிதானந்தனுடைய பங்களிப்பும் இருந்ததென்பதை அறிந்து மகிழ்ச்சியடைகின்றோம்.

இலண்டன் மற்றிக்குலேசன் இன்டர் சயன்ஸ் (London Matriculation Inter Science) தகைமையுடன் நீர்கொழும்பு புனித மரியாள் கல்லூரியிலும், யாழ்.காவெட்டி திருஇருதயக் கன்னியர் மடக் கல்லூரியிலும், உடுவில் மகளிர் கல்லூரியிலும், நடேஸ்வராக் கல்லூரியிலும் இவர் கணித ஆசிரியராகப் பணியாற்றினார். பின்னர் தமிழைச் சிறப்புப் பாடமாகவும் சமஸ்கிருதத்தினைத் துணைப்பாடமாகவும் கற்று இலண்டன் பல்கலைக்கழகக் கலைமாணிப் பட்டத்தினைப் பெற்று பரமேஸ்வராக் கல்லூரியில் கணித, விஞ்ஞான ஆசிரியராகவும் யாழ்.இந்து, மத்திய கல்லூரிகளில் உயர்தர மாணவர்களுக்குத் தமிழ் ஆசிரியராகவும் விளங்கினார். 1965 - 68 காலப்பகுதியில் அரசாங்க உயர்கல்விச் சபையின் உறுப்பினராக இருந்து முதலாம், மூன்றாம், ஆறாம் வகுப்புக்களுக்கான தமிழ் மலர் நூலை ஆக்கினார். 1967 தொடக்கம் 1987 இல் ஓய்வுபெறும் வரை பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை உப அதிபராகவும், உளவியல் விரிவுரையாளராகவும் பணியாற்றினார்.

இலண்டன் பல்கலைக்கழகம் இவருக்கு 1960 இல் கல்வி டிப்ளோமாவையும் 1978 இல் முதுதத்துவமாணிப் பட்டத்தினையும் வழங்கியது. 1966 இல் இலண்டன் வானசாஸ்திரக் கழகம் இவரைத் தன் உறுப்பினராக ஏற்றுக்கொண்டு F.R.A.S. பட்டம் வழங்கியது.

பண்டிதர் "சச்சி" மிகச் சிறந்த ஆக்க இலக்கியகாரராகவும் திகழ்கிறார். அவருடைய 'ஆனந்தத்தேன்' என்னும் கவிதைத் தொகுதி இலங்கைச் சாகித்திய மண்டல விருதினையும் 'யாழ்ப்பாண காவியம்' வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி, தமிழ் அலுவல்கள், விளையாட்டுத் துறை அமைச்சின் இலக்கியப் பரிசினையும், 2000 ஆம் ஆண்டுக்குரிய சம்பந்தன் விருதினையும் பெற்றன. மிகச் சிறந்த கவிதைகளையும் இசை நாடகங்களையும் எழுதிய பண்டிதர் சச்சி, 'அன்னபூரணி' என்னும் நாவலையும் பத்துச் சிறுகதைகளையும் எழுதியுள்ளார். இவற்றைவிட இவர் 'மாவை முருகன்', 'தியாக மாமாலை', 'தமிழர் யாழியல்' என்னும் நூல்களையும் எழுதியுள்ளார். உளவியல், தமிழ் கற்பித்தல், கலைச்சொல்லாக்கம், தமிழ் இலக்கணம் தொடர்பாக ஆய்வுக் கட்டுரைகள் பலவற்றை இவர் கருத்தரங்குகளிலும், மாநாடுகளிலும் படித்துள்ளார்.

பேராசிரியர் **அ.சண்முகதாஸ்.**

சேக்கிழார் அடிப்பொடி

தில்லைஸ்தானம் நடராஜன் இராமச்சந்திரன்

தமது நண்பர்களாலும், பாராட்டுபவர்களாலும் TNR என அன்புடன் அழைக்கப்படுபவராகிய திரு.இராமச்சந்திரன் 1934ஆம் ஆண்டு தமிழ் நாட்டிலுள்ள திருநட்டம் என்னுமிடத்தில் பிறந்தவர். இவர் 1956ஆம் ஆண்டு உயர் நீதிமன்ற நியாயவாதியானார். சிறந்த பண வருவாயைத் தரவல்ல சட்ட வல்லுநராகப் பணியாற்றினாலும் சட்டத்துறையை விட தமிழ் மற்றும் ஆங்கிலமொழி சார்ந்த இலக்கியங்களை ஆழமாக வளம்படுத்தும் விருப்பத்தினால் இத்துறைக்கு இவர் ஈர்க்கப்பட்டார். தமக்கு முன் சட்டத்துறையில் நன்கு பிரகாசித்த பரிதிமாற் கலைஞர் சூரிய நாராயண சாஸ்திரி மற்றும் ரா.பி. சேதுப்பிள்ளை போன்று ஆர்வத்தினால் இவர் இத்துறைக்கு மாறியது உண்மையில் சட்டத்துறைக்கு ஓர் இழப்பாகவும் தமிழ்ப்பண்பாட்டிற்கு ஒரு வரப்பிரசாதமாகவும் அமைந்தது.

தமிழகத்திற்கும் இலங்கைக்குமிடையேயுள்ள கலாசாரத் தொடர்பு கிறிஸ்து சகாப்தத்திற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இருந்து வந்தபோதும் இங்கு வாழும் தமிழர்கள் தமது கலாசார மற்றும் ஆத்மீக வளத்திற்கு இந்தியாவையே நோக்குவது மரபாயிற்று. பிரித்தானியரின் வருகையினாலும் அதன் பயனாய் ஏற்பட்ட நவீனமயமாக்கத்தினாலும் தொன்மைக்காலம் முதல் இருந்து வந்த தொடர்பு மேலும் நன்கு இறுக்கமாக வலுப்படலாயிற்று.

இலங்கையிலும் தமிழகத்திலும் வாழும் தமிழரிடையே நிலவும் பொதுவான பண்பாட்டுப் பாரம்பரியம் தொடர்பான உள்ளுணர்வைத் தூண்டுவதில் நல்லை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் முக்கிய பணியாற்றியவர். அவர் காட்டிய வழியில் சி.வை.தாமோதரம்பிள்ளை போன்ற பெரியார்கள் தொடர்ந்தனர். இலங்கையைச் சேர்ந்த இத்தகைய அறிஞர்கள் தமிழகத்தில் வாழ்ந்து ஆய்வு முயற்சியில் ஈடுபட்ட படியினால் இரு வழிகளிலும் கருத்துப்பரிமாற்றம் நிகழ்ந்து ஒரு புதுயுகம் பிறக்க ஏதுவாயிற்று. தமிழகத்திலும், இலங்கையிலும் தமிழ் மற்றும் இந்துசமயம் சார்ந்த ஆய்வினை வளம்படுத்தக்கூடியவாறு சங்கங்களும் சஞ்சிகைகளும் உருவாகின.

வருடந்தோறும் நடைபெறும் ஆய்வரங்குகள், மாநாடுகள் போன்றவற்றில் பங்குகொள்வதற்கும், ஆய்வுச் சஞ்சிகைகளில் எழுதுவதற்கும் இரு பக்கங்களிலிருந்தும் அழைப்புகள் விடுக்கப்பட்டுவருவது இன்றுவரை நடைமுறையில் இருந்து வருகின்றது. இவ்வகையில் யாழ்பல்கலைக் கழகத்தின் கருவூலமாக விளங்கிய பரமேஸ்வராக் கல்லூரியின் நிறுவனராகிய சேர்.பொன்.இராமநாதன் 1904ஆம் ஆண்டு சிதம்பரத்தில் நடந்த முதலாவது சைவசித்தாந்த மகாநாட்டிற்கு தலைமைவகிக்க இன்றியமையாதவாறு அழைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. சைவசித்தாந்தத்தில் மிகச்சிறந்த புலமைத்துவம் மிக்கவராகிய TNR அவர்களை, சேர்.பொன். இராமநாதன் நினைவுச் சொற்பொழிவினை நிகழ்த்துவதற்கு எமது பல்கலைக்கழகம் அழைத்துள்ளமை எவ்வளவு தூரம் பொருத்தமாகவுள்ளது என்பதை மேற்குறித்த சம்பவம் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

TNR அவர்கள் சுப்பிரமணிய பாரதியைப் பெரிதும் நேசிப்பவர். அவரது பாடல்களை மொழிபெயர்த்துள்ளார். அவரது மொழிபெயர்ப்புப் பற்றி அகில இந்திய வானொலி விமர்சகர் ஒருவர் "கற்பனைவளம் மிக்கவராகவும், சிறந்த கவிஞராகவும், அறிஞராகவும், விமர்சகராகவும், மறைஞான சிந்தனையாளராகவும், தத்துவவாதியாகவும், மொழிபெயர்ப்பாளராகவும், பதிப்பாசிரியராகவும் பல்வேறு நிலைகளில் மிகவும் மகிழ்ச்சிகரமாக ஈடுபட்டு சிறந்த ஆற்றல் மிக்கவராகத் திகழ்பவர் எனக் குறிப்பிட்டுள்ளார். இவரது ஆற்றல் இன்றும் விளங்கிக்கொள்ள முடியாத ஒரு புதிராகவே உள்ளது.

எவ்வாறாயினும், இவரது ஆர்வம் சேக்கிழார் பற்றியும், சைவசித்தாந்தம் பற்றியுமே அமைந்தது. சைவசித்தாந்த ஆய்வில் இவரை ஈடுபாடுகொள்ளச் செய்தவர் சேக்கிழார் பெருமானே என்பது இவரது நம்பிக்கை. 4286 பாடல்களைக்கொண்ட பெரியபுராணத்தை முதன் முதலாக இவரே மொழிபெயர்த்தவர்.

இதனைவிட வேறுபல துறைகளும் இவருக்கு புகழீட்டித்தந்தன. திருக்கோவையார், காரைக்கால் அம்மையாரது பாடல்கள், திருநாவுக்கரசுநாயனாரின் முதலாம் திருமுறையில் வரும் திருத்தாண்டகங்கள், பதினான்கு மெய்கண்ட சாஸ்திர நூல்களில் ஏழு நூல்கள் ஆகியவற்றையும் மொழிபெயர்த்த பெருமை இவருக்குண்டு. தமிழ் மற்றும் சமஸ்கிருதம் தவிர்ந்த ஏனைய மொழிகளில் வெளிவந்த சைவசித்தாந்த நூற்பட்டியல் தொடர்பாக விளக்கங்களுடன் கூடியதாக இவர் வெளியிட்ட கைந்நூல் சைவம்பற்றி ஆய்வு செய்பவர்களுக்கு மிகவும் இன்றியமையாததொன்றாகும் என்பது குறிப்பிடற்பாலது.

மேலும் பதி, பசு, பாசம் பற்றியும், சேக்கிழார் பற்றியும் இவர் எழுதி வெளியிட்ட கைந்நூல்கள் சிந்தனைக்கு விருந்தாக அமைவன. எதையும் நிறைவாகவும் சிறப்பாகவும் வெளியிட வேண்டும் என்ற கொள்கையுடையவராதலால் TNR அவசரப்பட்டு எதனையும் வெளியிடாமல் தாம் ஆய்வு செய்பவை தொடர்பான விவரங்களைத் தேடிப் பிடிப்பதில் பல வருடங்களாகக் கடுமையாக ஈடுபடுவர்.

இவற்றைவிட இவர் கலா சம்ரக்ஷண சங்கத்தின் ஆரம்பகாலத் தலைவருமாவார். இச்சங்கம் மிகவும் அருமை பெருமைமிக்க பழைய கையெழுத்துப் பிரதிகளை மறுபிரசுரம் செய்துவருவது குறிப்பிடத்தக்கதாகும். சைவசித்தாந்தம் மற்றும் சைவசித்தாந்த சமாஜத்தின் சஞ்சிகை ஆகியவற்றின் ஆசிரியராக விளங்குபவர். மேலும் தாமபுரத்திலுள்ள அனைத்துலக சைவசித்தாந்த ஆய்வு நிறுவனத்தின் கௌரவ பணிப்பாளருமாவார். இவரது அளப்பரிய பணிகளுக்காக தாமபுர ஆதீனம் இவரைக் கௌரவித்துள்ளது. 1984ஆம் ஆண்டு 'சைவசித்தாந்த கலாநிதி' என்ற பட்டம் இவருக்கு வழங்கப்பட்டது.

பேராசிரியர் **க.சிற்றம்பலம்.**

பேராசிரியர்

கந்தையா குணரத்தினம்

1934ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி யாழ்ப்பாணம், ஏழாலையில் பிறந்த பேராசிரியர் கந்தையா குணரத்தினம் தமது பாடசாலைக் கல்வியைத் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிற் பெற்றார். அரசினால் நடத்தப்பட்டு வந்த உயர்தரப் பாடசாலைச் சான்றிதழ் (HSC) தேர்வில் 1953ஆம் ஆண்டு அகில இலங்கையில் முதற் பிரிவில் சித்திபெய்திய இரு மாணவர்களில் இவரும் ஒருவர். இதன்மூலம் இவர் தமது பாடசாலைக்குக் கௌரவத்தை தேடிக்கொடுத்தார்.

1954இல் கொழும்பு, இலங்கைப் பல்கலைகழகத்துக்கு அனுமதிக்கப்பட்ட பேராசிரியர் குணரத்தினத்துக்கு மூன்று வருடத்தில் கணிதத்தைச் சிறப்புப் பாடமாகக் கற்றுத்தேறும் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டதாயினும், அவர் பௌதிகவியலைச் சிறப்புப் பாடமாகக் கற்பதை விரும்பித் தேர்ந்து 1958ஆம் ஆண்டில் பௌதிகவியல் முதற் பிரிவில் தேறியதுடன் பௌதிகவியலுக்கான 'கலாநிதி கேவாவிதாரண' நினைவுப் பரிசையும் தனதாக்கிக் கொண்டார். 1958ஆம் ஆண்டிலேயே கொழும்பு இலங்கைப் பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராக நியமிக்கப்பட்டு, அமரர் பேராசிரியர் ஆ.வி.மயில்வாகனம் அவர்களின் வழிகாட்டலின் கீழ் அங்கு பணியாற்றினார்.

1960ஆம் ஆண்டில் லண்டன் இம்பீரியல் கல்லூரிக்குச் சென்ற பேராசிரியர் குணரத்தினம், அங்கு புவிப் பௌதிகவியற்றுறையில் பேராசிரியர்கள் ஜே.எம்.புறக்ஷோ, ஆர்.ஜி.மேசன் ஆகியோர்களின் வழிகாட்டலின் கீழ் தமது பட்டப்பின்படிப்பு ஆய்வுகளில் ஈடுபட்டார். 1963ஆம் ஆண்டில் லண்டன் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டத்தையும், இம்பீரியல் கல்லூரியில் DIC பட்டத்தையும் பெற்றார். புவியீர்ப்பு மற்றும் காந்தப் புலங்களது சீரிலிகளை விளக்குவதற்கு இலத்திரனியற் கணனிகளின் பிரயோகங்கள் பற்றியதும் மிகவும் சிறந்ததெனப் பாராட்டப்பட்டதுமான அவரது கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வுக் கட்டுரை வேறு பல ஆய்வாளர்களின் ஆய்வுக்கான அடித்தளமாகவும் அமைந்தது. அவரால் வடிவமைக்கப்பட்ட கணனிக் கணித முறை நுட்பங்களும், படிமுறைகளும் கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த F.J.வைன் (இப்போது FRS) என்பவரால் இக்காலத்தில் மிகவும் பிரபல்யம்பெற்று விளங்கும் 'சமுத்திரத் துரைகளின் பரவலும் கண்டங்களின் நகர்வும்' பற்றிய ஆய்வுகளில் பெரிதும் உபயோகப்படுத்தப்பட்டன.

1975ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இங்கிலாந்தில் இருந்து வெளிவரும் மான்செஸ்ரர் கார்டியன் என்ற பத்திரிகையின் விஞ்ஞானப் பகுதி ஆசிரியருக்கு வழங்கியவொரு செவ்வியில், பேராசிரியர் வைன், பேராசிரியர் குணரத்தினத்தை 'உண்மையிலேயே பெருந்திறமை மிக்க இலங்கையர்' (really brilliant Ceylonese) என அழைத்துப் புகழாரம் சூட்டினார். பேராசிரியர் குணரத்தினது பல ஆய்வுக்கட்டுரைகள் சர்வதேச விஞ்ஞான சஞ்சிகைகளில் வெளியாகியுள்ளன. அவரது கட்டுரையில் ஒன்று மிக நீண்டகாலமாகப் பல்கலைக்கழகங்களிலும் ஆய்வு நிறு வனங்களிலும் "புறக்ஷோ - குணரத்தினம் குணவியல்பு வளையிகள்" என்ற பெயரில் ஒரு நியம உசாவுக் கட்டுரையாக உபயோகத்திலிருந்தது. (14ஆம் பக்கம் பார்க்க)

இலங்கை வங்கியில் ஆரம்ப நிகழ்வு

இலங்கை வங்கியின் யாழ்.மேற் தரக் கிளையில் சனிக்கிழமை தோறும் வங்கிச் சேவையை நடத்துவது தொடர்பான ஆரம்ப நிகழ்வு நேற்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் திருமதி க.துரைராஜா இதனை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் வங்கிப் பணியாளர்கள் உட்பட சமயப் பெரியோர், வணிகர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஐ-7-ரி)

சேவைக்காலச் செயலமர்வு

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 7,8,9 ஆகிய வகுப்புகளில் வாழ்க்கைத் தேர்ச்சி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலச் செயலமர்வு எதிர்வரும் 11ஆம் திகதியும் -

தரம் 7 தொடக்கம் 11 வரையான வகுப்புக்களில் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயல்முறைச் செயலமர்வு எதிர்வரும் 13ஆம் திகதியும் -

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இதேவேளை -

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் விவசாயப் பாடத்திற்குத் தோற்றும் மாணவர்களுக்கான வினாவிடை வகுப்பு எதிர்வரும் 13 ஆம் திகதி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறுமெனவும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7)

ஓவியப் போட்டி

நல்லூர் லயன்ஸ் கழகம் பாடசாலை மாணவர்களுக்கு இடையில் நடத்தும் 'கட்டாயக் கல்வி' என்னும் கருப்பொருளிலான ஓவியப்போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ஐ-7-4)

நிவாரணப் பொருள் விநியோகம்

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் நிவாரணம் பெறுவோருக்கான நிவாரணப் பொருள்கள் கடந்த வியாழக்கிழமை முதல் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த விநியோகம் எதிர்வரும் 10ஆம் திகதி புதன்கிழமை வரை இடம்பெறும். (ஐ-72)

படிவம்

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் மூன்றாம் வகுப்பிற்கு (SLEAS CLASS III) ஆள்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை விண்ணப்பப் படிவம் விற்பனையாகின்றது.

விண்ணப்ப முடிவு திகதி: 2001.11.05

பாரதி
430, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். (C-18566)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

செல்வி

முருகானந்தசோதி பார்த்தீபா

2001ஆம் ஆண்டின் 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவி **செல்வி மு. பார்த்தீபா** 137 உயர்ந்த புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்ததையிட்டு அவரை ஊக்குவித்த அதிபர், ஆசிரியர்கள், வகுப்பாசிரியர் **இரவிந்திரன்** ஆகியோரையும் ஆவரங்கால் கலையகம் கல்வி நிறுவன ஆசிரியர்களையும் **கேமலதாஸ்** ஆசிரியர் அவர்களையும் மற்றும் இவரை ஊக்குவித்த மாணவி **தர்ஷிகா** அவர்களையும் நன்றி தெரிவித்துப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆவரங்கால் கிழக்கு, புத்தூர். (93102) - **பெற்றோர்கள்.**

பாராட்டி வாழ்த்துகின்றோம்

நேற்று (06.10.2001) சனிக்கிழமை நடைபெற்ற யாழ்.பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் கலைமாணி B.A.(HONS) பட்டம்பெற்ற **நடராசா செல்வாம்பிகை** (கல்வியங்காடு, ஞானபாஸ்கரோதய வீதி) அவர்களையும், பொது நிர்வாகத்துறை பட்டப்பின் படிப்பில் பட்டம்பெற்ற **S.K.பிரபாகரன்** (உடுவில், கணக்காய்வு உத்தியோகத்தர்) அவர்களையும்

நாம் உளமாரப் பாராட்டி வாழ்த்துவதோடு, அவர்கள் மேலும் பல உயர்வுகளைப்பெற்று நீடுழிவாழ வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்:

சத்தியவரதன் மஞ்சுளா குடும்பத்தினர்.
வரதபாஸ்கரன் தயானி குடும்பத்தினர்.
சுப்பிரமணியம் தங்கேஸ்வரி குடும்பத்தினர். (93112)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

கொக்குவில் இந்துவின் மைந்தர்களும் எமது ஆருயிர் அன்பு நண்பர்களுமான

பொ.வாகீசன்
B.A.(HONS)

மு.அசோக்குமார்
B.A.(HONS)

இ.முகுந்தன்
B.A.(HONS)

வே.விஜயநேசன்
B.A.(HONS)

ஆகியோர் நேற்று (06-10-2001) சனிக்கிழமை யாழ்.பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றனர். எமது நண்பர்களான இவர்கள் சகல செல்வங்களையும் பெறுவதுடன், பல்லாண்டுகாலம் மகிழ்ச்சிகரமான எதிர்காலத்தைப்பெற்று வாழவேண்டுமென நாம் வாழ்த்துகின்றோம்.

(C/18563) - நண்பர்கள்.

கண்ணீர் அஞ்சலி



வடஇலங்கை சர்வோதய அமைப்பாளரும், புங்குடுதீவு பெருங்காடு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரும், புங்குடுதீவு பெருங்காடு தெற்கு விவசாய சம்மேளனத் தலைவரும், பிரதேச செயலக மட்டச் சிறுவர் கண்காணிப்புக்குழு உப தலைவரும் சமூக சேவையாளருமாகிய

கந்தையா திருநாவுக்கரசு

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக!

புங்குடுதீவு - 03

புங்குடுதீவு பெருங்காடு கிராஞ்சியம்பதி
கந்தசுவாமி கோயில்
பரிபாலன சபையினர். (93106)

நாவுக்கரசே நவில்கின்றோம் அஞ்சலி

அமரர் கந்தையா திருநாவுக்கரசு

குருவடி பணியுந் திருவரு ளணைய
பெருகிடு புகழொடு பெரும்பணி யாற்றும்
திருவுடை நாவுக் கரசாய்த் திகழ்ந்த
ஒருபெரும் புனிதா உலகோர் போற்றும்
திருமிகு புங்கைத் திருப்பதிச் செல்வா
கமழ்ந்த மரசித் தரணியிற் காண
மகிழ்வொடு பணிபுரி மறவ னானாய்
கடியடி கண்டும் தளரா நெஞ்சொடு
முடியணி யரசை முனைப்புட னெதிர்த்தாய்
மக்கள் படுதுயர் மாளின் புவியில்
மிக்க புகழொடு மிளிருவ ரென்றே
சர்வோ தயத்தைச் சால்புட னமைத்தாய்
ஏழைகள் வாழ்வில் ஏற்றம் கொடுத்தாய்
பனைவிதை நட்டாய் பழமரம் தந்தாய்
நினைவிலும் கனவிலும் நீதிநீ பூமி
புலம்பெயர் வாலே பொலிவது இழந்து
நிலைகுலைந் ததனால் நிம்மதி இழந்தாய்
தலைநகர் வந்தும் உடல்நிலை பாரா
தெங்களின் பூமி எழுச்சியைக் காண
பங்கமில் திட்டம் பலப்பல உண்டு
பங்களித் திடுமிப் பாரே போற்றப்
புங்கை நகரைப் பொலிவுறச் செய்வோம்
என்றே நின்று முழங்கிய அன்பா
சென்றே ஈசன் பதஞ்சேர்ந் தனையோ?
நாவுக் கரசாய் நாமம் பூண்டு
பாவுக் குரிய பொருளாய்ப் போன
பண்பாய் பாதம் பணிந்தோம் என்றும்
எண்டோள் முக்கண் எம்மான் பாதம்
நண்ணிக் காண்பாய் நாளும் சாந்தி!!!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

தோற்றம் 01-03-1939 மறைவு 03-10-2001

அம்பிகை களஞ்சியம் **யாழ்ப்பாண வணிகர் நிலையம்**

சித்திவிநாயகர் களஞ்சியம்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (93120)

உண்மையும் நீதியும் ஒன்றுபடும் இடத்தில் சட்டமும் சமயமும் சங்கமிக்கின்றன

அண்மையில் தும்பளையில் நடை பெற்ற 'தேச வழமை' சட்ட நூலின் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட நீதிவான் இ.த.விக்னராஜா ஆற்றிய உரையின் தொகுப்பு இது. இதன் முதற் பகுதி கடந்த ஞாயிற்றுக்கிழமை உதயனில் பிரசுரமாகி இருந்தது.

இ.த.விக்னராஜா

உரோம டச்சுச் சட்டத்தின் கீழ் வாக்கவதூறு (Slander) எழுத்தவதூறு (Libel) என்று இரு குற்றச் செயல்கள் உண்டு. இவற்றை வைத்து வழக்குப் பதிவதானால் அவதூறுக்கிலக்காகியவன் தனக்கு அவற்றினால் மதிப்புக் குறைவு ஏற்பட்டது. (Loss of Reputation) என்பதை நிரூபிக்க வேண்டும். அதாவது மதிப்புக் குறைவு, திடமான, உணரத்தக்கதான, உறுதியான ஒன்றாகக் காட்டப்பட வேண்டும். தமிழ் நெறியின் படி கடுஞ் சொல் வராது காப்பதே அறம் ஆகவே கடுஞ்சொல், மதிப்புக் குறைவை ஏற்படுத்தியதோ இல்லையோ, அதைச் சொன்ன மாத்திரத்திலேயே அறத்திற்கு ஒவ்வாததாகி விடுகிறது. இங்கு உரிமை - கடமை என்ற இரு கருத்துக்களுக்கும் இருக்கும் வேற்றுமை புலப்படுகிறது. மேற்கத்திய சிந்தனைப்படி வெறும் அவதூறு குற்றமாகாது. அதாவது அவதூறாகப் பேசுவது கூட என் உரிமை. அது குற்றமாவதற்கு மற்றையவன் கௌரவக் குறைவுக்கு ஆளாகியிருக்க வேண்டும். அவன் தனது மதிப்புக்குப் பங்கமேற்பட்டது என்பதை ஒப்புவிக்காதுபோனால் அந்த அவதூறு குற்றமாகாது. இங்கு ஒருவனது காரியம் அல்லது செயல் அல்ல முக்கியம். அவன எப்படியும் நடக்கலாம். ஆனால் இன்னொருவனுக்குப் பாதிப்பு ஏற்பட்டதா இல்லையா என்பதே முக்கியம். தமிழ் நெறியின் படி அவதூறான சொற்கள் வாயிலிருந்தோ பேனாவில் இருந்தோ வெளிவந்த உடனேயே அது குற்றமாகின்றது. ஏனெனில் நாங்கள் கடமை வழியில் நிற்பவர்கள்; இன்னொருவரை இம்சிக்கும் எண்ணமே வரக் கூடாது. கடுஞ்சொற்களை இழுக்காய்க் கூடிதல் வேண்டும். அது எங்கள கடமை. அந்தக் கடமையில் வழுவினோமானால் குற்றம் புரிகின்றோம் என்று அர்த்தம்.

மனத்துக்கண் மாசிலனாக ஒருவன் நடந்துகொள்ள வேண்டும் என்று தமிழ்நெறி எதிர்பார்க்கையில் அவனின் பிழைப்பு வழியும் மாசற்று இருக்க வேண்டும் என்று பொருள்படுகிறது. ஆகவே மார்க்கம் எவ்வழியாய் இருப்பினும் இறுதி நோக்கே முக்கியம் என்று கூறும் மேற்கத்திய சித்தாந்தத்திற்கு நேர் மாறாகவே தமிழ் நெறி அமைகிறது. அதாவது மார்க்கமும், நோக்கமும் மாசற்றிருக்க வேண்டும் என்று தமிழ் நெறி வலியுறுத்துகிறது.

செங்கோன்மை

குடி மக்களைப் பிறர் வருத்தாமல் காத்து, தானும் வருத்தாமல் காப்பாற்றி, அவர்களுடைய குற்றங்களைத் தக்க தண்டனையால் ஒழித்தலே அரசனுடைய தொழில் என்றும் அது பழியன்று என்றும் கூறவந்த வள்ளுவப் பெருந்தகை பின்வருமாறு 549 ஆவது குறளில் குறிப்பிடுகிறார்.

"குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்"

மக்களைக் காத்துக் குற்றங் கடிதலே வேந்தன் தொழில் என்றார். அதாவது தண்டித்தல் பழிக்கப்பட வேண்டிய ஒன்றன்று. குற்றவாளியும் மற்றவர்களும் அதே குற்றத்தைச் செய்யாது தவிர்க்க தக்க தண்டனை அளித்தல் வேண்டும் என்றார் வள்ளுவர். அதை அடுத்த குறளில் பின்வருமாறு விவரிக்கிறார்.

"கொலையிற் கொடியாரை
வேந்தொறுத்தல் பைங்கூழ்
களை கட்டதனோடு நேர்" (550)

அதாவது கொடியவர் சிலரைக் கொலைத் தண்டனையால் அரசன் ஒறுத்தல் பயிரைக் காப்பாற்றக் களையைக் களைவதற்கு நிகரான செயலாகும். ஆகவே ஒறுத்தல், குற்றங்கள் மேலும் வளர்வதைக் தடைப்படுத்தவும் வேண்டும், செய்த குற்றத்திற்குத் தகுந்த தண்டனையாகவும் அமைதல் வேண்டும் என்ற கருத்தையே தமிழ்நெறி வலியுறுத்தியுள்ளது.

அதாவது செய்த குற்றத்தைத் தக்கவாறு ஆராய்ந்து மீண்டும் அக்குற்றம் செய்யாத படி குற்றத்திற்குப் பொருந்துமாறு தண்டிப்பவனே அரசன் ஆவான் என்று ஆணித்தரமாகக் கூறிவைக்கப்பட்டுள்ளது. குற்றத்திற்கு ஏற்றவாறும் குற்றவாளிக்கு ஏற்றவாறும் தண்டனை அமைய வேண்டும் என்பதே தமிழ் நெறி நோக்கு. மேலை நாட்டு அறிஞர்கள் லம்.'.பெர ரோசோ.'.பெக்காரியா போன்றோரும் இதையே தற்காலத்தில் வலியுறுத்தியுள்ளனர். குற்றவாளியை மட்டும் மையமாக வைக்காது சமுதாயத்தின் பாதுகாப்பு என்ற அடிப்படையிலும் தண்டனை அமைய வேண்டும் என்பதே அவர்கள் தீர்மானமும் ஆகும்.

யாரிடத்திலும் (குற்றம் இன்னதென்று) ஆராய்ந்து வெறும் இரக்கத்திற்கு இடம் கொடாமல் நடுவு நிலைமை பொருந்தி (செய்யத்தக்கதை) ஆராய்ந்து(குற்றத்திற்கு தக்க தண்டனை) விதிப்பதே நீதி முறையாகும்.

நடுவு நிலைமையைத் தமிழ்நெறி வலியுறுத்துவதைக் கவனிக்க வேண்டும் வேந்தன் சகல பலமும் கொண்டவன். அதாவது சட்டம் இயற்றும், சட்டத்தைச் செயல்படுத்தும், அத்துடன் சட்ட வலுவுக்குத் தண்டனை கொடுக்கும் அதிகாரமும் வேந்தனையே சார்ந்திருந்தது. அப்படியிருந்தும் தான்தோன்றித் தனமாக வேந்தன் நடந்துகொள்ள தமிழர்நெறி அனுமதி அளிக்கவில்லை. நினைத்த மாத்திரத்தில் சட்டம் இயற்றுவதும் குறிப்பிட்ட சிலரைக்குறிவைத்து சட்டம் இயற்றுதலும் நடந்து முடிந்த செயல்களை பின்நோக்கிய சட்டங்களால் குற்றங்கள் ஆக்குவதும் அராஜக அரசாங்கங்களின் குணாதிசயங்கள். ஆனால் அப்படியில்லாமல் நீதி வழிநின்று, நடுவுநிலை வகித்து, குறத்திற்கேற்றதும், குற்றவாளிக்குப் பொருத்தமானதுமான தண்டனையை விதிக்க வேண்டும் என்றே கூறப்பட்டது. இரக்கத்திற்கு இடம் கொடுக்கப்படாது என்பதற்குக் காரணம் சமுதாயக் களைகளை வேரோடு எடுத்து எறிந்துவிட வேண்டும் என்பதே. சமுதாய நலன்கருதி நன்னோக்குடன் கூடிய சமுதாய அறுவைச் சிகிச்சை அளிக்கலாம் என்று தமிழ்நெறி சொல்லாமல் சொல்கிறது. குற்றவாளியின் நலன்களை மட்டும் சிந்தித்து சமுதாய நலனைப் புறக்கணிக்கும் ஒரு பழக்கம் அண்மைக்காலத்தில் எங்கள் நாட்டு நீதித்துறையில் பரவி வந்தமையே இன்றைய சமுதாய சீரழிவுக்குக் காரணம் என்று கருதுவாரும் உளர். எது எவ்வாறிருப்பினும் தனி மனிதச் செயல்கள் சமுதாயத்தைப் பாதித்த விதமானது தமிழர் நெறியின் கண்ணோட்டத்திலிருந்து வந்துள்ளது என்பது தெரியவருகிறது.

நடுவு நிலைமை

நீதிக்கு அத்தியாவசியமானது நடுவு நிலைமை. அதைப் பின்வருமாறு வர்ணிக்கிறார் வள்ளுவர்:-

"சொற்கோட்டம் இல்லது செப்பம்
ஒருதலையா
உட்கோட்டம் இன்மை பெறின்"
(119)

அதாவது, சொல்லில் கோணுதல் இல்லாத தன்மையையும் உள்வத்தில் கோணுதல் இல்லாத தன்மையையும்' உறுதியாகப் பெற்றால் அதுவே நடுவு நிலைமையாம். நீதியின் அடிப்படையிலான சமுதாயம் அமைய வேண்டும் என்றால் அச்சமுதாயத்தில் நீதிபதிகள் ஸ்தானத்தில் இருந்து கடமை ஆற்றுவோர் பக்கச் சார்பற்றவர்களாக இருத்தல் வேண்டும். அதேபோல் நிர்வாக அடிப்படையில் கடமை ஆற்றுவோரும் நடுவு நிலைமை வகிக்க வேண்டும்.

111ஆவது குறளில் வள்ளுவர் பின் வருமாறு கூறுகிறார்:

"தகுதி எனவொன்று நன்றே
பகுதியால்
பாற்பட்டு ஒழுகப் பெறின்"

அந்தந்தப் பகுதிதோறும் (அதாவது நண்பர்கள், எதிரிகள், அயலவர் போன்றோர் சம்பந்தமாக) முறையோடு பொருந்தி ஒழுகி நிற்க நடுவு நிலைமை என்ற அறமே நல்லதாகும். ஆகவே மனிதர்களுள் அந்தஸ்தில் உள்ளவர்கள் எல்லா நிலையிலும் தமது உறவுகள், தொடர்புகள் சம்பந்தமாக நடுவு நிலைமையின் பாற்பட்டால் சமுதாயத்திற்கு நன்மை பயக்கும் என்பதே தமிழ் நெறி.

118ஆவது குறளில் மேலும் இதை விளக்கிக் கூறுகிறார் வள்ளுவர்.

"சமன்செய்து சீர்தூக்குங் கோல்
போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி"

அதாவது, முதலில்தான் சமமான மனோநிலையில் இருந்து, பின்னர் பண்டங்களைச் சீர்தூக்கும் துலாக்கோல் போல் அமைந்து, எப்பக்கமுஞ் சாயாமல் நடுவு நிலைமையில் இருப்பதே அறிஞர்களுக்கு அழகு என்கிறார். மனதைப் பக்கச் சார்பாக எவை எவை உடந்தையாக இருப்பனவோ அவற்றை நீக்கி மனதைச் சமநிலைப்படுத்திச் சீர்தூக்கிப் பார்க்கும் நிலைமை நடுவு நிலைமை என்று கூறினார். முதலில் மனதைச் சமன்படுத்தியே பின்னர் பிரச்சினைகளைச் சீர்படுத்த வேண்டும் என்றார்.

மேற்கண்ட உதாரணங்களில் இருந்து சட்டத்தை நிலைநாட்டுவோரின் மனோநிலை எவ்வாறு அமைய வேண்டும் என்றும் அறியக்கூடியதாய் இருக்கிறது. தமிழ்நெறி நடைமுறைச் சட்டத்திற்குக் கொடுத்திருந்த அதே முக்கியத்துவத்தை அல்லது அதற்கு மேலான முக்கியத்துவத்தை சட்டத்தை நிலைநாட்டுவோரின் மனோநிலைக்கும் கொடுத்திருந்தது. அதாவது எத்தனை நல்ல சட்டங்கள் இருந்தாலும் அவற்றை நடைமுறைப்படுத்துவோர் தூய்மையற்றவற்றவர்களாக, நேர்மையற்றவர்களாக இருந்தால் நீதி கிடைக்காது என்பதை அறிந்து நீதியின் காவலர்களின் மனோநிலையை மிகவும் வலியுறுத்திக் கூறியது தமிழ்நெறி. "சட்டம் என்பது தருக்க சாஸ்திரக் கோட்பாடுகள் அல்ல; அது வாழ்க்கை" என்றார் ஹரல்ட் இலஸ்கி என்ற அறிஞர். சட்டம் மனித இனத்தின் யதார்த்த நிலையோடு ஒன்றியது. ஆகவே நீதி வழங்குவோர் பக்கச் சார்பில்லாமல் பண்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்று தமிழ் நெறி எடுத்துக்காட்டியது. அன்றைய கால சமூக விதிப்படிகளுக்கும், வர்ணாஸ்ரம விதிகளுக்கும், வாழ்க்கை முறைக்கும் அமைய அப்பேற்பட்ட ஒரு சமுதாயத்தை நல்ல முறையில் எவ்வாறு கொண்டு நடத்த வேண்டும் என்று தரப்பட்ட தமிழ் நெறி இன்றும் எமக்குப் பேருதவியைத் தந்து நிற்கிறது. அது மட்டுமல்ல, சகலருக்கும் கல்வி பொதுச் சொத்தாக்கப்பட்டு மரபுவழிச் சமுதாயப் பிரிவுகள் நைந்து நலிவுற்றுக், பொதுவுடமைச் சித்தாந்தங்கள் மேலோங்கி நிற்கும், இந்தக் கால கட்டத்திலும் அடிப்படைப் பேருண்மைகள் நடைமுறைச் சாத்தியம் பெற்றிருப்பதை நாங்கள் காண்கிறோம். மேற்கத்திய சட்ட நெறி பல விதங்களில் மாற்றியமைக்க வேண்டியிருந்தும் தமிழ் நெறியின் அடிப்படைக் கருத்துக்கள் இன்றும் ஏற்புடைத்தாக இருக்கின்றதென்றால் அதற்குக் காரணம் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் மனிதனின் சிந்தனையுள்ளை மையமாக வைத்தே, மனதை மையமாக வைத்தே, தமிழ் நெறி உருவாகியது என்பதே. சட்டங்கள் வரலாம் போகலாம், சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அல்லது சட்டத்திற்கு அமைவாக நடக்க வேண்டிய மனிதர்களின் மனங்கள் என்றென்றும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியான அல்லல்கள், அவலங்கள், துயரங்களுக்கும், மயக்கங்களுக்கும் முகங்கொடுக்க நேர்வதால் தமிழ் நெறி இன்றும் இயல்புடையதாக இருக்கின்றது.

இறுதியாக, சமயமும் சட்டமும் பற்றிய அச்சத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். நான் வளர்க்கப்பட்ட சூழலிருந்தும் - கற்பிக்கப்பட்ட முறையில் இருந்தும் ஒரு புறமும், வாழ்க்கை அனுபவத்திலிருந்தும் மறு புறமும் இறை நம்பிக்கை ஏற்பட்டது. சட்டத்தரணியாகவும் தற்போது நீதிபதியாகவும் கடமையாற்றும் பொழுது எனக்கு ஏற்பட்ட அனுபவங்கள் இறை நம்பிக்கையில் பரிபூரணத்துவத்தை நோக்கியதாகச் செல்வதை உணரமுடிகிறது. அநேகர் சமயமும் சட்டமும் ஒன்றாக இல்லையென எண்ணுகிறார்கள். அப்படி எண்ணுபவர்கள் சமயம் பற்றியும் சட்டம் பற்றியும் தவறான கருத்துக்களைக் கொண்டிருக்கிறார்கள் என்பதே எனது தாழ்மையான அபிப்பிராயமாகும்.

சட்டத்தின் நோக்கம் உண்மையைப் பகுத்துணர்ந்து நீதியை மக்களிடையே நிலைநாட்டுவதே ஆகும். ஆனால் உண்மை என்றால் என்ன? நீதி என்றால் என்ன? என்ற இரு பிரதான கேள்விகளில்தான் சமயமும் சட்டமும் சங்கமமாகின்றன. இறை உண்மையையும் நீதியையும் நாம்காணமுடியாது. அது தற்காலிகமானது அல்ல; நித்தியமானது. மனிதன் எவ்வாறு உண்மை எது, நீதி எது என்று அறியமுடியும்? அது மனிதனது அறிவாற்றலின் வெளிப்படுத்தல் அல்ல. ஆனால் அது அவனது உள்மனத்தின் ஆத்மீக வெளிப்படுத்தலாகும். எனவே, சட்டம் சமயக் கோட்பாடுகளுக்குள்ளே இருந்து தோன்றி மனிதவாழ்வுக்கு ஒளியூட்டும் ஒளிக்கற்றைகளாய் இருப்பதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

★

புலிகள் பிரமுகர் கரிகாலனின் பேட்டிக்கு யாழ்.படைத் தலைமையகம் விடுத்த பதில்

'உண்மையை மறைக்க முடியாது' என்று தலைப்பிட்டு யாழ்.படைத் தலைமையகத்தில் இருந்து படைகளின் கட்டளை அதிகாரியால் உதயனுக்கு அனுப்பிவைக்கப்பட்ட அறிக்கை இங்கு முழுமையாகப் பிரசுரிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் அம்பாறை - மட்டக்களப்பு மாவட்டங்களின் அரசியல்துறைப் பொறுப்பாளரும், அந்த அமைப்பின் மூத்த பிரமுகர்களில் ஒருவருமான கரிகாலன், அண்மையில் மட்டக்களப்பில் வைத்து செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்திருந்தார். அவரது பேட்டி தொடர்பான செய்தி கடந்த மாதம் 4 ஆம் திகதி உதயனில் முதலாம் பக்கத்தில் 'குடாநாட்டையும் விரைவில் பிடிப்போம்! கிழக்கிலும் படைகளை விரட்டுவோம்! - புலிகளின் மூத்த பிரமுகர் கரிகாலன் கூறுகிறார்' என்ற தலைப்பில் பிரசுரமாகியிருந்தது. அந்தச் செய்திக்குப் பதிலளிக்குமுகமாகவே படைத் தலைமையகம் இந்த அறிக்கையை விடுத்திருக்கிறது.

2001.09.04 ஆம் திகதி 'உதயன்' செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட 'பெற்றோர்கள் தாம் விரும்பியே பிள்ளைகளை புலிகள் இயக்கத்துக்கு வழங்குகின்றனர்' என்ற கடிதத்துக்குப் பதிலளிக்குமுகமாகவே இது.

வடக்கு - கிழக்குப் பிரதேசத்தை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுவரும் யுத்தத்தின் காரணமாக, கடந்த 20 வருடங்களுக்குட்பட்ட காலப்பகுதியில் நாடு இழந்துவிட்ட உயிர்கள், சொத்துக்களின் சேதங்களும், அழிவுகளும் கொஞ்ச நஞ்சமல்ல. இதன் விளைவுகள் முழு நாட்டையுமே பாதித்துள்ளதுடன், அதிலும் அதிகமான பாதிப்பிற்கும், இடையூறுகளுக்கும் ஆளானவர்கள் வடக்கு - கிழக்கின் அப்பாவிப் பொது மக்களே. குறிப்பாக விடுதலைப் புலிகளின் மிலேச்சத்தனமான நடவடிக்கைகள் காரணமாக ஆயிரக்கணக்கான மக்களுக்கு தமது இருப்பிடங்களைக் கைவிட்டு அகதிகளாக வேண்டி நேரிட்டது. இவர்களுக்கு அரசாங்கததின் கட்டுப்பாட்டின் கீழுள்ள பிதேசங்களில் மட்டுமே சிறிதளவேனும் ஆறுதல் கிடைக்கின்றது என்பதில் ஐயமில்லை.

விடுதலையைப் பெற்றுக்கொடுப்பதென்ற போர்வையில் காலத்துக்குக் காலம் தமது அதிகார மோகத்தை நிறைவேற்றிக்கொள்வதற்காகத் தருணம் பார்த்திருக்கும் புலிகள், தற்போது அப்பாவிப் பெற்றோர்களின் பிள்ளைகளை யுத்தத்தில் சேர்த்துக்கொள்ள ஆரம்பித்துள்ளனர். அதற்காகப் பல்வேறு ஏமாற்றுவார்த்தைகளைக் கூறி மக்களின் முன்னால் முதலைக் கண்ணீர் வடிக்கும் இவர்கள், எப்படியேனும் தமது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள முன்வந்துள்ளனர். அதன்படி சொந்த விருப்பத்தின்பேரில் இயக்கத்தில் வந்து இணைந்துகொள்ளுமாறு இளைஞர்களுக்கும், பிள்ளைகளுக்கும் கூறும் புலிகள், அதற்காக செப்ரெம்பர் மாதம் 20ஆம் திகதி வரையிலான கால அவகாசத்தையும வழங்கியிருந்தனர்.

ஆனால், எவ்வகையிலேனும் தமது பிள்ளைகளைப் புலிகள் இயக்கத்தில் சேர்க்க விரும்பாத பெற்றோர்கள், பயங்கரவாதிகளின் இந்த நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர். ஆனாலும் கடந்த 2001.09.04 ஆம் திகதி உதயன் பத்திரிகையில் பிரசுரமான தகவல்களில், இந்த நிலைமையானது முற்றிலுமாகத் திரிபுபடுத்திக் கூறப்பட்டிருந்தது. பெற்றோர்கள் தமது சொந்த விருப்பத்தின்பேரில் பிள்ளைகளை புலிகள் இயக்கத்துக்கு வழங்கவில்லை என்பதுடன், ஓரிரு கோழைகள் மாத்திரமே புலிகள் இயக்கத்தின் மீதுள்ள பயத்தின் காரணமாக அவவாறு செய்துள்ளனர். பெரும்பாலான பெற்றோர்கள் தமது பிள்ளைகளைப் பாதுகாத்துக்கொள்வதற்காக அவர்களைப் படையினரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள கல்லடி, ஆரையம்பதி, நாவற்குடா, புதுக்குடியிருப்பு, செட்டிகுளம், மாமாங்கம், ஊரணி மற்றும் மட்டக்களப்பு போன்ற பிரதேசங்களுக்கு அனுப்பியுள்ளதுடன், அவ்வாறு செய்த பெற்றோர்களுக்குத் தண்டனை வழங்கவும் புலிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

எல்லைப்புறக் கிராமங்களில் இருகும் சிங்கள, முஸ்லிம் மக்களை விரட்டியடிப்பதற்காக பிரதேச மட்டத்தில் தமது பலத்தைப் பெருக்கிக் கொள்ளத் தருணம் பார்த்திருக்கும் புலிகள் இயக்கம், அதற்காகப் பல வந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது. அவ்வாறில்லாது 'உதயன்' பத்திரிகையில் வெளியான தகவல்களின்படி விரும்பியோ அல்லது புலிகள் இயக்கத்தின் மீதுள்ள அபிமானத்தினாலோ பெற்றோர் பிள்ளைகளை இயக்கத்துக்கு வழங்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். (ஐ)

1st BIRTHDAY GREETING

07-10-2001

HAPPY BIRTHDAY

செல்வன் ஜதீசன்

குலேந்திரன் - கலாறஜனி தம்பதியினரின்
செல்வப்புதல்வன்

ஜதீசன்

அவர்கள்

தனது முதலாவது பிறந்தநாளை இன்று(07-10-2001) மூரிற்றுக்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். ஜதீசனை அவரது அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரிப்பாமார் குடும்பத்தினர், மாமா குடும்பத்தினர், அத்தைமார், குடும்பத்தினர், சித்தியர், சின்னமாமா, ஜேனா அண்ணா, ரமேஸ் அண்ணா, சுபோ அக்கா மற்றும் அனைவரும் அம்மனை அருள் பெற்று பல்லாண்டு கற்று பல்லாண்டு காலம் நீடூழி சிறப்புடன் நீடூழி வாழ்க வாழ்கவென் மனமார வாழ்த்துகின்றார்கள்.

குலேந்திரன் - கலாறஜனி
தம்பதியினர்.

132, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (93018)

கண்ணீர்க் காணிக்கை

அறங்காவலரும் சர்வோதயப் பொறுப்பாளருமான
கந்தையா திருநாவுக்கரசு

அவர்களின் மறைவுக்கு கண்ணீர்க் காணிக்கை சமர்ப்பிக்கின்றோம். மாநிலம் போற்றும் மகத்தான சேவை செய்த மகானை நினைந்து இங்கு கதறுகின்றோம் நாம்!

அமரர் வித்துவான் பொன் - அகனகசபை குடும்பத்தினர்,
புங்குடுதீவு - 3

(93084)

மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,ஒக்.7

கோப்பாய் லயன்ஸ் கழகம் நடத்தும் இலவச மருத்துவ முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சிறுப்பிட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

இந்த முகாமில் கண் மற்றும் நீரிழிவு பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. வறுமைக் கோட்டுக்குட்பட்டோருக்கு இலவசமாகக் கண்ணாடியும் வழங்கப்படவுள்ளது.

(ஐ-10)

கண்ணீர் அஞ்சலி

வட இலங்கை சர்வோதயப் பொறுப்பாளரும், அறங்காவலரும் தன்னிகரில்லாத சமூக சேவையாளரும், உன்னத பண்பாளருமான

கந்தையா திருநாவுக்கரசு

அவர்களின் திடீர் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக!

- இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
வேலணைப் பிரிவு.

(93075)

நெஞ்சகலா நினைவஞ்சலிகள்

26ஆம் ஆண்டு

அமரர்
இரா.செல்லையா
(ஸ்தாபகர் - சன்ஸைற் றைக்கிளினர்ஸ்)

முதலாம் ஆண்டு

திருமதி
செல்லையா நல்லம்மா

அன்னை மடியில்
30-05-1914 13-05-1930

இறைவன் அடியில்
30-09-1975 17-10-2000

எங்கள் குடும்பத்தின் குலவிளக்குகளே!
எங்கள் நெஞ்சம் துடிக்குதையோ - உங்களை எண்ணி
நீங்கள் எம்மிடம் விட்டுச் சென்ற பணிகளை
எங்களால் தொடர உங்கள் ஆசி வேண்டுகின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

30/2, மருதடி ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம். (93045)

யாழ்மாவட்ட மக்களுக்கு

இலங்கை வங்கியின்
இனிய செய்தி

தங்க நகை அடகு கடன் சேவை

☆ **பருத்தித்துறைக் கிளையில்**

ஆரம்பம்:- 08.10.2001 திங்கட்கிழமை மு.ப. 9.30 மணியளவில்

☆ **சுன்னாகம் கிளையில்**

ஆரம்பம்:- 10.10.2001 புதன்கிழமை மு.ப. 9.00 மணியளவில்

☆ **மானிப்பாய்க் கிளையில்**

ஆரம்பம்:- 10.10.2001 புதன்கிழமை மு.ப. 11.00 மணியளவில்

இலங்கை வங்கி வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் திருமதி க.துரைராஜா அவர்களால் ஆரம்பித்து வைக்கப்படும். வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் திரு.க.பாலசுப்பிரமணியம் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பிப்பார்கள்.

வாரத்தில 5 நாள்கள் மு. ப. 9. 00 மணிமுதல் பி. ப. 1. 30 மணிவரை உங்களுக்காகத் திறந்திருக்கும்.

☆ வைப்புகளுக்கு அதிஉயர் வட்டி வீதங்களை
வழங்குவது இலங்கை வங்கியே.

பிரதேச முகாமையாளர்,
இலங்கை வங்கி,
யாழ்ப்பாணம்.

இலங்கை வங்கி
உங்கள் தேவைகளைச் சந்திக்கும்.

(C-18517)

தென்மராட்சிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான செயலமர்வு

தென்மராட்சி, ஒக். 7

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 10, 11 ஆகிய வகுப்புக்களில் தமிழ், கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி, வணிகக் கல்வி, ஆங்கிலம் ஆகிய பாடங்கள் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பாடசாலை மட்டக் கணிப்பீட்டுச் செயலமர்வுகள் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

தமிழ், கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி, வணிகக் கல்வி ஆகிய பாடங்களின் செயலமர்வு இன்றும் நாளையும் ஆங்கில பாடச் செயலமர்வு எதிர்வரும் 13 ஆம் திகதியும் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார்.

இதேவேளை —

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 7 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புகளில் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செய்முறை தொடர்பான செயலமர்வு எதிர்வரும் 13 ஆம் திகதி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

(க–117)

எழுதுமட்டுவாழ் மாணவருக்கு!

யாழ்ப்பாணம், ஒக். 7

எழுதுமட்டுவாழ் ஸ்ரீ கணேசா வித்தியாலயத்திலிருந்து இவ்வருடம் சித்திரை மாதத்தில் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்களில் 15 மாணவர்களின் அடையாள அட்டைகள் பாடசாலைக்கு வந்து சேர்ந்துள்ளன. சம்பந்தப்பட்ட மாணவர்கள் பாடசாலை நாள்களில் அதிபர் அல்லது உபஅதிபரைச் சந்தித்து அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு வித்தியால அதிபர் அறிவித்துள்ளார். (க-ரி)

அன்பளிப்பு

கோப்பாய், ஒக். 7

ஏழாலை சூராவத்தை புனித திரேசம்மாள் ஆலயத்திற்கு புதிய ஜெனரேட்டர் ஒன்று அண்மையில் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

கனடாவில் வசித்துவரும் எஸ். ஞானரத்தினம் என்பவரே இதனை வழங்கியுள்ளார். (க-72)

பருத்தித்துறை டிப்போவுக்கு 8 சாரதிகள்

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போவுக்கு எட்டுச் சாரதிகள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

வடபிராந்தியப் போக்குவரத்துச் சபை மேற்படி சாரதிகளுக்கு மூன்று மாத காலப் பயிற்சியை வழங்கியிருந்தது. (ஐ–7-173)

புலிகள் இயக்கப் போராளிகளிடம் மிக உயர்வான குணாம்சங்கள்

'இரத்தத் தீவு' நூலில் அனிதா பிரதாப்

புதுடில்லி, ஒக். 7

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உலகில் தேடப்படும் ஒரு மனிதராக சில சமயங்களில் இருக்கக் கூடும். ஆனால் அவர் வீதியில் நடந்து சென்றால் எவராலுமே அவரை அடையாளம் கண்டு கொள்ள முடியாத சாதாரண மனிதராகவே அவர் இருப்பார்.

இந்தியப் பத்திரிகையாளர் அனிதா பிரதாப் அண்மையில் வெளியிட்டிருக்கும் 'இரத்தத் தீவு' (Island of Blood) என்ற நூலில் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்.

இலங்கையிலும் சென்னையிலும் பிரபாகரனைப் பல தடவைகள் அனிதா பிரதாப் சந்தித்துள்ளார். முதல் தடவை அவரைத் தான் சந்தித்தபோது, தான் வாயடைத்துப் போய்விட்டதாக அனிதா கூறுகிறார்.

'நான்தான் பிரபாகரன்' என்று புலிகளின் தலைவர் தன்னை அறிமுகப்படுத்தினார். அவர் நடந்து வந்தபோது என்னால் அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. உயரம் குறைந்தவராக—சாதாரணமானவராக — இருந்தார். பல இலட்சக் கணக்கான தமிழ் மக்களிடம் இருந்து 'வேறுபடுத்திப் பார்க்க முடியாதவராகவே அவரது தோற்றம் காணப்பட்டது. அதாவது, ஒரு வர்த்தகர் அல்லது அரசாங்க ஊழியர் போன்றுதான் காணப்பட்டார்.

முதலில் நான் அவரைப் பார்த்தபோது, அவர் புலிகளின் ஆதரவாளர்களில் ஒருவரென்றே நினைத்தேன். கவனிக்கவில்லை. ஜன்னல் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு நான் பிரபாகரனுக்காகக் காத்திருந்தேன். அப்போதுதான் அவர் தன்னை அறிமுகப்படுத்தினார் என அனிதா பிரதாப் குறிப்பிட்டிருக்கிறார்.

1987 இல் டில்லியிலுள்ள அசோகா ஹோட்டலில் பிரபாகரன் தங்கியிருந்தபோது, அவரைப் பேட்டி கண்டதையும், தனது நூலில் அனிதா பிரதாப் நினைவு கூர்ந்துள்ளார். ஹோட்டலில் போடப்பட்டிருந்த கடும் பாதுகாப்பைக் கடந்து சென்றது எப்படியெனவும் அவர் விவரித்துள்ளார். ஹோட்டல் பராமரிப்பாளர்களில் ஒருவர் போன்று பாசாங்கு செய்தே தான் நுழைந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய — இலங்கை ஒப்பந்தத்திற்கு முன்னர் அச்சமயம் இந்தியப் பிரதமராக இருந்த ராஜீவ் காந்தியைச் சந்திக்க பிரபாகரன் அங்கு சென்றிருந்தார். பிரபாகரனை அனிதா பிரதாப் சந்தித்த மற்றொரு சந்தர்ப்பம் இலங்கையின் வடபகுதியிலாகும். அச்சமயம், இந்தியப் படையினர் புலிகளுடன் போரிட்டுக் கொண்டிருந்தனர். யாழ்ப்பாணத்தில் புலிகளின் செல்வாக்கு அதிகமாக இருந்த பகுதிக்குள் போகக் கூடாது என்ற தடை பத்திரிகையாளர்களுக்கு விதிக்கப்பட்டிருந்தது. அச்சமயம், அனிதா பிரபாகரனைச் சந்திக்க முயற்சி செய்துகொண்டிருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் இன நெருக்கடி விவகாரம் தொடர்பாக மிக அதிகளவில் எழுதி வந்தவர் அனிதா. தமிழ்ப் புலிகள் மிக உயர்ந்த குணாம்சங்கள் கொண்டவர்கள் என அவர் விவரித்திருக்கிறார். மிகவும் கட்டுப்பாடு, ஒழுக்கம், எளிமையான பழக்க வழக்கங்களைக் கொண்டவர்கள் என்றும், அமைப்பில் இணைந்தவுடன் நண்பர்கள், குடும்பம், வீட்டைத் துறந்து விட்டவர்களெனவும் கூறியுள்ளார்.

கரும்புலிகளின் பெருமை

வருடக் கணக்கில் முயற்சி செய்த பின் கரும்புலிகளைச் சந்திக்கச் சந்தர்ப்பம் கிடைத்ததாக அவர் கூறுகிறார். ஒரேயொரு தடவையே கரும்புலிகள் உணர்ச்சிவசப்படுவார்கள் எனவும், அதாவது தமது 'அண்ணே'யைப் பற்றி (பிரபாகரனை மிகப் பிரியத்துடன் அண்ணே என அழைப்பார்கள்.) கதைக்கும்போதே உணர்வை வெளிப்படுத்துவார்கள் என்கிறார் அனிதா.

ஆனையிறவில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலைப் பற்றி அனிதா பிரதாப் விவரித்துள்ளார். கவச வாகனம் இலங்கைப் படையினரை நெருங்கிச் சென்றபோது, அவர்கள் சுட்டனர். ஆனால் தயக்கமின்றி அரணைத் தாண்டிச் சென்று தனியொருவர் மோதியதாகவும் அந்த நபர் பெண் புலியெனவும், இரத்த வெள்ளத்தில் அப்பெண் கிடந்ததாகவும் அனிதா பிரதாப் கூறுகிறார். 'அப்பெண்ணின் ஆயுதங்கள் யாவும் வெடித்துச் சிதறிவிட்டன. அப்பெண்ணின் வயது 15 இற்குள் தான் இருக்கும். அச்சமயமும் அப்பெண் பிரக்ஞையுடன் தான் இருந்தார். அழவில்லை. சிறிதளவு முனகினாள். அப்பெண்ணின் உலர்ந்த வாய்க்குள் விமலரட்ன என்ற இலங்கைப் படைவீரர் நீரைப் பருக்க முயன்றார். ஆனால் மரணித்துக் கொண்டிருந்த அப்பெண் தண்ணீரைக் குடிக்கவில்லை. கண்கள் அகல திறந்தன. தன்னைச் சுதாகரித்துக் கொண்டு நீர் மிடறைத் துப்பிவிட்டாள். இறந்து கொண்டிருந்த அவள்... ஆனால், இலங்கைப் படைவீரரிடமிருந்து கிடைத்த நீரை அப்பெண் குடிக்கவில்லை. இறுதி மூச்சின் போது அப்பெண் புலி தனது தாயைக் கூப்பிடவில்லை. தந்தையை அழைக்கவில்லை, ஏன் சகோதரனைக் கூடக்கூப்பிடவில்லை. 'அண்ணே அண்ணே' என்றுதான் இறுதி மூச்சில் அழைத்தாள்' — என்று அனிதா பிரதாப் தனது நூலில் குறிப்பிட்டிருக்கிறார்.

பிரபாகரனும் 8 இலக்கமும்

நவம்பர் 26 ஆம் திகதி பிரபாகரன் பிறந்தார். 26 உடன் வேறு இலக்கத்தைச் சேர்த்து 8 இலக்கம் வந்தால் அது அதிர்ஷ்டமற்றது என்று பிரபாகரன் கருதுவார். மாதத்தில் 26 ஆம் திகதி வரும்போது யுத்த நடவடிக்கைகளைத் தவிர்க்கவே அவர் விரும்புவார். அவரின் பிறந்த தினம் வரும் கிழமை மாவீரர் வாரமாக அனுஷ்டிக்கப்படுகிறது. மரணமடைந்த புலி உறுப்பினர்களைக் கௌரவிப்பதற்காக அது அனுஷ்டிக்கப்படுகிறது.

அவரின் இயக்க உறுப்பினர்கள் திருமணம் செய்வதில்லை என மூன்னர் உறுதிமொழியெடுத்துக்கொண்டிருந்தனர். ஆனால் ஒரு தடவை யாழ்ப்பாணத்தில் உண்ணாவிரதம் இருந்த மாணவர்கள் குழுவைக் கடத்திவருமாறு பிரபாகரன் பணித்திருந்தார். அவர்கள் இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்டனர். அவர்களில் அழகான ஒருவரைப் பிரபாகரன் திருமணம் செய்தார். இதில் 'மிக உச்சமான இனிய காதல் கதை' உள்ளது என்றும் அனிதா பிரதாப் தனது 'இரத்தத் தீவில்' குறிப்பிட்டிருக்கிறார்.

இத்தகவலை 'இணையத் தளம்' ஒன்று வெளியிட்டிருக்கிறது. (ஐ)

ஆசிரியர் தினவிழா

யாழ். இந்துஆரம்பப் பாடசாலையின் ஆசிரியர் தினவிழா நாளை திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு மாணவர் மன்றத் தலைவர் செல்வன் ம. அழகரசன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

பாராட்டுரை, சிறப்புரை, குருகௌரவம், ஆசிரியர்களைக் கௌரவித்தல் ஆகிய நிழ்ச்சிகள் இடம்பெறும். (ஐ-3)

★ ★ ★

சங்கானைக் கல்விக் கோட்ட அதிபர்கள் சங்கம் நடத்தும் ஆசிரியர் தினவிழா நாளை திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு வட்டு. மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் செ. செல்லையா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிமனையைச் சேர்ந்த உதவிக்கல்விப் பணிப்பாளர் சோ. பத்மநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஐ-7-28)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி

வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் தவிசாளரினால் கீழ்க்குறிப்பிடப்பட்டிருக்கும் வேலைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

1. கேள்விப்பத்திரங்கள் 16-10-2001 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) தரம் எம் 9 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்தும் கேள்வி சமர்ப்பிப்பதற்கு தகுதியுள்ள பொது அமைப்புக்களிடமிருந்தும் கோரப்படுகின்றன. கீழே குறித்த தொகையைச் செலுத்தி கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
2. கேள்விப்பத்திரத்தின் ஒரு பிரதியை கடித உறையிலிட்டு அரக்கு முத்திரை வைத்து தலைவர், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை, கரவெட்டி என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இட்டு இரண்டாம் பிரதியை பிரா/உ. உ. ஆணையாளர், யாழ்ப்பாணம் அவர்களுக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். இரண்டு பிரதிகளையும் உரிய இடங்களில் 18-10-2001 முற்பகல் 11.00 மணிக்கிடையில் கிடைக்கச் செய்தல் வேண்டும்.
3. கேள்விகள் 18-10-2001 நண்பகல் 12.00 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்.
4. மேலதிக விவரங்கள் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

தொடர் இல.	வேலை விவரம்	மீளளிக்கப் படும் கேள்வி வைப்புப் பணம்	மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப் பணம்	மீளளிக்கப் படாத பொருள்கள் சேவைகள் வரி
01	சுடரொளி ச. ச. நிலைய முன்பள்ளி தளபாடம் செய்து விநியோகித்தல்	ரூ. 500/-	ரூ. 250/-	ரூ. 31.25
02	வட்டுவத்தை ச. ச. நிலைய முன்பள்ளியன்னல்கள் செய்து விநியோகித்தல்	ரூ. 500/-	ரூ. 250/-	ரூ. 31.25
03	உடுப்பிட்டி தாவலர் ச. ச. நிலைய முன்பள்ளி கட்டடம் அமைத்தல்	ரூ. 1500/-	ரூ. 250/-	ரூ. 31.25
04	சித்தம்பாதி அம்பிகை ச. ச. நிலைய முன்பள்ளி கட்டடம் அமைத்தல்	ரூ. 1000/-	ரூ. 250/-	ரூ. 31.25
05	சம்பர்மலை கலைவாணி ச. ச. நிலைய முன்பள்ளி புனரமைத்தல்	ரூ. 1500/-	ரூ. 250/-	ரூ. 31.25
06	கரணவாய் கிழக்கு கலட்டி ச. ச. நிலைய முன்பள்ளி புனரமைத்தல்	ரூ. 1500/-	ரூ. 250/-	ரூ. 31.25
07	உடுப்பிட்டி சந்தை சுற்றுமதில், கம்பிவேலி அமைத்தல்	ரூ. 1800/-	ரூ. 250/-	ரூ. 31.25
08	விண்ணன் வீதி புனரமைத்தல்	ரூ. 2000/-	ரூ. 250/-	ரூ. 31.25
09	கொம்மாந்தறை ச. ச. நிலைய நூலகம் அமைத்தல்	ரூ. 6000/-	ரூ. 250/-	ரூ. 31.25

த. ஜெயராசா ஜே.பி.
தவிசாளர்

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.

(சி/18565)

பாடசாலை மாணவர்களுக்கு சத்துணவு வழங்கும் திட்டம்

'கியூடெக்' நிறுவனத்தின் ஏற்பாட்டில்

வடமராட்சியில் மீன்பிடித் தடையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பள்ளி மாணவர்களுக்கு 'கியூடெக்' நிறுவனம் சத்துணவு (பால்மா) வழங்கிவருகின்றது.

தரம் ஒன்று முதல் தரம் 5 வரையான 900 இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு கடந்த வாரம் முதல் இவ்வாறு சத்துணவு வழங்கப் படுகின்றது.

பாடசாலை நேரத்தில் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் சோர்வான நிலையில் கல்வியில் நாட்டமின்றி காணப் படுவது அவதானிக்கப்பட்டதை அடுத்தே இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படுவதாக 'கியூடெக்' நிலைய இயக்குநர் அருட்திரு .ஜெயக்குமார் தெரிவித்தார்.

வடமராட்சிப் பகுதி மீனவர்கள் அனைவரும் தொழிலுக்குத் திரும்பும வரை இத்திட்டம் தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-9-ரி)

கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

கொடிகாமம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரவுக்குட்பட்ட கொடிகாமம் நகரம், பாலாவி, தமிழ்குளம் ஆகிய பகுதிகளில் கட்டாக்காலி நாய்களை ஒழிக்கும் வேலைகள் எதிர்வரும் பத்தாம் திகதி புதன் கிழமை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்றையதினம் சம்பந்தப்பட்ட இடங்களில் வீட்டு உரிமையாளர்கள் தமது வளர்ப்பு நாய்களை கட்டி வைத்திருக்க வேண்டும் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர் என். நிர்மலானந்தன் அறிவித்துள்ளார். (ஐ-7-117)

கௌரவ பட்டங்கள்...

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

1975 ஏப்ரலில் புதிதாக அமைக்கப்பட்ட இலங்கைப் பல்கலைக் கழக யாழ்.வளாகத்து பௌதிக வியற்றுறையின் முதற் பேராசிரியராகவும், துறைத் தலைவராகவும் நியமிக்கப்பட்ட பேராசிரியர் குணரத்தினத்திடம் பௌதிகவியற்றுறையை ஒழுங்குபடுத்தி அபிவிருத்தி செய்யும் பாரிய பொறுப்பு ஒப்புவிக்கப்பட்டது. குறைந்தளவு வளங்களுடன் ஆரம்பமான இந்தத்துறையை இன்றைய நிலைக்கு விருத்தி செய்த பெருமை அவருக்குரியதே. தற்போது பௌதிக வியற்றுறையானது எமது பல்கலைக் கழகத்தில் அதிகளவு ஆசிரியர்களைக் கொண்ட துறைகளில் ஒன்றாக விளங்குகிறது. இத்துறையில் பயின்ற சிறப்புப் பட்டதாரி மாணவர்கள் பலர், வெளிநாடுகளில் பட்டப் பின் படிப்புகளில் தமது திறமையை நிலைநாட்டியுள்ளனர்.

பேராசிரியர் குணரத்தினம் 1977 ஜனவரிமுதல் 1978மே வரையிலும், 1980டிசம்பர் முதல் 1984 பெப்ரவரி வரையிலும், 1984 ஒக்டோபர் முதல் 1988 மார்ச் வரையிலும் விஞ்ஞான பீடாதிபதியாகப் பணியாற்றினார். அவரது பதவிக் காலங்களில் அசாதாரண சூழ்நிலை நிலவியபோதிலும் அவரது வழிநடத்தலின் கீழ் விஞ்ஞான பீடம் வேகமாக அபிவிருத்தியடைந்தது.

கணனிகளின் உபயோகம் பற்றி நன்கு பயிற்சி பெற்றிருந்த பேராசிரியர் குணரத்தினம் இப்பல்கலைக்கழகத்தில் கணனித்துறையை விருத்தி செய்யப் பெரும் அக்கறை செலுத்தினார். பல்கலைக்கழகத்தின் கணனி அலகு பேராசிரியர் குணரத்தினம், விஞ்ஞான பீடாதிபதியாகி இருந்தபோது 1985ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டும், கணனி விஞ்ஞானம் இப்பல்கலைக்கழகத்தில் ஒரு பாடமாகக் கற்பிக்கப்பட பேராசிரியர் குணரத்தினம் எடுத்த சளைக்காத முயற்சிகள், 1991ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கைகூடியது. அவர் கணனி விஞ்ஞானத்துறையின் முதற் தலைவராக நியமிக்கப்பட்டு ஏறத்தாழ மூன்று ஆண்டுகள் அப்பதவியை வகித்து, அதன் அபிவிருத்திக்கு வேண்டிய பலமான அத்திபாரத்தையிட்டார்.

பேராசிரியர் குணரத்தினத்தின் ஆய்வுத் திறமைகள் தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் அங்கீகாரம் பெற்றன. அடிப்படைக் கற்கைகள் நிறுவனத்தின் (IFS) கல்விச் சபையின் ஓர் அங்கத்தவராக 1987இல் இவர் நியமிக்கப்பட்டார். 1986 இல் இத்தாலியில் இயங்கும் தத்துவப் பௌதிகவியலுக்கான பன்னாட்டு மையம் (International Centre for Theoretical Physics), பேராசிரியர் குணரத்தினத்தை அம்மையத்தின் இணை அங்கத்தவராக நியமித்தது. இலண்டன் பௌதிகவியல் நிறுவனத்தின் Institute of Physics) ஒரு சமபங்காளி (Fellow) யாகவும், இலண்டன் அரச விண்ணியற் கழகத்தின் (Royal Astronomical Society) ஒரு சமபங்காளி (Fellow) யாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். தமது துறையில் மிகவுயர்ந்த சாதனைகளைப் புரிந்த விஞ்ஞானிகளும் தமது உத்தியோகத்தில் முக்கிய பங்களிப்புச் செய்தவர்களுமே இலண்டன் பௌதிகவியல் நிறுவனத்தின் சமபங்காளியாகத் தெரிவு செய்யப்படுகின்றனர்.

பேராசிரியர் குணரத்தினம் யாழ். பல்கலைக்கழக வரலாற்றில் மிகவும் இக்கட்டானதும், மிகவும் குழப்பம் நிறைந்ததுமானதொரு கால கட்டத்தில் - 1994 ஏப்ரல் முதலாம் நாள்முதல் 1996 யூன் 30ஆம் திகதி வரை, இப்பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராகப் பணியாற்றியுள்ளார். 1995ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் யாழ்ப்பாண மக்கள் குடாநாட்டை விட்டு இடம்பெயர வேண்டியேற்பட்டபோது, பல்கலைகழக சமூகத்தின் தேவைகளையும் நலன்களையும் பேணுவதற்கு விரைந்து செயற்பட்டார். யாழ்.பல்கலைக்கழகம் சாவகச்சேரியில் அமைக்கப்பட்ட ஓர் அலுவலகத்துடன், கிளிநொச்சியில் அமைந்திருந்த விவசாய பீடத்தில் தற்காலிகமாக இயங்குவதற்கு இவர் ஏற்ற ஒழுங்குகள் செய்தார். பல்கலைக்கழகம் தொடர்ந்து இயங்குவதை உறுதி செய்துகொள்ளவும், பல்கலைக்கழக உத்தியோகத்தர் தமது சம்பளத்தைப் பெற்றுக்கொள்ளவும், மாணவர்கள் தமது நிதியுதவிக் கொடுப்பனவுகளையும் புலமைப்பரிசிற் கொடுப்பனவுகளையும் ஒவ்வொரு மாதமும் குறித்த நாள்களில் பெற்றுக்கொள்வதை நிச்சயப்படுத்தக் கொள்ளவும் இவர் மிகக் கடுமையாக உழைத்தார். தமது இறுதிப் பரீட்சைகளுக்குத் தோற்றும் தறுவாயிலிருந்தபோது ஏற்பட்ட இடப்பெயர்வால் மனஞ்சோர்ந்திருந்த இறுதி வருட மாணவர்களினது நம்பிக்கை தளர்ந்த, மோசமான நிலையைப் புரிந்து கொண்ட பேராசிரியர் குணரத்தினம் கலை,விஞ்ஞான, மருத்துவ பீடங்களினது இறுதிப் பரீட்சைகளை சாவகச்சேரி, கிளிநொச்சி, வவுனியா ஆகிய இடங்களில் நடைபெற ஒழுங்குகள் செய்தார். இடம்பெயர்ந்திருந்த போதிலும் மாணவர்கள் தமது பட்டப்படிப்புகளை மிதமிஞ்சிய காலதாமதமின்றி முடித்துக்கொள்ள இந்த நடவடிக்கை பெரிதும் உதவியது.

பேராசிரியர்
கி. குமாரசாமி.

கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை முன்னாள் ஆங்கில ஆசிரியை

திருமதி அனுசூயாதேவி கோடீஸ்வரன்

அவர்கள் 08-10-2001இல் காலமானதைஅறிந்து துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எங்களது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், ஊழியர்கள்,
(93104) யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்.

கண்ணீர் அஞ்சலி

அமரர் க.கணேசமணி

எமது கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றி இளைப்பாறிய **அமரர் க.கணேசமணி** அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

நலன்புரிச் சங்கம்,
(93111) யாழ்.மத்திய கல்லூரி.

"தனக்கெனவாழாப் பிறர்க்குரியாளன்"

யாழ்ப்பாணம், புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், மக்கள் தொண்டைத் தன் உயிர் மூச்சாகவும் கொண்டிருந்த

அமரர்

கந்தையா திருநாவுக்கரசு

அவர்களின் மறைவு தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு பெரும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

'ஈன்ற பொழுதிலும் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்' என்ற குறளுக்கு ஏற்ப தன்னம்பிக்கையுடனும் விடாமுயற்சியுடனும் மக்கள் சேவையில் படிப்படியாக வளர்ந்து, ஒரு பெரும் விருட்சமாக நிழல்தந்து, உண்டிகொடுத்து, உயிர்கொடுத்து, *'அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையர் என்பும் உரியர் பிறர்க்கு'* என வாழ்ந்ததை அவருடைய தாயார் கண்கூடாகக் கண்டு பெருமை அடைந்தார்.

'பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்ததுவே' என்பதற்கு அமைய தான் பிறந்த மண்ணில் பல அபிவிருத்திகளையும், குடியிருப்புகளையும், நன்னீர்த் திட்டங்களையும் அமைப்பதற்குத் தன்னாலானமட்டும் பெருமுயற்சி செய்தும் பேராதரவு வழங்கியும் புங்குடுதீவின் பெயர் சிறக்க சகல வழிகளிலும் அரும்பாடுபட்டவர் இவர்.

அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் சகல அன்பர்களுக்கும் அன்னாரை இழந்து தவிக்கும் அவர் பிறந்த பொன்னாடாம் புங்குடுதீவுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

யாழ்ப்பாணம் (93098) சி.பொன்னம்பலமும் பிள்ளைகளும்.

கண்ணீர் அஞ்சலி

அமரர்

கந்தையா திருநாவுக்கரசு

(வடஇலங்கை சர்வோதய அமைப்பாளர்)

பொன்மனச் செம்மலே புங்கையின் மைந்தா!
புவனியுள்ளோர் போற்ற புரிந்தனை சமூக சேவை
பகுநிரை பசிபோக்க கற்பக தருவின் ஓலைதனை
– கனிவுடன் ஈந்தனை
போற்றிடும் நாடும் ஏடும் உன் புண்ணிய சேவைதனை
இன்று கன்றிழந்த பசுவினைப் போல்
– கதறுகின்றது எமதுள்ளம்.

அஞ்சலதிபர்கள், உபதபாலதிபர்கள்,
புங்குடுதீவு. (93108) அஞ்சலகங்கள்.

கண்ணீர் சிந்துகின்றது தீவகம்

யோகசுவாமியின் திருத்தொண்டரும், வட இலங்கை சர்வோதய அமைப்பாளரும், புங்குடுதீவு பெருங்காடு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரும், புங்குடுதீவு பெருங்காடு தெற்கு விவசாய சம்மேளனத் தலைவரும், பிரதேச செயலக மட்டச் சிறுவர் கண்காணிப்புக் குழு உபதலைவரும், சமூக சேவையாளருமாகிய

கந்தையா திருநாவுக்கரசு

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் சர்வோதய வாழ் மக்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். கிராமசேவகர் பதி முருகனை அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

17, சன்னாதிட்டி வீதி, *நியூ கல்யாணி நகையகம்,*
யாழ்ப்பாணம். (93110) *லயன் க. நித்தியானந்தன் குடும்பத்தினர்.*

மரண அறிவித்தல்

திருமதி முருகேசு அரியமலர்

நல்லூரைப் பிறப்பிடமாகவும் பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு அரியமலர் நேற்றுமுன்தினம் (05.10.2001) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் முருகேசுவின் (3ஆம் குறுக்குத்தெரு, கொழும்பு - 11) அன்பு மனைவியும், சுலாஜோதி (பிரான்ஸ்), மாலாஜோதி (பிரான்ஸ்), ஜோதிமனோகர் (லண்டன்), ஜோதிக்குமார், ஜோதீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
674, பருத்தித்துறை வீதி, ஜோதிக்குமார் (மகன்)
நல்லூர். (93103) சந்தியா மல்ரி கோட்யாட்

பாராட்டி வாழ்த்துகின்றோம்

கிழவிதோட்ட விக்னவிநாயகர் ஆலய பரிபாலன சபை – கிழவிதோட்ட சனசமூக நிலையம் – முன்பள்ளி

வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார இந்து கலாசார மாண்புமிகு அமைச்சர்

கே.என்.டக்ளஸ் தேவானந்தா

அவர்களுக்கும்

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பி. பிரதம அமைப்பாளருமான கௌரவ

கா.வே.குகேந்திரன்

(ஜெகன்)

அவர்களுக்கும்

கரவெட்டி பிரதேச சபையின் தலைவராக மாண்புமிகு அமைச்சரால் நியமனம் செய்யப்பட்ட கரவையின் மைந்தன்

திரு.தர்மராஜா ஜெயராசா

அவர்களுக்கும்

எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன், பிரதேச சபைத் தலைவரின் சிறந்த தன்னலமற்ற சேவைகள் மேலும் சிறப்புற வேண்டுமென்று பாராட்டி வாழ்த்துகின்றோம்.

- நிர்வாகத்தினர்,
கிழவிதோட்டம் விக்னவிநாயகர் ஆலய பரிபாலனசபை,
கிழவிதோட்டம் சனசமூக நிலையம்,
(93097) கிழவிதோட்டம் முன்பள்ளி.

பாராட்டி வாழ்த்துகின்றோம்

செல்வி நகுபரன் வைஷ்ணவி

2001 ஆம் ஆண்டின் தரம் ஐந்து புலமப்பரிசில் பரீட்சையில் நகுபரன் வைஷ்ணவி (யாழ்.புனித ஜோன் பொஸ்கோ) 135 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையையிட்டு அதிபர், ஆசிரியர்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். இவர் மேலும் கல்வியில் சிறந்து வளர வாழ்த்து கின்றோம்.

115, பருத்தித்துறை வீதி,
நல்லூர். (93118)

நா.பிரதீபன்
(மாமா)

கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன் செல்வன் வேல்செல்வன் அவர்களின்
அன்புத் தந்தையார்

மா. கோபாலபிள்ளை

அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள் கின்றோம்.

H.N.D.A. முதலாம்வருட
மாலைநேர மாணவர்கள் A.T.I.

(93123)

கண்ணீர் அஞ்சலி

வடஇலங்கை சர்வோதய அமைப்பாளரும்,
சிறந்த சமூக சேவையாளருமான

கந்தையா திருநாவுக்கரசு

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக் கும், சர்வோதய வாழ் மக்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதா பங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அமரரின் ஆத்மா சாந்தி யடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், உபதலைவர்,
உறுப்பினர்கள், செயலாளர், ஊழியர்கள்,
வேலணை பிரதேச சபை.

(C/18570)

கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் முன்னாள் தலைவரும்,
தற்போதைய வடஇலங்கை சர்வோதய பொறுப்பாளரும்,
சமூக சேவையாளனுமாகிய

அமரர் கந்தையா திருநாவுக்கரசு

அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபங்களை அன்னாரின் குடும்பத்தினருக்கு தெரிவித்துக்கொள்கின்றோம். அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின் றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
அங்கத்தவர்கள்,
புங்குடுதீவு - நயினாதீவு ப.நோ.கூ.சங்கம்

(C/18569)

சேக்கிழார் அடிப்பொடிகளின் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஒக.7

யாழ். பல்கலைக்கழகம் நேற்று கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்த தமிழகப் பேரறிஞர் சேக் கிழார் அடிப்பொடி அவர்கள் இன்று யாழ்ப்பாணத்தில் பல்வேறு நிகழ்வு களில் கலந்துகொள்ளவுள்ளார்.

இன்று காலை 8.00 மணிக்கு நாவலர் நினைவு மண்டபத்துக்கு விஜயம் செய்யும் அவர் அங்கு நாவலர் மண்டபத்தையும் பாடசாலை யையும் பார்வையிடுவார். 9.00 மணிக்கு நல்லூர் குருகுலத்துக்குச் செல்லும் அவர் 10.00 மணிக்கு நல்லூர் முரு கன் ஆலயத்தில் வழிபாடுகளில் ஈடு படுவார்.

மாலை 2.30 மணிக்கு திருநெல் வேலி சைவ வித்தியாவிருத்திச் சங்கத்துக்கும் மாலை 4.30 மணிக்கு நல்லூர் சிவன் கோயிலுக்கும் விஜ யம் செய்வார். (ம)

தென்னை மரத்தால் தவறி வீழ்ந்து படுகாயம்

யாழ்ப்பாணம்,ஒக.7

தென்னை மரத்தில் தேங்காய் பிடுங்க ஏறியவர் மரத்திலிருந்து தவறி வீழ்ந்து படுகாயமடைந்தார்.

கொடிகாமம் தவசிக் குளம் பகு தியில் நேற்றுக்காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் சிற்றம்பலம் கந்த சாமி (வயது 37) என்பவரே படுகாய மடைந்தவராவார். அவர் தற்போது யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (ம-15)

லயன்ஸ் கழக வைபவம்

யாழ்ப்பாணம்,ஒக.7

இணுவில் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் பிராந்தியத் தலைவரின் வருகை நிகழ்வு இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 10.30 மணிக்கு கே.கே.எஸ்.வீதி, இணுவிலில் உள்ள லயன் சி. இலகுநாதனின் இல் லத்தில் நடைபெறவுள்ளது.

லயன்ஸ் பிராந்தியத் தலைவர் ஆர். நடராசா இந்த நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளார். (ஐ-10)

சிறுவர் விளையாட்டு விழா

கோப்பாய்,ஒக.7

கோப்பாய் வடக்கு சமூக சேவை கர் சங்கம் நடத்தும் பாலர் பகல் விடுதி சிறுவர் விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கோப்பாய் சரவணப வானந்த வித்தியாசாலை விளை யாட்டு மைதானத்தில் நடைபெற வுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ். சிறுவர் நன்னடத்தை அதிகாரி திருமதி க. சிவராஜா கலந்து கொள் வார். (ஐ-72)

ராஜா யாழ்ப்பாணம்

இன்று மட்டும் பிரபுதேவா, சிம்ரன், மணிவண்ணன் நடித்த

டைம்

ஞாயிறு: 10.30, 2.40, 5.00 (மு.நே.)

நாளைமுதல்
விஜய், சிம்ரன் நடித்த
ப்ரியமானவளே

(C/18457)

நாகம்ஸ் சுன்னாகம்

இன்றுமுதல்
சரத்குமார், தேவயானி, விக்ரம் நடித்த

விண்ணுக்கும் மண்ணுக்கும்

(ரீல்ஸ்)
காட்சிகள்:- 11.00, 2.30 (புதியநேரம்)

(93122)

நாம் கூறும் நல்வாழ்த்துக்கள்

வண்ணை ஸ்ரீகாமாக்ஷி அம்பிகையின் திருவருள் துணையுடன் இன்று (07.10.2001) ஞாயிற்றுக்கிழமை நாச்சிமார் கோயிலடியில் நடைபெறுகின்ற

திரு. திருமதி அம்பலவாணர் ஜெயராமன் அவர்களின் சிரேஷ்ட புத்திரி

திருவளர் செல்வி சைந்தவி

அவர்களின் பூப்புப் புனித நன்னீராட்டு விழா மங்களகரமாகச் சிறப்புடன் நிகழ்ந்து, அவர் சகல கலைகளிலும் தேர்ச்சிபெற இறைவனைப் பணிகின்றோம்.

மனமுவந்து வாழ்த்துபவர்கள்:

மிருதங்க வித்துவான்
திரு.திருமதி வே.அம்பலவாணர் குடும்பத்தினர்
திரு.திருமதி அ. இரகுநாதன் (பெரியப்பா)
திரு.திருமதி ஜெயக்குமார்சந்தானலட்சுமி(பெரியமாமி)
செல்வி அ. சரஸ்வதி (சின்னமாமி)
செல்வன் அ.இராமச்சந்திரன் (சித்தப்பா)
செல்வன் அ.ஸ்ரீனிவாசன் (லண்டன் சித்தப்பா)
திரு.திருமதி த.நவனிதராஜா (லண்டன் அண்ணா)
திரு.திருமதி க.செல்வரத்தினம் குடும்பத்தினர்
திருமதி த.ஞானகலாவதி (பெரியம்மா)
திருமதி செ.யோகேஸ்வரி குடும்பம் (பெரியம்மா)
திரு.திருமதி செ.மகேஸ்வரன் (பெரியமாமா)
செல்வி செ. நிர்மலகுமாரி (சித்தி)
செல்வி செ. விக்கினேஸ்வரி (சித்தி)
திரு.திருமதி செ.ஸ்ரீமுருகன் (ஸ்ரீ மாமா)
திரு.திருமதி செ.ரவிச்சந்திரன் (அண்ணா)

(93121)

நன்றியோடு பாராட்டுகின்றோம்

யா/திருக்குடும்ப கன்னியர் மட மாணவி

செல்வி குமார் மரிய ஸ்பெல் மலா

புலமைப்பரிசில் பரீட்சையில் 149 புள்ளிகளைப் பெற்று உயர்ச்சிபெறக் காரணமாகவிருந்த கன்னியர் மட அதிபரையும், ஆசிரியர்களையும், ஊக்கம் கொடுத்த அனைவரையும் நன்றிகள் பல கூறி பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இல.36, 2 ஆம் குறுக்குத்தெரு,
பாஷையூர், யாழ்ப்பாணம். (93127)

- குடும்பத்தினர்.

பாராட்டி வாழ்த்துக்கள்

செல்வி ஐயம்பிள்ளை விஜியலதா

அவர்கள் யாழ்.பல்கலைக்கழகத்தின் 2001ஆம் ஆண்டு நேற்றைய பட்டமளிப்பு விழாவில் கலைத்துறையில் B.A. பட்டம் பெறும் செல்வி ஐ.விஜியலதா அவர்கள் மேன் மேலும் பட்டங்கள் பல பெற்று உயர் நிலையை அடைய வாழ்த்துகின் றோம்.

தம்பி
விஜியகுமார்

கன்னாகம். (93117)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

2001 ஆம் ஆண்டு 5 ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்தி, மெமோறியல் அன்னைக்குப் பெருமை சேர்த்த மாணவர்கள்

1. **செல்வன் பா.துஸ்யந்தன்** - 160 புள்ளிகள் (மா.நிலை22)
2. **செல்வன் வி.கம்சன்** - 157 புள்ளிகள்
3. **செல்வி மு.துளசி** - 141 புள்ளிகள்
4. **செல்வன் சி.லனுசன்** - 124 புள்ளிகள்
5. **செல்வி சி.நிரோஜா** - 120 புள்ளிகள்

ஆகியோரையும் அவர்களின் வெற்றிக்கு வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்கள் ஆகியோரையும் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின் றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்,
யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்
பாடசாலை, மானிப்பாய்.

(93116)

வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலையின் அருளாளர் அளவையூர்

அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவர்

அவர்கள் முதுகலைமாணி பட்டம் பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யா/மானிப்பாய் மெமோறியல்
ஆங்கிலப் பாடசாலைச் சமூகம்.

(93115)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்.பல்கலைக்கழகத்தின் 20 ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்ற யாழ்ப்பாணக் கல்லூரி மைந்தர்களான எனது நண்பர், நண்பிகளை வாழ்த்துவதோடு, இவர்கள் மேலும் பல உயர் பட்டங்களைப் பெற்று எமது கல்லூரிக்கு *(VADDU J.C)* பெருமை சேர்க்க வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக் கின்றேன்.

S.சுஜீதரன்
(உரிமையாளர்)
வலம்புரி ரேட்சென்ரர்,
காமதேனு தொழிலகம், நவாலி.

(C/18564)

மரண அறிவித்தல்

செல்லையா தெட்சணாமூர்த்தி

(ஓய்வுபெற்ற ஓவசியர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை - பளை)

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப் பிடமாகவும் கொண்ட செல்லையா தெட்சணாமூர்த்தி நேற்று(06-10-2001) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - நாகம்மா தம்பதி களின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சண்முகம் - முத்தம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற விஷ்ணுபாலாவின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற மார்க்கண்டு, திருமதி விஜெயலக்சுமி வேலாயுதபிள்ளை (அமெரிக்கா), வன்னியசிங்கம் (கனடா), ஸ்ரீகாந்தன் (கொழும்பு), திருமதி ஜெகதீஸ்வரி சிவானந்தன் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோ தரனும், காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை (மின் பொறியியலாளர்), மனோன்மணி, உஷா, சிவானந்தன் (சட்டத்தரணி, கொழும்பு), காலஞ் சென்ற கனகலிங்கம் (C.W.E.) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07-10-2001) ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

'பாலகிரி',
சைவப் பாடசாலை வீதி,
திருநெல்வேலி வடக்கு. (93126)

தகவல்:
திருமதி கமலாதேவி
கனகலிங்கம்.

சகல தமிழ் எம்.பிக்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்கனவே இந்த அரசமைப்புக் கவுன்ஸிலுக்கு ஒரு தமிழரை நியமிக்கும் வாய்ப்பை கூட்டணியின் வழிகாட்டலில் தமிழ்க் கட்சிகள் கோட்டை விட்டுவிட்டன.

இந்த அரசமைப்புக் கவுன்ஸிலுக்கு இலங்கைத் தமிழர், முஸ்லிம்கள், மலையகத் தமிழர் ஆகிய பிரிவினர் சார்பில் தலா ஒவ்வொரு உறுப்பினரும் -

சிறுபான்மைக் கட்சிகளின் சார்பில் ஓர் உறுப்பினரும் -

நியமிக்கப்படுவதற்கு 17 ஆவது அரசமைப்புத் திருத்தம் வழி செய்கின்றது.

இதன்படி நாடாளுமன்றத்திலுள்ள பெரிய கட்சிகளைத் தவிர்த்து, (பொது மக்கள் ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றைத் தவிர்த்து) ஏனைய சிறிய கட்சிகள் சேர்ந்து ஒருவரை அரசமைப்புக் கவுன்ஸிலுக்கு சிபார்சு செய்ய முடியும்.

அதாவது -

ஜே.வி.பி., சிஹல உறுமய, கூட்டணி, தமிழ்க் காங்கிரஸ், ரெலோ, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இ.தொ.கா., ஈ.பி.டி.பி. ஆகிய கட்சிகளும் சுயேச்சைக் குழு உறுப்பினர் குணசேகரம் சங்கரும் சேர்ந்து ஓர் உறுப்பினரை நியமிக்கமுடியும்.

இந்தக் கட்சிகளில் ஜே.வி.பி., சிஹல உறுமய ஆகிய இரு சிங்களக் கட்சிகளைத் தவிர, ஏனைய கட்சிகளின் உறுப்பினர்கள் தமிழர்கள் அல்லது முஸ்லிம்கள். அதாவது தமிழர்களே இந்த சிறுபான்மைக் கட்சிகளில் அதிக எம்.பிக்களைக் கொண்டிருக்கின்றனர். எனவே சிறுபான்மைக் கட்சிகளின் உறுப்பினராக ஒரு தமிழரே தெரிவு செய்யப்படிருக்கவேண்டும். ஆனால், ஆக பதினொரு உறுப்பினர்களைக் கொண்ட ஜே.வி.பி. - சிஹல உறுமய கூட்டு, ஒரு தீவிரவாத சிங்களப் போக்குடைய ஒருவரை இப்பதவிக்குத் தெரிவு செய்ய, கூட்டணி - ரெலோ - தமிழ்க்காங்கிரஸ் கூட்டு ஏகமனதாக இணங்கிப்போயிருக்கின்றது.

எங்கே ஈ.பி.டி.பி. விரும்பும் ஒருவர் தெரிவு செய்யப்பட்டு விடுவாரோ என்ற சிந்தனையில், ஜே.வி.பிக்கு இந்த உறுப்பினரைத் தெரிவு செய்யும் அதிகாரத்தைக் கூட்டணி தாரை வார்த்துள்ளது.

இப்போது தமிழர்களின் பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப்பட வேண்டிய பதவியையும் அப்படியே தாரை வார்த்துக்கொடுக்க கூட்டணி முனைப்பாக நிற்கின்றது.

ஏற்கனவே கூட்டணி சிபார்சு செய்த நபர் 1980 இற்குப் பின்னர் யாழ்ப்பாணத்துடன் தொடர்பேதும் அற்றவர்; சிங்களப் பெண்ணைத் திருமணம் செய்தவர். அவரது மகள் முறையான பெண்ணொருவர், இராணுவத்தில் கேணல் தரத்தில் பணிபுரிகின்றார். மருமகன் ஒருவர் வவுனியாவில் பிரிகேடியராகப் பணியாற்றுகின்றார். இந்தத் தொடர்புடையவரும், யாழ்ப்பாண சம்பந்தத்தை இழந்தவரும் எப்படி யாழ்.மக்களுக்காக - அவர்களின் நலனை கவனத்தில் கொண்டு - செயற்படுவாரென எதிர்பார்க்க முடியும்?

குடாநாட்டின் நிலைமையை - இங்கு நடக்கும் அத்துமீறல்களை - தேர்தல் தில்லுமுல்லுகளை - அடிப்படை மனித உரிமை மீறல்களை - உணர்ந்தவர்கள், அறிந்தவர்கள் தான் இந்தப் பதவிக்கு வரவேண்டும். அப்போதுதான் குடாநாட்டு மக்களுக்கு நியாயம் கிடைக்கும்.

அரசமைப்புக் கவுன்ஸிலில் இடம் பெறப்போகும் பெரும்பான்மை இனத்தவர்கள் மத்தியில் தமிழர் களின் நலனைத் தனித்து ஒருவராக அடித்துக்கூறி, எடுபட வைக்கக்கூடிய ஒருவரையே நாம் தெரிவுசெய்யவேண்டும்.

இத்தகைய ஒருவரைக் கட்சித் தலைவர்கள் மட்டும் கூடி தெரிவு செய்ய முடியாது.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றுகூடி, ஓரிடத்தில் இருந்து கலந்துரையாடி, பிரேரிக்கப்படும் ஒவ்வொருவர் குறித்தும் அலசி ஆராய்ந்து, சாதக பாதகங்களைச் சீர்தூக்கிப் பார்த்து முடிவு செய்யவேண்டும்.

ஒரு கட்சிக்குப் போட்டியாக இன்னொருத்தரை நிறுத்துகிறேன் என்ற வீம்புத் தனத்தை விட்டு, நல்ல ஒருவரை, கலந்துரையாடல், ஆலோசனை ஆகியவற்றின் மூலம் தெரிவு செய்வதற்கு கூட்டணியும் மற்றத் தமிழ்க் கட்சிகளும் முன்வரவேண்டும் - என்றார்.

(உ)

அங்கவீனர்களின் நலன்க்கருதி
சக்கர நாற்காலிகளை திருத்த
அரச அதிபர் நடவடிக்கை

வலி.வடக்கு, ஒக.7

யாழ்.மாவட்டத்தில் உள்ள அங்கவீனர்கள் உபயோகிக்கும் சக்கர நாற்காலிகளைப் பழுதுபார்த்துக் கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை யாழ்.அரசாங்க அதிபர் மேற்கொண்டுள்ளார்.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தின் நுண்கருத்திட்டதின் கீழ் ஜெய்ப்புர் நிறுவனத்தின் மூலம் இத்திருத்த வேலைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பழுதடைந்த சக்கர நாற்காலிகளை வைத்திருப்பவர்கள் தமது பகுதி கிராம அலுவலர் மூலமோ அன்றி சமூகசேவை உத்தியோகத்தர் மூலமோ தொடர்பு கொள்ளும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ-86)

ஊர்காவலர்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தானித்து அவர் விடுதலைப் புலி உறுப்பினராக இருக்கலாம் என்ற அச்சத்தில் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்.

பின்னர் அப்பகுதியில் தேடுதல் நடத்திய படையினர் அங்கிருந்து இறந்த இராணுவச் சிப்பாயின் சடலத்தை மீட்டனர். (ம-4)

சிப்பாய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிரனேட் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்தார்.

அதிஉயர் பாதுகாப்பு வலயத்தினுள் இருக்கும் இந்த முகாம்மீது புலிகள் மேற்கொண்ட இந்தத் தாக்குதல் தொடர்பாக இராணுவ உயர் வட்டாரங்கள் விசாரணைகளை மேற்கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-4)

புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியன இப்பட்டியலில் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்தத் தடை பிரகடனத்தின்படி - தடை செய்யப்பட்ட இயக்கங்கள் அமெரிக்காவில் நிதி சேகரிக்க முடியாது; அவற்றின் பெயரில் அமெரிக்காவில் உள்ள சொத்துக்களை அமெரிக்க அரசு முடக்கும்; இந்த இயக்கங்களின் உறுப்பினர்களுக்கு அமெரிக்காவுக்கு வருவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

எனினும் -

கடந்த செப்ரெம்பர் 11ஆம் திகதி அமெரிக்கா மீது நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்து உலகப் பயங்கரவாதத்துக்கு எதிராக அமெரிக்கா தொடுக்கவிருக்கும் போருக்கும், இந்தத் தடைசெய்யப்பட்ட இயக்கங்களின் பட்டியலுக்கும் தொடர்பில்லை என்றும் -

அமெரிக்கா தொடுக்கவிருக்கும் போர் தொடர்பான பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் விடுதலைப் புலிகளின் பெயர் இல்லை என்றும் -

சில செய்தி ஏஜென்ஸிகள் சுட்டிக்காட்டின. (உ)

இன்று

யாழ்ப்பாணம்,ஒக.7

சாவகச்சேரி லயன்ஸ் கழகம் கட்டாயக் கல்வி பிரசார தினத்தைபொட்டி இன்று நடத்தும் ஓவியப்போட்டி காலை 9.00 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.(ம)

தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் மத்தியில் இணக்கமான தீர்வு ஒன்று எட்டப்படாத நிலையில், இது விடயத்தில் முடிவு எடுப்பது நாளைவரை ஒத்தி வைக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

இவ்விடயம் சம்பந்தமான எந்த முடிவும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றுகூடி கலந்தாலோசித்து எடுப்பதாகவே அமையவேண்டும் - என்று ஈபிடிபியினரும், ஐ.தே.கட்சி எம்.பியான மகேஸ்வரனும் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்தப் பின்னணியிலேயே புதிதாக மூவரின் பெயர்களை தமிழர் கூட்டணி, ரெலோ, தமிழ்க் காங்கிரஸ் ஆகியன சிபாரிசு செய்திருக்கின்றன.

அரசமைப்புக் கவுன்ஸில் உறுப்பினர் பதவிக்கு இலங்கைத் தமிழர், மலையகத் தமிழர், முஸ்லிம்கள் ஆகியோர் சார்பில் ஒவ்வொரு பிரதிநிதிகளை, அந்தந்த இனத்தைச் சேர்ந்த எம்.பிக்களின் கலந்தாலோசனையுடன் பிரதமரும், எதிர்க்கட்சித் தலைவரும் இணைந்து நியமிக்க வேண்டும் என்று 17ஆவது அரசமைப்புத் திருத்தத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ)

செவ்வாய்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிலையில் பிரேரணையை வாக்கெடுப்புக்கு விடாமல், முதல் நாள் விவாதத்தின் போக்கை அவதானித்த பின்னர் ஜனாதிபதி தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு புதிய தேர்தலை அறிவிக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுவதாகக் கொழும்புச் செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது.

தற்போதைய நாடாளுமன்றம் தெரிவுசெய்யப்பட்டு புதன்கிழமையுடன் ஒருவருடம் பூர்த்தியடைவதால்-

அன்றைய தினம்தான் (அதாவது செவ்வாய் நள்ளிரவுக்குப் பின்னரே தான்) நாடாளுமன்றத்தைத் தன் விருப்பப்படி கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வரும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் -

நாடாளுமன்ற நிலைமை தனக்கு எதிரானதாகத் திரும்பினால், தான் பார்த்து வைத்துள்ள கூடநேரக கணக்குப்படி எதிர்வரும் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்றே ஜனாதிபதி நாடாளுமன்றைக் கலைப்பார் என வேறு வட்டாரங்கள் தெரிவித்தன.

(ம)

நம்பிக்கையில்லா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களில் சிலர் நம்பிக்கையில்லாப் பிரேரணையை நேரடியாக ஆதரித்து வாக்களிப்பர் என்றும் -

ஏனையோர், பிரேரணை நாடாளுமன்றில் வாக்கெடுப்புக்கு விடப்படும் போது அங்கு பிரசன்னமாகாமல் விடுவதன் மூலம் அரசின் காலை வாருவார்கள் என்றும் -

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் பெரும்பாலானவர்கள் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ள பொ.ஐ.முன்னணி நாடாளுமன்றக் குழுக்கூட்டத்தில் கலந்து கொள்ளமாட்டார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ம)

WALK - IN - INTERVIEW

POST OF INTERNAL AUDITOR

A Well experienced Internal Auditor Wanted to check all the Control Systems of the Company and report direct to the Managing Director.

Retired persons in good health too can apply.

POST OF RECEPTIONIST

A Young person between the age of 24 and 40 Years preferably conversant in spoken English is wanted.

Interview Between 10.00 a.m. and 2.00 p.m. on Sunday 7th and Monday 8th October, 2001.

'UTHAYAN'
361, KASTHURIYAR ROAD,
JAFFNA.

உன்
வாழ்க்கையில்
இறைவனை அனுபவிக்க
விரும்புகிறாயா?
இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்!
இந்தியாவிலிருந்து வருகைதரும்
வழிகாட்டிகளினால்
நடத்தப்படும்
இறைபிரசன்னம் நிறைந்த
தியானங்கள், வழிபாடுகள்.
உன் மனமாற்றத்தை விரும்பும்
இறைவன் உன்னை அழைக்கின்றார்.

ஊர்து அன்னைத் திருத்தலம்
தும்பளை
07-10-2001
இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை.
(மதியபோசனம் கொண்டுவரவும்)
- யாழ்.மறை மாவட்ட குருக்கள் ஒன்றியம்.

இறைவனை அனுபவிக்க விரும்பும் ஓர் அடியார் குடும்பத்தினர்.

(93074)

எமது பிரமிட் &
FIVE STAR வீடியோ
CD வெளிமிடுகள்
☆ அள்ளித் தந்த வானம்
☆ மாயன்
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்
(C/18574)

BITSMANS
கல்வி நிறுவனம், மானிப்பாய்.
A/L 2002 கணித, விஞ்ஞான
PAPER CLASS
PHY :- ஜெயசீலன்
CHE :- மணியம்
C.MATHS :- A.பத்மநாதன்
BIO :- ஞானேந்திரன், தயாபரன்
ஆரம்பம்: 07.10.2001 செவ்.
மாலை 3.30மணி
(93083)

விற்பனைக்கு
அச்சு இயந்திரம், (சைனா பிளேற்றிங்), அச்சுக்கூட எழுத்துக்கள், ஸ்ரப்ளர் மெசின் என்பன விற்பனைக்கு உண்டு. அச்சுக்கூட கத்தி தீட்டியும் கொடுக்கப்படும்.
இல.402, பிரதான வீதி,
(93067) யாழ்ப்பாணம்.

நாளை ஆரம்பம்
விக்னா கல்வி நிறுவனம்
A/L DAY CLASS
TAMIL
திரு.குழந்தை (8-9)
H/C
திரு.பத்மராஜா (7-8)
(08-10-2001)
தொடர்ந்து அனைத்துப் பாடங்களும் நடைபெறும்.
(93096)

வானொலி, தொலைக்காட்சி கலைஞர்கள்
இணைந்து வழங்கும்
சோக்கெல்லோ சண்முகம் குழுவினரின்
வில்லடிப் பாட்டு
விடயம்:- 1.சக்தியின் மகிமை
2. கவிராஜன் கதை
3. கண்மணியாள் காதை
எதிர்வரும் நவராத்திரி உற்சவத்தை முன்னிட்டு 17-10-2001 முதல் 26-10-2001 வரை நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.
முதல் மூன்று நாள்களும்
தெல்லிப்பழை துர்க்காபுர தேவஸ்தான அறங்காவலர் சபையினரின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.
எமது நிகழ்ச்சியினை நடத்த விரும்புவோர் தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:
பொ.உமாமகேஸ்வரி,
சிவப்பிரகாசபுரம்,
ஏழாலை மேற்கு,
கொழும்பு தொலைபேசி. சுன்னாகம்.
தா.சண்முகநாதன்,
074-815009
(92919)

மரண அறிவித்தல்

கந்தையா திருநாவுக்கரசு

(வட இலங்கை சர்வோதய பொறுப்பாளர், அறங்காவலர்)

சர்வோதய நிலையம், புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா திருநாவுக்கரசு 03-10-2001 புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07-10-2001) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் கேரதீவு மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செல்வி க.புஷ்பமணி
(சகோதரி)
செல்வி பொ.யமுனாதேவி
(நிலையப் பொறுப்பாளர்)

3ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

(93081)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது மணிமனையில் 07.10.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.